Vol. 7. No 37. 11th October 1936. Price 2 As Regd. No 251

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY

18718

தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து வரும் காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு.

வருட சந்தா ரூபா 6. சிலோனுக்குத் தனிப்பிரதி 14 சதம். மலாய் நாடுகளுக்கு தனிப்பிரதி 15 காசு. வெளிநாடுகளுக்கு ரூ. 10

அடைவதற்கு இயற்கையான
விருப்பம்

வுட்வர்ட்ஸ்
கிரைப் வாடர்

குழந்தைக்கு
ஆரோக்கியத்தை தரும்

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND

அன்னியர்களுக்கு ஆசை காட்டி யழைக்கும் நாடாகவே இந்தியா எக்காலத்திலும் இருந்திருக்கிறது போலும். பல்லாயிர வருஷங்களுக்கு முன் ஒரு தடவை அராபிய ராஜ்யம் ஹிந்துஸ்தானத்தில் அநேகமாய் ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது. ஆனால் அராபியப் பூண்டே இந்தியாவில் நிலையாமல் போவதற்கு மூலகாரணமானவள்....

நாரீ திலகம்

சி. அலமேலு.

—"மணி"

காலீப் ஊலாத்தின் சேனாபதியான காஸிமுக்கும் ஸிந்து தேச அரசனான ராஜாதி ராஜனுக்கும் யுத்தம் நடந்தது. அராபிய வீரர்கள் ஹிந்துக்களைப் பலவிடங்களில் முறியடித்தனர். ஸிந்து நதி ஹிந்துக்களின் ரத்த வெள்ளமாக ஓடிற்று. இரவு முழுவதும் அன்னியனின் தீக்கிரையான ஹிந்து நகரங்கள் செவ்வொளி பரப்பின. காஸிம் ராஜாதி ராஜனின் தலைநகரையே முற்றுகையிட்டுப் பிடித்துவிட்டான். பிரமபுரத்தில் நடந்த கோரமான யுத்தத்தில் ராஜாதி ராஜனும் அவனுடைய இரு குமாரர்களும் காஸிமின் வாளுக்கிரையாகி வீர சுவர்க்கம் அடைந்தனர். ஹிந்துக்களில் ஆண்கள் ஒருவரும் மிஞ்சி நிற்கவில்லை. ஸ்திரீ ஜனங்களைமட்டும் காஸிம் சிறைப் பிடித்தான்.

இப்படிச் சிறைப்பட்டவர்களில் ராஜாதி ராஜனின் ஏக புதல்வியும் ஒருத்தி. அவள் பெயர்—காரணப் பெயர்மட்டுமல்ல; இயற் பெயரும்—நாரீ திலகம். காஸிம் அவளழகைக் கண்டு சொல்லொணாத வியப்புற்றான். காலீப் ஒருவருக்கே அவள் தகுந்தவள் என்று மதித்தான். ஸிந்து தேசத்துச் சூறையில் அகப்பட்ட பொன், வெள்ளி, தந்தம், நவரத்தினங்கள் முதலிய பலரகமான கணக்கிட முடியாத தனங்களுடன் நாரீதிலகத்தை நூறு குதிரை வீரர்கள் புடைசூழப் பாக்தாத்துக்கு அனுப்பி வைத்தான்.

நாரீதிலகம் பாக்தாத் நகரம் சென்றடைந்தாள். அவளைக் கண்ட காலீப் ஊலாத் திற்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. அவ்வளவு அழகுள்ள ஸ்திரீ இப்புவியிலே உண்டு என்று அவன் கனவிலும் கருதியதல்லை. அவளுடன் வந்த அளவற்ற தனங்களையும்விட அவளே மேலான பொக்கிஷம் என்று அவனுக்குத் தோன்றிற்று. வீரர்கள் காவலில் அடிமையாக வந்த நாரீ திலகத்தை விடுவித்துத் தன் சபையிலேயே எல்லோருக்கும் எதிரில் தான் அவளை மணந்து கொண்டு பட்டமகிஷியாகச் செய்து விடுவதாக வாக்களித்து, அவள் சம்மதத்தை வேண்டினான். ஆனால், நாரீதிலகம் வாய் திறக்கவே யில்லை. வார்த்தைகூடப் பேசவில்லை. அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகக் காலந் தள்ளினாள். அவளைக் கண்ட நாள் முதல் ஊலாத்துக்கு ஊண் உறக்கம் சரிவரக் கிடையாது. அவளைக் "கண்ணிமைத்துக் காண"க்கூட அவனுக்கு மனமில்லை. அவள் தன்முன் இல்லாத நாழியெல்லாம் வீணென்று, ராஜ்யக் கவலைகளை யறவே ஒழித்துவிட்டு நாரீதிலகமே ஞாபகமாக, காமக் கனவில் மூழ்கினான். அவளை எல்லோருமறியக் கைபிடித்துக் கலியாணஞ் செய்துகொண்டு தன் பட்டமகிஷியாகச் செய்து விடுவதாகத் தனக்குத் தெரிந்த எல்லாத் தெய்வங்களின்பேரிலும் ஆணையிட்டுத் தந்தான் காலீப்.

பதினோராம் நாள் நாரீதிலகம் ஊலாத்தின் வேண்டுதலுக்கிரங்கி வாய்திறந்து பதிலளித்தாள்.

"அரசே! உங்கள் பிரதான மகிஷியாக சகல சம்பத்துக்களுடன் ராஜபோகமாய் வாழ எனக்கும் சம்மதந்தான். ஆனால், (இங்கே அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது) தங்கள் சேனைத் தலைவனின் எச்சில் தங்களுக்கு"...என்று மேலே சொல்லமாட்டாமல் முகத்தை மூடிக்கொண்டு சற்று நிறுத்தியிருந்த அழுகையை மறுபடியும் ஆரம்பித்து விட்டாள்.

ஊலாத்துக்கு முகம் சிவந்தது. கோபத்தால் மீசை துடித்தது.

"அற்பப் பயல்! அப்படியா சமாசாரம்?" என்று உறுமினான். உடனே ஸிந்து ஹிந்துவுக்குத் தூதர்கள் பறந்தனர். காஸிம் கடிதங்கண்டவுடன் திரும்பி பாக்தாத் வரவேணும் என்று உத்திரவு அனுப்பினான். நாரீதிலகம் தன் அறையை விட்டு வெளிவாமல் அழுதுகொண்டே காலங் கழித்தாள். ஆனால் காஸிமுக்குக் காலீபின் திடீர் உத்தரவு ஆச்சர்யத்தை விளைவித்தது. ஸிந்து தேசத்தை அடக்கி வசப்படுத்திவிட்டு அவன் கங்கா நதிப்பிரதேசத்தைநோக்கி முன்னேறிக்கொண்டிருந்தான். திக்விஜயம் தடைபெற்றதுபற்றி அவனுக்கு மஹா வருத்தம். தக்க தலைவன் அங்கில்லாவிட்டால் கைப்பட்ட ஸிந்து ராஜ்யம் நழுவிவிடுமே

காலீபின் உத்தரவை மீறமாட்டாமல், சேனைகளைக் கூடிய வரை பந்தோபஸ்தாக ஸிந்துவிலேயே நிறுத்திவிட்டுத் தனியாய்ப் பாக்தாத்துக்குப் புறப்பட்டான்.

நாட்கள் பல கழிந்தன. காலீபின் கொலையாளி வீரர்களில் இருபதுபேர் அவனை பஸ்ஸோராவில் சந்தித்துக் கொன்றுவிட்டனர். அவன் தலை தன் பாதங்களில் உருண்டபின்தான் ஊலாத்துக்கு மனம் நிம்மதியடைந்தது. நாரீதிலகத்துக்கும் தனக்கும் குறுக்கே இனி யாருமில்லை என்று காலீப் பரம சந்தோஷமடைந்தான். நல்ல ஆடை ஆபரணங்களை யணிந்து கொண்டு நாரீதிலகத்தை நாடி அந்தப்புரம் சென்றான்.

இதற்குள் அந்தப்புரத்தில் நாரீ திலகத்துக்கும் காஸிம் கொலையுண்டிறந்த செய்தி எட்டிவிட்டது. அவள் ஸர்வ பூஷணாலங்கிருதையாகக் காலீபின் வருகையை எதிர்பார்த்திருந்தாள். காலீப் காமப் பித்தம் தலைக்கேறி மயங்கி அவள் வனப்பிலீடுபட்டுப்பேச மாட்டாது இரண்டு விநாடி தடுமாறினான். பின்னர்,

"ஹே ராஜகுமாரி! உனக்குத் தீங்கிழைத்த காஸீமைத் தொலைத்துவிட்டேன். இனி நீ கவலைப்படாதே. உன் ஸர்வாபீஷ்டத்தையும் நான் நிறைவேற்றி வைக்கிறேன். என் காதல் கரைகடந்தது. இனி நீ என்னைக் கலியாணஞ் செய்துகொள்ளத் தடையேது சொல்லுவாய்? என்றான்.

நாரீதிலகம் கம்பீரமாய் முகத்தில் புன்னகை தவழ,

"நான் ஹிந்து; ராஜபுத்ர ஸ்திரீ" என்றாள். அவள் வார்த்தைகளின் உண்மையர்த்தம் காலீபுக்கு உடனேபுரியவில்லை. நாரீதிலகம் மேலும் சொன்னாள்:

"நான் ராஜபுத்திரர்கள் வம்சத்தில் வந்தவள். அற்ப மனிதனான உன்னை மணந்துகொள்வேனென்று நினைத்தாய்? என் தகப்பனையும் சகோதரர்களையும் காஸிம் பிரமபுரத்தில் வெட்டி வீழ்த்தினான். நான் அதற்கு வஞ்சம் தீர்த்துக் கொண்டேன். உண்மையில் காஸீம் என்னை ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை."

சிரித்தபடியே தன் உடையில் மறைத்துவைத்திருந்த ஒரு சிறு ஈட்டியால் குத்திக்கொண்டு நாரீ திலகம் காலீபின் எதிரிலேயே பிராணனை விட்டுவிட்டாள்.

நாரீதிலகம் பாக்தாத்தில் ஆரம்பித்த வஞ்சத்தை ஹிந்துஸ்தானத்தில் அவளுடைய காதலனான உதய ராஜன் என்னும் ஸிங்கைய ராஜகுமாரன் முடித்துவைத்தான். காஸிமுக்கு அப்புறம் தலைவனில்லாது தத்தளித்த அராபியச் சேனைகளை உதய ராஜன் பல இடங்களில் முறியடித்துச் சிதைத்துப் பாரசிகத்திலும் அராபியாவிலுமே திக்விஜயம் செய்து ஹிந்து ராஜ்யத்தை பாக்தாத்வரையில் பரவச் செய்தான். கடைசியில் தன் பரந்த ராஜ்யத்தைத் தன்னுடனிருந்து ஆளுவதற்கு நாரீதிலகம் இல்லாததால், அலுப்புற்று ராஜ்ய பாரத்தைத் தன் தம்பியிடம் ஒப்படைத்துவிட்டு மனச் சாந்தியை நாடிக் காடுகளிலே தவம் செய்யப் போய் விட்டான் என்று சொல்லுவர்.

தென்னிந்தியப் பிரமுகர்கள்

ராஜாபஹதூர்

ஜி. கிருஷ்ணமாசாரியார்

(கே. எஸ். ஆர்.)

சநாதன தர்மத்தில் நம்பிக்கை

ராஜாபஹதூர் கிருஷ்ணமாச்சாரியார இத்தேசம் முழுவதும் பிரசித்தி பெற்றவர. ஹைதராபாத் சமஸ்தான உத்தியோகத்திலிருந்து பென்ஷனுடன் விலகிய பின்னர் இப்பெரியார் இத்தேச அரசியலிலும் பெரிதும் ஈடுபட்டார். சமீப வருஷங்களில் நம் ஹிந்து சநாதன தர்மத்திற்குச் சில தீங்குகள் இழைக்கப்பட்டபோது, இவர் அவற்றை ஸஹியாமல் மும்முரமாக எதிர்த்தார். இவ்வாறு சநாதன தர்ம சம்ரக்ஷணத்திற்காக இவர் நம்பியதை சில பத்திரிகைகள் பரிகசித்து ஹாஸ்ய ரீதியில் எழுதி வந்தபோதிலும், அதனால் இவருடைய பெருமைக்குப் பங்கம் சிறிதும் ஏற்பட்டதில்லை இவர் இந்த வசை மொழிகளையாவது வேடிக்கைப் பேச்சுகளையாவது சிறிதும் கவனிக்காமல், தமக்குத் தோன்றியவாறுதேசியக்ஷேமத்திற்காக உழைத்து வந்தார். இவர் ஒருபோதும் தம்மை அவதூறு செய்யும் பத்திரிகைகளுக்கேற்ப வழியை அனுசரித்தது கிடையாது. இவர் சதா சநாதன தர்மத்தையே தெய்வமெனக் கொண்டாடிவந்தார். சநாதன தர்மத்திற்குப் பங்கம் விளைந்தால் இத்தேசத்திற்கும் பெருத்த தீமை சம்பவிக்கும் என்பது இவரது துணிவு. சநாதன தர்மப்படி ஹிந்துக்கள் அனுஷ்டிக்கும் சில முறைகள் தற்காலத்திய நவீன சாஸ்திரவாராய்ச்சிகளுக்கேற்ப இருக்கின்றன என்பது குறிப்பிடவேண்டிய தவசியம். நமக்கு மேனாட்டினருடன் ஏற்பட்ட பழக்கம் காரணமாக நாம் இப்போது அவர்களையே எதற்கும் அடிமைகள்போல் பின்பற்றி வருகின்றோம். இவர் போன்ற பெரியவர்களுக்கு நமது பழக்கங்களை விட்டுவிட்டு பிற வழக்கங்களை அனுசரிப்பதால் நாம் நமது மதத்தை இழிவுபடுத்துகின்றோம் என்பது அதி தீவிரமான துணிபாகும். ஒவ்வொரு தேசத்திலும் அவைகளின் சீதோஷ்ணம் முதலிய ஸ்திதிகளுக்கேற்ப ஆசாரங்கள் அமைந்திருக்கின்றன. எங்கும் சமூகச் சீர்திருத்தம் சிறிது அவசியம் என்றாலும் அவை அவசரமாக அவசியம் ஏற்படுவதற்கு முன்பாகவே கொண்டு வரப்படுகின்றன. சமூகச்சீர்

செய்வதன் மூலம் சிலர் பிராபல்யத்தைச் சம்பாதித்துக் கொள்கின்றனர். ராஜா பஹதூர் கிருஷ்ணமாசாரியாரைப் போன்ற சநாதனிகள் விஷயத்தில், கக்ஷியின் கொள்கைகளை நிஷ்பக்ஷபாதமாக ஆராய்ந்து வெகு பத்திரிகைகள் எழுதாவிடினும் அவர்கள் பின் வாங்கவில்லை; பலருடைய சிரிப்பினால் இவர்களது கக்ஷி சிதைந்துவிடவில்லை.

ஆரம்பத்திலேயே உருதுபாஷையில் சமர்த்தர்

ராஜா பஹதூர் கிருஷ்ணமாச்சாரியார் தஞ்சை ஜில்லா மன்னார்குடியில், கோபாலாச்சாரியாரின் புத்திரராக 1867-ம் வருஷம் அக்டோபர் மாதம் 30-ம் தேதியன்று பிறந்தார். மன்னார்குடி வெஸ்லியன் மிஷன் ஸ்கூலிலும், நேடிவ் ஹைஸ்கூலிலும்படித்து 1881-ல் 'எப். ஏ.' வகுப்பிற்காக இவர் கும்பகோணம் காலேஜில் சேர்ந்தார். இச்சமயம் இவரது பிற்கால வாழ்க்கையை உருப்படுத்திய சம்பவம் ஒன்று நடந்தது; ஆனால் இது அச்சமயம் வெகு சாதாரணமாக மதிக்கப்பட்டது. உருது, பெர்ஸியன் பாஷைகளைத் தனிமையாகப் படித்து அவற்றில் மிகவும் ஈடுபட்ட ஒரு நண்பரை இவர் சந்தித்தார். நண்பருடைய ஆலோசனைக்கிணங்கி, இவர் உருது பாஷையைத் தாமும் கற்க வாரம்பித்து, சொற்ப மாதங்களுக்குள் சமர்த்தராகி விட்டார். இதே பாஷையை இவர் தமது 'எப். ஏ.' பரீக்ஷைக்கு இரண்டாவது பாஷையாகவும் எடுத்துக்கொண்டார். இது காரணமாக இவர் மற்ற பாடப் பகுதிகளை அலக்ஷியம் செய்ய நேர்ந்தது. கும்பகோணம் கலாசாலைத் தலைவராகவிருந்த ராய்பஹதூர் கோபாலராயர் இவரை ஸீனியர் வகுப்பிற்கு உயர்த்த மறுத்துவிட்டார். உடனே இவர் நாகப்பட்டணம் ஸெயிண்ட் ஜோஸப் கலாசாலையில் சேர்ந்தார்; அங்கும் பிரயோஜனம் ஏற்படவில்லை. 1883-ம் வருஷாரம்பத்தில் அக் கலாசாலை திருச்சிநாப்பள்ளிக்கு மாற்றப்பட்டபோது இவர் அதைப் பின் தொடர்ந்தார். ஸீவல் பாதிரி இவரது விஷயத்தில் சிரத்தைகொண்டு இவருக்கு மட்டுமே உருதுபாஷையைப் போதிக்க ஒரு முன்ஷியை ஏற்பாடுசெய்தார். பின்பு காலக்கிரமத்தில் இவர் 'எப். ஏ' பி. ஏ' பரீக்ஷைகளில் தேறினார். மேற்கொண்டு என்ன செய்வது எனும் பிரச்னை எழும்பிய போது ஸீவல் பாதிரியும், ஜின் பாதிரியும், இவருக்கு நெருங்கிய பந்துவும் திருச்சினாப்பள்ளி வக்கீல்கள் தலைவராகவும் பிரகாசித்த ஸ்ரீமான் சிங்கம் அய்யங்காரிடம் (ஜெஸூட் பாதிரி சங்க சட்ட ஆலோசகர்) சிவில் சர்விஸ் பரீக்ஷைக்காக இவரை இங்கிலாந்திற்கு அனுப்புமாறு சொன்னார்கள். அக்காலத்தில் சமுத்திர யானத்திற்கு அவரும் இவருடைய தகப்பனாரும் சம்மதிக்கவில்லை.

பிறகு இவர் சென்னைக்குச் சென்றார். அங்கு ஸிவில் இன்ஜினியரிங் காலேஜ் பிரின்ஸிபாலான கேப்டன் லவ்என்பாரை நேரில் பேட்டிகண்டார். அவர் இவரைத் தமது கலாசாலையில் நேராக "பீ. ஸி. ஈ" வகுப்பிலேயே எடுத்துக்கொள்வதாகவும் சம்மதித்தார். இது இவருடைய பிதாவிற்குப் பிடிக்கவில்லையாதலால், சட்ட சாஸ்திரத் துறையை இவர் நாடவேண்டியதாயிற்று; ஆனால் அப்போது நாட்கள் ஆகிவிட்டன. ஸீவல் பாதிரி ஆங்கில இலக்கியத்தைப் பிரதானமாக எடுத்துக்கொண்டு 'எம். ஏ' பரீக்ஷைக்கு ஆஜராகும்படியும், கலாசாலைப் பள்ளிக்கூட வகுப்புகள் சிலவற்றிற்குத் தினம் 2-மணி காலம் சாஸ்திர பாடம் போதிக்க வேண்டுமென்றும், அதற்காகத் தாம் மாதம் இவருக்கு ஊதியம் கொடுப்பதாகவும் சொன்னார். இச்சமயம் ஆசிரியர் பி. தி. ஸ்ரீநிவாஸய்யங்காரும் கலாசாலை உபாத்தியாயராகவிருந்தார். இவ்விருவர்களும் "எம். ஏ" பரீக்ஷைக்காகத் தயார் செய்துவந்தனர். மறுவருஷாரம்பத்தில் இவரது பிதா இவர் சட்ட கலாசாலையில் சேரவேண்டுமென்று பிடிவாதம் செய்யவே, இவர் அங்கு படித்து கிரமப்படி 'பி. எல்' பரீக்ஷையிலும் தேறினார். திவான்பஹதூர் ராமச்சந்திரராவ் ஸாஹேபும், சேலம் ராமசாமி முதலியாரும் இவரது விடைகளை மிகப் பாராட்டினர். இதே காலத்தில் சென்னை ராஜதானியின் நிர்வாக ரிபோர்ட்டை எழுதி வந்த டாக்டர் மக்லீன், புரொபஸர் சேஷகிரி சாஸ்திரியார் மூலம், அதன் உருது பகுதியை எழுத உதவவேண்டுமென்றும், பின்பு இவரை டிபுடி கலெக்டர் ஸ்தானத்திற்கு உயர்த்துவதாகவும் வாக்குறுதி கொடுத்தனுப்பினார். சட்ட சாஸ்திரத்தில் ஏற்பட்ட அளவு கடந்த அபிமானத்தினால் இவர் இதற்கு இசையவில்லை.

பின்பு இவரது குடும்ப சிநேகரான ஸர் சுப்பிரமணிய அய்யர், தம் கீழ் ஏற்கெனவே இருவர் இருப்பதுபற்றி, இவரை மிஸ்டர் இ. நார்ட்டன்கீழ் அப்ரண்டிஸாக விருக்கும்படிச் சொன்னார். மிஸ்டர் நார்ட்டன் தான் இவரை ஹைதராபாத்திற்குப் போய் தொழில் நடத்தும்படிச் சொன்னவர். இவருடன் நவாப் டாக்டர் ஸர் அமீன் ஜங் பஹதூரும் ஒரு அப்ரண்டிஸாகவிருந்து வந்தார். உருது பாஷையில் இவருக்கிருந்த பயிற்சி இவ்விருவர்களும் தற்போதும் அத்தியந்த நணபர்களாகவிருந்து வருவதற்கு உதவியது.

ஹைதராபாத்தில் வக்கீல் தொழில்

ஹைதராபாத்தில் தொழில் நடத்த வந்தகாலத்தில், இவருக்கு ஒருவரையும் தெரியாது. இதையும் தமக்கு அங்கு சம்பவித்த மலேரியா ஜுரத்தையும் சிறிதும் பாராட்டாமல், தம் தொழிலில் முன்னணிக்கு வருவதற்காக இவர் சதா முயற்சித்து வந்தார்.

ஆரம்பத்தில் இவர் "மேதி ஹாஸன் துண்டுப் பிரசார" வழக்கில் மிஸ்டர் இன்வராரிடி என்பாருடன், மிஸ்டர் நார்ட்டனுக்கு எதிர்தரப்பில் ஆஜரானார். மற்றுமொரு சமயம் மிர்ஸா ஸபிட் ஆலி என்பார் தமது பிள்ளைகள்மீது கிரிமினல் பிராதைத் தொடர்ந்தபோதுஇவர் நார்ட்டன் ஜூனியராக, அலகாபாத் பாரிஸ்டர் ஸர் வால்டர் கால்வினுக்கு எதிராகப் பேசினார். மிஸ்டர் நார்ட்டன் இவரை நிஜாமின் அந்தரங்கக் காரியதரிசியான நவாப் ஸெர்வர் ஜங் பஹதூரிடம் அறிமுகமாக்கி வைத்தார்; நவாப் பஹதூரின் ஆலோசனைக்கிணங்கி நிஜாம் இவரை ஸாலர்ஜங் எஸ்டேட்டுகளின் சட்ட ஆலோசகராக நியமித்துக்கொண்டார். முதலாவது ஸர் ஸாலர் ஜங் காலமானபோது அவருக்குக்கடன் ஏராளமாக விருந்தது; இவர் அவற்றையெல்லாம் அதி அனுகூலமாகத் தீர்த்து வைத்தார். இதனால் இவரிடம் நிஜாமிற்குத் திருப்தி ஏற்பட்டது; இவருக்கு சன்மானம் செய்ததுமல்லாமல், இவரைத் தமது வக்கீல்களுள் ஒருவராகவும் வைத்துக்கொண்டார். ஆரம்ப காலத்தில் இவருக்கு இவ்வாறு கிடைத்த வருவாய் இவருக்கு எதிர்பாராத மகிழ்ச்சியைத் தந்தது.

பின்பு ஒரு சமயம் ஹைதராபாத் ஹைகோர்ட்டில் ஹிந்துசட்டப்படித் தீர்ப்புகூற சாஸ்திரி பதவியைப் புதிதாக ஏற்படுத்தியபோது நவாப் ஸெர்வர் ஜங்பகதூர் இவரை நியமிக்கக் கருதினார். ஆனால் கடைசியில் சாஸ்திரி ஸ்தானத்திற்குப் பதிலாக ஜட்ஜியாக ஒரு ஸீனியர் ஹிந்து உத்யோகஸ்தர் நியமிக்கப்பட்டார். இவ்வாறு, தொழிலை ஆரம்பித்த ஒரு வருஷகாலத்திற்குள்ளாகவே இவர் அதன் உச்சியை சமஸ்தானத்திலும், பிரிட்டிஷ் எல்லையிலும் எட்டிவிட்டார். 1904-ல் ரெஸிடெண்டு ஸர் டேவிட் பார் இவருக்கு "கவர்ன்மெண்ட் ப்ளீடர்," "பப்ளிக் ப்ராஸிகியூடர்" பதவியை அளித்தார். அவர் இவரிடம் விசேஷ ப்ரீதி பூண்டிருந்ததனால் இவர் மறுக்க இயலவில்லை.

சட்ட இலாகாவில் பெரிய பதவிகள்

இதே சமயம் இவர் சமஸ்தான லெஜிஸ்லேடிவ் கவுன்ஸில் மெம்பராகவும் நியமிக்கப்பட்டார். மூன்று தடவைகள் இவர் இந்த ஸ்தானத்தை அலங்கரித்தார். நிஜாம் கவர்ன்மெண்டினால் இவருக்கு அநேகம் முக்கிய வழக்குகள் கொடுக்கப்பட்டன. ஒருசமயம் கவர்ன்மெண்டார் இவரது சேவையைச் சிலாகித்துஎழுதினார். இவை காரணமாக இவரின் நட்பு ஏற்பட்டது. அவர் இவருக்கு "அட்வகேட் ஜனரல்" "லீகல் ரிமெம்ப்ரன்ஸர்" என்ற பெயர்களுடன் சட்ட ஆலோசகர் பதவியை இவருக்குக் கொடுத்தார். தமது சொந்தத்தொழிலை நடத்த அனுமதியுடன் இவர் இப்பெரிய பதவியை ஸ்வீகரித்துக்கொண்டார். சட்ட ஆலோசகராக இவர் சட்டசபையில் மெம்பரானார். அதன் காரியதரிசியாகவும் இவர் இதனால் இருக்க நேர்ந்தது. தமக்குக் குறிப்பிட்ட மூன்று வருஷகாலத்திற்குள் இவர் தமதுவேலையில் தீவிரமாக ஈடுபட்டதை. மஹாராஜா ஸர் கிஷன் பிரஸாத் பஹதூர் சிலாகித்து சட்ட சபையில் இவர் ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கியதாகவும், ஆகையால் இவரது ஸ்தானம் இவருக்கு நிரந்தரமாகக் கொடுக்கப்படவேண்டுமென்றும் எழுதினார். நிஜாம் இம்மொழிகளை அங்கிகரித்து இவரை அப்பதவியில் ஸ்திரமாக்கினார். சட்ட சபை சம்பந்தமாக இவர் நிஜாம் அனுமதியுடன் சில அனுகூல மாறுதல்களை விளைவித்தார்; இவர் சட்ட சபையை விஸ்தரித்து வெளியூர் வாசிகள் பிரதிநிதிகளை அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்தார். இதனால் அதிகார வர்க்கனத்தினரல்லாதாருக்கு அதிக ஆதிக்கம் ஏற்பட்டது. அரசாங்க அலுவல்களும் தடையின்றி நடந்து வந்தன; இதனால் ஜன உரிமைகளை அடக்கும் சட்டங்கள் பிறப்பது அசாத்தியமாகியது; உத்தியோகஸ்தர்களுக்கு அபிப்பிராயத்திற்கேற்ப ஓட் செய்யும் அதிகாரமும் இருந்தது.

உருதுவா? ஆங்கிலமா?

அப்புறம் இவர் சமஸ்தான சட்டங்களையும், அரசாங்க உத்திரவின்மூலம் அனுசரிக்கப்பட்டு வந்த சட்ட அனுஷ்டானங்களையும், இவைகளில் அநேகம் சுமார் 50 வருஷங்களுக்கு மேலாகவே வழங்கி வந்ததால் கோர்வையாக ஒழுங்குபடுத்தி வைக்க வேண்டும் என்ற பெரும் காரியத்தை மேற்கொண்டார். இவ்விஷயமாக சிலர் ஆங்கிலம்தான் தர்பார் அனுஷ்டிக்க வேண்டுமென்று சிரமப்பட்டனர். இவர் உருது பாஷைதான் இருக்க வேண்டுமென்று வாதாடி, நியாயவாதிகளுக்கும் நீதிபதிகளுக்கும் காலக்கிரமத்தில் உயர்ந்த மதிப்பு ஏற்படும் வழியைக் காண்பித்தார். பின்பு பிரிட்டிஷ் இந்தியா சட்டங்களைப் பின்பற்றுவதா அல்லது பழைய விதமாகவே சட்டங்களை ஒழுங்குபடுத்துவதா எனும் பிரச்னைஎழும்பியபோது இரண்டாவது வழியைத் தாமதித்துப் பின்பற்ற வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இவருக்கு இந்தத் தீர்மானம சிறிதும் திருப்தியை அளிக்கவில்லை; இரண்டாவது வழி

எவ்வாத் தோல் வியாதிகளையும் சிக்கிரமாய் ஆற்றும்படியானது.

நீ ரூபத்தை மாற்றும்படியான தோல் வெடிப்பினால் வருத்தப்பட்டால், உனக்கு வைத்திய சாஸ்திரம் குடிகூராவை (Cuticura) விடசிக்கிரமாய் நோய்தீர்ப்பது ஒன்றும் தரமுடியாது. இந்த மருந்து, தோல்வியாதிகளை அனேக காலமாகப் பார்த்துத் தீர்த்த வைத்தியரால் கண்டுபிடித்துச் செய்யப்பட்டது.

இந்த முறைகளைப்படித்து உபயோகிக்கவேண்டும்.

நோயிருக்கும் பாகத்தை, ராத்திரியிலும், காலையிலும், குடிகூரா சோப்புக்கட்டியால் (Cuticura Soap) வென்னீர் வார்த்துக் கழுவி, மெதுவாய் உலரத்துடைத்து குடிகூரா தைலத்தைத் (Cuticura Ointment) தடவவேண்டும். இந்த தின உபசரணை சொறி நமைச்சலைத் தணித்து, எரிப்பை உடனே நீக்கும். புண்ணாற்றி, நோய்தீர்த்து, சொஸ்தமாக்கும் குடிகூரா (Cuticura) தோல் வெடிப்புகளிலுள்ளே புகுந்துவிடும். அது கருமிப் புழுகளை அழித்து, நோய் உண்டாக்கும் பாஷாணத்தை வெளிப்படுத்தி சிலக்கும் புண்களை ஆற்றி, தோலுக்கு சுகமான வழியை உண்டுபண்ணி முழுதலும் சொஸ்தமாக்கும். முதல் தரம் பூசும்போதே சுகத்தால் பயனாகவரும் ஆனந்தம் உனக்கு ஆச்சரியக் களிப்பை உண்டாக்கும். குடிகூரா தைலமும் (Cuticura Ointment) குடிகூரா சோப்புக்கட்டியும் (Cuticura Soap) வாங்கி இன்றைக்கே உபயோகித்துப்பார்.

Cuticura
OINTMENT AND SOAP

குடிகூரா
தைலமும் சோப்புக்கட்டியும்

எந்த மருந்து கடைகளிலும், பஜார்களிலும் வாங்க அகப்படும்.

இவருடைய தலைமயிரின் அழகே அழகு ..
மிருதுவு, அடர்த்தி, பள பளப்பு

காரணம்? அதன் ஆரோக்கியம்

வாசனை தேங்காய் எண்ணெய்.
வறண்டு மங்கியுள்ள தலைமயிருக்கு டாம்கோ வாசனைத் தேங்காய் எண்ணெயேசிறந்தது; "பிசுக்குண்டு" பண்ணாமல் கூந்தலுக்கு ஆரோக்கியமும், பளபளப்புமூட்டும்.

லைம்ஸ் & கிளஸரின் (லெமன் க்ரீம்)

தலைமயிர் வளர்ச்சி குன்றி அழகும் குன்றி விடுகின்றதா? வாசனை நிறைந்த இந்த டானிக் க்ரீமைக் கொண்டு நன்கு தேயுங்கள்; கூந்தலை வளர்க்கும்; உதிர்தலைத் தடுக்கும்.



TOMCo

டாம்கோ விற்பனை இலாகா.
19-A, வாணியர் தெரு,
மதராஸ்.

இதர டாம்கோ கூந்தல் தயாரிப்புகள்: ஜெய் கூந்தல் தைலம், லோஷன் & பிரிலியண்டைன், வாசனை நிறைந்த ஔஷத கூந்தல் டானிக், கெட்டி பிரிலியண்டைன் முதலியன.

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்,
பம்பாய் & டாடாபுரம் TH 412

திருந்தால் ஹைதராபாத் சட்டங்களும் கோர்ட்டு நடவடிக்கைகளும் எளிதாக்கப்பட்டிருக்கும் என்பது இவரது துணிபு. சமஸ்தான சட்டங்கள் சில விஷயங்களைப்பற்றி இருக்கும்போதே பிரிட்டிஷ் இந்தியச் சட்டங்கள் உபயோகிக்கப்பட்டன இதனால் ஜனங்களுக்கு எது சரியான சட்டம் என்ற சந்தேகம் ஏற்படலாயிற்று. இவர் இச்சமயம் ஒரு புடுத்தரவழியைக்காண்பித்தார்; அதாவது சமஸ்தான சட்டங்களை, முதலாவது ஸர் ஸாலர்ஜங்விதித்தசில முக்கியக் கொள்கைகளிலிருந்து வழுவாமல், பிரிட்டிஷ் இந்திய சட்டங்களைத் தழுவச் செய்வது. இவர் காட்டிய வழிதான் இன்னும் அங்கு பாராட்டப்படுகின்றது.

சில முக்கிய விஷயங்கள் நிர்வாக இலாகா அதிகாரிகளால், நிஜாம் அதிகாரங்களையும் சட்டங்களையும் கவனியாமல் விசனகரமான விதமாக முடிவுசெய்யப்படவே, இவர் சுமார் 25 வருஷங்களாகவே நிஜாம்களால் வெளியிடப்பட்ட "பர்மன்"களை (உத்தரவுகளை) ஒன்று சேர்த்து வெளியிட்டார்; தமது உபயோகத்திற்காக நிஜாம் நிர்வாகத்திற்காக ஏற்படுத்திய சில பிரதான விதிகளை இவர் நிர்ணயித்துக் கொண்டார். இந்த சமஸ்தானத்தில் சட்ட ஆலோசகரிடம் இதர விஷயங்களும் வருவதுண்டு இதனால் இவர் சமஸ்தானத்திற்கு அரசியல் பொருளாதாரம்ஆகிய விஷயங்களைப் பற்றியும் ஆலோசனை சொல்லி வந்தார். நிஜாம் இவ்விஷயங்களைப் பற்றியெல்லாம் அடிக்கடி ஆலோசனைகள் இவரைக் கேட்டு வந்தார். ஆகவே, இவரது உழைப்பின் பலனாக அங்கு சட்டத்தைப் பின்பற்றவேண்டிய அவசியம் வெகுவாக உணர்த்தப்பட்டது.

நீதி இலாகாவையும் நிர்வாக இலாகாவையும் பிரிப்பது

சுமார் 30 வருஷங்களுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட விதிகளில் பல அமுலில் ஏற்கெனவே இருந்து வந்த சில சட்டங்களுக்குச் சில சமயங்களில் விரோதமாக விருந்தன பற்றி, நீதிமன்றங்களையும், நியாய இலாகாவையும் சீர்படுத்த வேண்டிய அவசியம் இவரது உத்யோகத்தின் ஆரம்பகாலத்திலேயேதெளிவாகியது. நிஜாம் மன்னர் இதற்கொப்பினர். ஆகையால் மன்னர் இவரையும் நியாய இலாகாக் காரியதரிசியாகவிருந்த நவாப் ஸர் நிஜாமத் ஜங் பஹதூரையும் ஒரு விவரமான திட்டத்தைத் தயார் செய்யுமாறு ஆக்ஞாபித்தார். காவேரி நீர்ப்பாசன விவாதத்தில் மத்யஸ்தராகவிருந்து அப்போது விலகிய ஸர் ஹென்ரி கிரிப்பின் என்பாரிடம் இதை ஒப்புவிக்க வேண்டுமென்று சிலர் முயற்சித்தனர். ஆனால் இவர் அவருடன் ஒத்துழைக்கச் சம்மதியாததனால் இம்முயற்சி வீணாயிற்று. இவ்விஷயமாக இவ்விருவர்களும் அநேகம் எதிர்ப்புகளுடன் சிலகாலம் போராட நேர்ந்தது. எதிர்பாராத விடங்களிலிருந்து எதிர்ப்பு எழும்பிய போதிலும் முடிவில் இவர்கள் ஒரு திட்டத்தைத் தயாரித்தனர். நீதி இலாகாவையும் நிர்வாக இலாகாவையும் தனிப்படுத்தவேண்டும் என்பது இவர்களது தீர்மானங்களுள் ஒன்றாகும். ஸர் ஜார்ஜ் வாக்கர் இவ்விஷயம் இந்தியா கவர்ன்மெண்டாரால் அனுசரிக்கப்படாததால், சமஸ்தானத்தில் ஒரு புதிய முறையைக் கையாளுவது தகாது என்று வாதாடினார். இவர்தாம் நிச்சயித்ததை விட்டுவிடவில்லை; ஸர் வாக்கருக்குப் பின்பு வந்த ஸர் ரெஜினால்டு கிளான்ஸியின் ஆதரவினால் இவர் அதை இறுதியில் நிறைவேற்றிவைத்தார். இவர் உத்தியோகத்திலிருந்து விலகியபின்பு இதை நீக்கிவிட சிலர் சிரமப்பட்டும், நல்ல வேளையாக அவர்களது பிரயாசை கைகூடவில்லை.

நீதி கமிட்டியின் தலைவர்

ஹைகோர்ட்டிலிருந்து அப்பீல்களை விசாரிக்க ஜுடிஷியல் கமிட்டியைச் சரியாக இங்கிலீஷ் ப்ரிவிகௌன்ஸில் மாதிரியாக ஒழுங்குபடுத்திய போது, ஸர் கிளான்ஸியும் ஸர் பரீடும் முல்க்கும் இக்கமிட்டியின் ஸ்திரமான தலைவராகவிருக்கும்படி வேண்டவே, இவர் அதற்கொப்பினர். இவர் உடனே பாக்கி நின்ற வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு, அனுஷ்டிக்கவேண்டிய வழியைப்பற்றிய ஒருசட்டத்தைப் பிறப்பிக்க வேண்டுமென்று ஆரம்பித்தார். இதனால் ஹைகோர்ட்டிற்கு மதிப்புக் குறையுமென்றும், இந்தக் கமிட்டி அந்தக் கோர்ட்டிற்கு மேலானதாகிவிடும் என்றும் சிலர் ஆக்ஷேபித்தனர். ஆனால் இவர் அனுஷ்டானத்தில் ஹைக்கோர்ட்டு மதிப்பு வளரும் என்பதையும் அதில் நம்பிக்கை ஏற்படுகிறது என்பதையும் நிரூபித்துக் காண்பித்தார். நிஜாம மன்னரும் தமது 'ஸார்ப்-இ-காஸை' தமக்கு வேறு வழிகள் இருந்தபோதிலும், வழக்கப்படிப் பணம் வசூல் செய்வதற்குக் கோர்ட்டில் தாவா செய்ய வேண்டும் என்பதை உத்தரவிட்டது கோர்ட்டில் ஏற்பட்ட நம்பிக்கையைக் கோஷிக்கிறது! இவர் இவ்வாறு நீதிக்கமிட்டியின் தலைவராகவிருக்கும்போது, பிரபல தேஷ்முக் ஒருவர் கீழ்க்கோர்ட்டுகளால் கொலைக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டார். இவ்வழக்கு இவர் முன்பும் இன்னும் இரண்டு இதர நீதிபதிகள்

(35-ம் பக்கம் பார்க்க)

வேர்க்கூர், சிரங்குகள்

முதலிய எல்லா சருமக்கோளாறுகள்—

கல்ஸானுவினால் அவற்றைக் குணப்படுத்துங்கள்

பிரவித்திபெற்ற வைத்தியரொருவர் எழுதுகிறார்:—

"கல்ஸானு மாத்திரைகள் மிக மேலானவை; எல்லாச் சரும நோய்களுக்கும் நான் அதைத்தவறாமல் குறித்துத்தருகிறேன்"

ஏன் இந்த வைத்தியர் கல்ஸானு மாத்திரைகளைக் குறித்துத் தருகிறார்? ஏனெனில், சருமக் கோளாறுக்கும், சொறி சிரங்குகளுக்கும் காரணம் ஆரோக்கியமற்ற சத்தில்லாத ஆகாரமே.

உங்கள் தேகத்திற்கு இரத்த புஷ்டி வேண்டும். உங்கள் இரத்தம் செழிப்புறுவதற்கு வேண்டிய எல்லாச் சத்துக்களும் கல்ஸானுவிலிருக்கின்றன. உங்கள் இரத்தத்தைச் சுத்தமாக்கிக் கொள்ளுங்கள்; உடனே உங்கள் சருமம் மீண்டும் ஆரோக்கியமடையும்.

ஆதலால்தான் நீங்கள் கல்ஸானு உட்கொள்ளத் தொடங்க வேண்டும். வேர்க்கூரும், சிரங்குகளும் ஒழிவது மட்டுமின்றி, நீங்கள் வலுவும், ஆரோக்கியமும் கூடப்பெறுவீர்கள்; ஏனெனில் கல்ஸானு சிறந்த வகையில் வலுவூட்டுகிறது. அது வயிற்றுப்போக்கையும், பலவீனத்தையும் அகற்றும்.

இன்றே மருந்து ஷாப்புக்குப்போய் ஒரு புட்டி கல்ஸானு மருந்திரைகளை வாங்கிக்கொள்ளுங்கள். உண்மையில் ஆரோக்யமனுபவிப்பீர்கள்.

Kalzana

மேலான ஆரோக்கியத்திற்கான உலோக உணவு

கைபடாமல் தயாரிக்கப்படுவது.



ஓர் காட்டிற்கருகாமையிலிருந்த ஒரு கிராமத்தில் வேதாந்தி யொருவர் பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். அவர், "உலகம் மாயை, நாமிருப்பது மாயை, நடப்பது மாயை..." என்றெல்லாம் சொல்லிக்கொண்டு வந்தார்.

திடீரென ஒரு புலி வந்தது. வேதாந்தி உடனே ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தார்.

கூட்டத்திலிருந்த ஒருவர் "எல்லாம்மாயை என்றீர்களே, இப்பொழுது என் ஓட்டம்?" என்றார்.

வேதாந்தி, "நான் ஓடுவதும் மாயைதான்" என்று சொல்லிக்கொண்டே ஓடினார்.

——

ராமு:—அடுத்த வீட்டுப் பையனுக்குக் காயம் பலமாகப் பட்டுவிட்டதாமே, நீங்கள் தான் வைத்தியம் செய்கிறீர்களோ? ரொம்பப் பணம் கிடைக்குமா?

டாக்டர்:—ஏன்?

ராமு:—அந்தப் பையனை என் பையன்தான் அடித்தான். அங்கிருந்து அதிகப் பணம் கிடைக்குமாகையால், எங்களுக்குப் 'பில்' அனுப்புகையில் இதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

——

இரண்டு திருடர்கள் ஒரு இரும்புப் பெட்டியிலிருந்து திருடினார்கள்.

முதல் திருடன்:—எவ்வளவு பணம் இருக்கிறதென்று பார்க்கலாம்.

இரண்டாவது திருடன்:—இப்போது என்ன அவசரம்? காலையில் பத்திரிகையில் பிரசுரமான பிறகு பார்த்துக்கொள்ளலாம்.

——

ஸர்க்கஸ் பார்க்கவந்தவர்:—இந்த யானை என்ன செய்யும்?

ஸர்க்கஸ்காரர்:— மேலே இருக்கும் அப்பெட்டியில் துதிக்கையால்பணத்தைப்போடும். ஒரு ரூபாய் கொடுங்கள். போடச்சொல்லுகிறேன்.

யானையும் ஒரு ரூபாயைப் போட்ட பின் பார்க்க வந்தவர்:—சரி, ரூபாயைப்பெட்டியிலிருந்து எடுக்கச் சொல்லும்.

"அதை இன்னும் யானைக்குக் கற்றுக் கொடுக்கவில்லை."

——

மனைவி:—திருடர்கள் இரும்புப் பெட்டியைத் திறக்கிறார்கள். ரிவால்வர் எங்கே?

கணவன்:—இரும்புப் பெட்டியிலிருக்கிறது.

——



சுமார் 300 வருஷங்களுக்கு முன் நடந்த ஜப்பான் உள்நாட்டுக் கலகத்தில் படத்தில் காணப்படும் போர்வீரன் அணிந்துகொண்டுள்ள போர்ச்சாதனங்கள் அணிந்துகொள்ளப்பட்டனவாம். அந்தக் கலக ஞாபகார்த்தமாகச் சமீபத்தில் நடைபெற்ற கொண்டாட்டத்தில் அவைகள் ஒரு போர்வீரனால் அணிந்துகொள்ளப்பட்டு அவன் ஜப்பானியர் பிரதம கோவிலுக்கு ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டான்.

ஒருவர்:— என்னுடைய சரித்திரத்தை நான் எழுதப் போகிறேன்.

அவர் சிநேகிதர்:— நான் உனக்கு நூறு ரூபாய் கடன் கொடுத்த தேதியைப்பற்றிச் சீக்கிரம் எழுது.

——

ஸலூனில் நாவிதர்.—அதோ ஒருவர் வருகிறார்.

புதிதாக வேலை கற்றுக்கொள்ள வந்தவர்:—நான் செய்து பார்க்கிறேன்.

"சரி, ஜாக்கிரதை, கையை வெட்டிக்கொள்ளப்போகிறாய்.'

——

இரவு 12-மணியிருக்கும். ஒருவன் தெருவில் வளைந்து வளைந்து போய்க்கொண்டிருந்தான். இதைக் கவனித்த ஒரு போலீஸ்காரன அவனை அணுகி விசாரித்தான்.

"பகல் வேளையில் வண்டிகள் ஜாஸ்தியாக வருகின்றன. ஆகையால் இப்பொழுதாவது இப்படிப் போகலாமென்றுதான்" என்றான் அவன்.

——

கூண்டில் நின்ற கைதி குறைந்தது பத்துத் தடவையாவது முன்பு தண்டனை பெற்றிருப்பான்.

மாஜிஸ்திரேட்:—நீ குற்றவாளியா? இல்லையா? என்ன சொல்லுகிறாய்.

கைதி "குற்றவாளிதான்" என்று கூறிவிட்டுச் சிறிது நேரம் கழித்து, "என் வக்கீல் வரட்டும். பிறகு வழக்கை நடத்கலாம்" என்றான்.

மாஜிஸ்திரேட்:— நீ இந்தக் கனவான் பையில் கைவிட்டுக் கொண்டிருக்கையில் தானே போலீஸார் பிடித்தனர். உன் வக்கீல் என்ன சொல்லப்போகிறார்?

கைதி:-அதைத்தான் நானும் அவருடன் கேட்க விரும்புகிறேன்.

——

இருவர் குடித்துவிட்டு ஒரு பாலத்கன்மேல் உட்கார்ந்து கொண்டிருந்தனர். ஒருவன் திடீரென்று தவறி ஆற்றில் விழுந்துவிட்டான். "அவன் எனக்கு நீஞ்சத் தெரியாது. காப்பாற்றுங்கள்" என்று கத்தினான்.

இரண்டாவது மனிதன் சாவதானமாக உட்கார்ந்து கொண்டு:—இப்பொழுது கற்றுக் கொள்ளலாமல்லவா?"

——

சங்கீத வித்வான்:—நான் என்னுடைய குரலைக் கூட இன்ஷ்யூர் செய்திருக்கிறேன்.

அவருக்குப் போட்டியாக வந்தவர்:—அந்தப் பணத்தை என்ன செய்தீர்கள்?

——

வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3. வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும் போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம்,

திருத்தணி, S. இந்தியா.

குளிர்ந்த அல்லது சூடான

HORLICK'S

ஹார்லிக்ஸ் 'பலவீனம்' ஏற்படாமல் பாதுகாத்து நாள் பூராவும் ஊக்கமளிக்கிறது.

த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது

பல்லவி

வநஜ நயனுடனி வலசிதிவோ—வாநி
மனஸுநதயலேதே—வாடு (வநஜ)

அனுபல்லவி

முனுபடி சரிதமுலனு விநியுன்னுவு
வனித ஸ்வபாவமோ—வெலயு ஸ்ரீ தேவராஜு (வநஜ)

சரணம்

ஒருல பாதலனு ஓர்வக யுண்டுடயே
பரம தர்மமனி பாகுக பல்குசு
வரதுடு ஆச்ரித வத்ஸலுடனி பேரே
தரணிஜா லோலுடு—த்யாகராஜார்ச்சிதுடு (வநஜ)

II

(பெண்ணே!)	
வாடு	—அவன்
வநஜ நயனுடு அனி	—செந்தாமரையிதழ்போன்ற கண்களையுடையவனுயிற்றேயென்று
வலசிதிவோ	—அவனிடம் ப்ரேமை கொள்ளுகிருயோ?
வாரு மனஸுந	—அவனுடைய மனத்தில்
தயலேதே	—தயை யென்பதில்லையே
முனுபடி சரிதமுலனு	—பூர்வத்திலேற்பட்ட அவனுடைய விருத்தாந்தங்களையெல்லாம்
விநியுன்னுவு	—நீ கேட்டிருக்கிருய்(இருந்தும் நீ அவனிடம் ப்ரேமைகொள்வது)
வநித ஸ்வபாவமோ	—இயற்கையான உன்னுடைய பெண் தன்மையினுல்தானே?
வெலயு ஸ்ரீ தேவராஜு	—பெருமையுடன் விளங்கிப் பிரகாசிக்கும் தேவராஜன் (செந்தாமரைக் கண்ணனென்று ப்ரேமை கொண்டாயோ?)
ஒருல பாதலனு	—ஒருவருடைய கஷ்டங்களை
ஓர்வக யுண்டுடயே	—பார்க்கச் சகியாமலிருப்பதையே
பரம தர்மமனி	—உத்தமமான தன் தர்மம் என்று
பாகுக பல்குசு	—நன்ருகச் சொல்லிக்கொண்டு
வரதுடு	—வரதன் (அதாவது, வரங்களைக் கொடுப்பவன்,)
ஆச்ரித வத்ஸலுடு	—தன்னை யடைந்தவர்களைக் காப்பவன்
அனி	—என்று
பேரே	—பேர்மட்டும் படைத்திருக்கிருன்
தரணிஜா லோலுடு	—(பூமிப் பிராட்டியின் திருமகளான) சீதைக்குக் கணவனும்
த்யாகராஜ அர்ச்சிதுடு	—த்யாகராஜனுல் கொண்டாடப்பட்டவனுமான தேவராஜன்
வநஜ...வலசிதிவோ	—(செந்தாமரைக் கண்ணனென்று மயங்கி அவனிடம் ப்ரேமை கொள்ளுகிருயோ?)

III

இந்தக் கீர்த்தனை, வரதராஜப்பெருமானுன தலைமகன் (நாயகன்) மீது ப்ரேமைகொண்ட ஒரு நங்கையை நோக்கி அவளுடைய நற்ருய் கூறும் கூற்ருக அமைந்துள்ளது. அன்றியும் இது நிந்தாஸ்துதியாக விளங்குகின்றது. ஸ்ரீத்யாகராஜஸ்வாமிகள் அகப்பொருளைப்பற்றிய தமிழ்நூற் பயிற்சியும் உடையவராயிருந்திருக்க வேண்டுமென்பது இக்கீர்த்தனத்தினுல் அறியத்தக்கதாயிருக்கின்றது. இதன் அரிய கருத்தும் த்வன்யார்த்தங்களும் எப்படிப்பட்டவர்களுடைய மனத்தையும் பரவசப்படுத்துமென்பதில் ஐயமில்லை.

(8-ம் பக்கம் பார்க்க)

"இது தான் நான் வாங்க வேண்டியது"

ஏன்?

எனக்கும் குழந்தைகளுக்கும் உதவி, விசேஷ காலங்களிலும் தினசரியும்
உபயோகிப்பதற்கு ஏற்றதான செயின் இதுவே

கழுத்தில் நிறைந்த நகை - பணத்தில் குறைந்த தொகை



தேசமெங்கும்
தினசரி
வேண்டப்படும்
செயின்

ரூபா
37

எல்லாப்
பெண்களாலும்
ஆசிக்கப்படும்
நகை.



உத்திரவாதம் - சவரன்
பொன்னால் செய்யப்பட்டது.
நீலம், பச்சை, ஊதா, சிகப்பு
முதலிய கற்களில் ஒரு தினு
சாகவோ அல்லது கலந்தோ
கிடைக்கும். நீளம் 25
அங்குலம்.

சுராஜ்மல் லல்லுபாய் &
கம்பெனி,

ரத்ன வியாபாரிகள்,

313, எஸ்ப்ளனேட், : : மதராஸ்.

வநஜ நயனுடனி:—"பச்சைமா மலைபோல் மேனி பவளவாய்க் கமலச்செங்கண் அச்சுதன்" என்றார் தொண்டரடிப் பொடியாழ்வார்.

முனுபடி சரிதமுலனு:—ஸ்ரீமத் ராமாயணம், பாகவதம், இத்யாதி காவ்யங்களிற் கூறப்பட்ட ஸம்பவங்கள் ஸ்திரீகளிடம் இரக்கம் இல்லாமல் நடந்துகொண்டதாக ஸ்வாமிகள் சமத்காரமாகக் கல்பனை செய்கிறார். உதாரணம்:—தாடகாவதம், சூர்ப்பனகா பங்கம், ஸீதையை அக்னி ப்ரவேசத்துக்குட்படுத்தியது முதலியன. இவ்வாறு பழிப்பதுபோல் புகழ்வதை நோக்க வேண்டும்.

ஒருலபாதலனு தர்மமு:—வரதராஜப்பெருமானுடைய சிறப்புத் திருநாமங்களில் 'ப்ராணதார்த்திஹர வரதன்' என்பதொன்று என்பது நோக்கத்தக்கது.

வரதுடு:—வரத்தைத் தருபவன் வரதன்.

பேரே:—பேர்மட்டில்தான்; வ்யவஹாரத்தில் காணேம். வ்யாஜ நிந்தை.

தரணிஜா லோலுடு:—ஸீதையின் கணவன் ஸ்ரீராமன் ஏகபத்னீவ்ரதன்—("ஏகபத்னீ வ்ரதுடே" என்பதை நோக்குக.) தன் மகளை மயனுரு திருக்கும்படி நன்றாய் ஒரு காரணம் கூறுவதாக ஸ்வாமிகள் சமத்காரமாகக் கல்பித்துக் கூறியிருக்கிறார்.

(இந்தக் கீர்த்தனமும் அச்சுப் பிரதிகளில் காணப்படவில்லை. காஞ்சீபுரம் ப்ரபல வித்வானன காலஞ்சென்ற நாயனும் பிள்ளையவர்கள் எனக்கு அன்போடு கற்பித்த கீர்த்தனங்களில் இஃதொன்று.)

IV

கேதாரகௌளம். **ஆதி**

இந்த ராகம், 72 மேளகர்த்தா முறைப்படி 28-வதான ஹரிகாம்போஜியில் ஜன்யம். [வேங்கடமகியின் முறைப்படி (தீக்ஷிதர் ஸம்ப்ரதாயப்படி) இதுவே 28-வது கர்த்தாவாகும். 'கடபயாதி' என்ற விசித்ர கல்பன முறையின்படி கர்த்தர ராகங்களின் எண்ணைக் கண்டு பிடிப்பதற்காக, அம்முறையில் இதற்கு ஹரி கேதார கௌளம் என்று பெயர். அம்முறையில் ஒரு மேள கர்த்தாவுக்கு ஆரோஹண அவரோஹணங்களில் ஒவ்வொன்றிலும் ஸ்வரங்கள் ஸம்பூர்ணமாகவும் க்ரமமாகவு மிருக்க வேண்டுமென்ற அவச்யமில்லை. இரண்டிலுமாகச் சேர்ந்து க்ரமமாகவோ வக்ரமாகவோ ஸப்தஸ்வரங்களும் வந்தால் போதும். பிதா புத்ரகந்யாயத்தை அனுஸரித்து, இராகங்களில் ஒன்றிற்கொன்று உள்ள சாயையை நோக்கி அம்முறையில் கர்த்தாக்கள் நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.] ஸரிமபநீஸ்ா-ஸ்நிதபமகரிஸ என்ற நடையை யுடையது. ஆரோஹணத்தில் நிஷாதத்தையும் அவரோஹணத்தில் ரிஷபத்தையும் தீர்க்கமாகவும் கமகமாகவும் பிடிப்பதனாலேயே இந்த ராகத்திற்கு விசேஷ ரக்தியுண்டாகிறது. அவரோஹணத்தில் ஸநிதப மகரிஸ என்றும் ப்ரயோகிக்கப்படுகிறது.

பல்லவி

; ; *	ஸ்ா ஸ்ா ; நிதபா ;	மாபாதாபா மாகா மகரிக	ஸா ; ;	ஸாஸாரீமா ;	பா ; ; ;	மாகாரீமா
; ; *	வ ந ; ஜ ந ;	ய நு ட நீ	; ;	வ ல சி தி ;	வோ ; ; ;	வா நி
பாநீ *	ஸ்ா ஸ்நிரிஸ்நிதபா ;	மாபாநிதபமாகா மகரிக	ஸா ; ;	ஸாஸாரீமா ;	பா ; ; ;	மாகாரீமா
*	வ ந ஜ ந ;	ய நு ட நி	; ;	வ ல சி தி ;	வோ ; ; ;	வா நி
பாநீ *	ஸ்ா ஸ்ா ; நிதபா ;	மாபாநிதபமாகாரீகா	ரீ ; ; ;	; ; ஸாநீ	ஸா ; ; ;	மாகாரீமா
*	ம ந ; ஸ ந ;	த ய லே	தே ; ; ;	; ;	; ; ;	வா நி
பாநீ *	ஸா ஸ்நிரிஸநிதபா ;	மாபாநிதபமாகா மகரிக	ரீ ; ;	; ; ஸாநீ	ஸா ; ; ;	மாகாரீமா
*	ம ந ஸ ந ;	த ய லே	தே : ;	; ;	; ; ;	வா நி

பாநீ *
* (வநஜநயனுடநி)

அனுபல்லவி

; ; ; *	ஸ்ாநீஸ்ாரீ ; ரீரீக்ாரீ	ஸ்ாநீ ஸ்ரிம்க்	ரீ ; ;	நீஸ்ா ரீஸ்ா ;	ஸ்ாநீதாபா	மாபாநீநீ
; ; ; *	முநு பட்டி ; ச ரி	த மு	; ;	ல னு வ நி ;	யு	ந் நா
ஸ்ா ; ; *	ஸாநீஸ்ாரீ ; ரீரீப்ாம்ா	க்ாரீ ஸ்ரிம்க்	ரீ ; ;	நிஸ்ா ரீஸ்ா ;	ஸ்ாநீதாபா	மாபாநீநீ
வு ; ; *	முநு படி ; ச ரி	த மு	; ;	ல னு வி நி ;	யு	ந் நா
ஸ்ா ; ; *	நீஸ்ாரீஸ்ா ; ஸ்ாநீதாபா	மாபாநீ ச்ா	ரீ ;	ஸ்ாஸ்ா ; நிதபா ;	மாபாநிதபப்	மாகா ரிபமக
வு ; ; *	வநி தஸ்வ ; பா	வ	மு ;	வெ ல ; யு ஸ்ரீ ;	தே வ	ரா ஜ

ரிமபநி *
டி * (வநஜநயனுடநி)

சரணம்

; ; *	பாநீ ; தாபா ; மாபா நிதபப	மாகா ரிபமக	ரிகா ; ஸ	ரீ ; மா பா ;	பா ; தபமா ;	பாபா ;
; ; *	ஒ ரு ; ல பா ; த ல	ல நு	;	ஓர் ; வ க ;	யு ; ண்டு ;	டயே ;
; ; *	பாபா ; ரீஸ்ா ; நிதபமகரீ , ;	ரீரீ ;	; ஸா ;	நிதபா ;	பா நிஸரீ ;	ரீரீ ;
; ; *	ப ர ; மதர் ; ம , ;	மநி ;	; பா ;	கு க ;	ப ல் ;	கு சு ;

"வரதுடு ஆச்ரித.........த்யாகராஜார்ச்சிதுடு" அனுபல்லவிபோல்பாடவேண்டும்.

வலவூட்டும் சிறந்த டானிக்

வெப்ஸ்டர்ஸ் பாஸ்பாடம்

கிருஷ்ராஜ் & கம்பெனி, மெத்தையில் ஆபீஸ்,
மருந்து வியாபாரிகள், சைனபஜார் ரோட், மதராஸ்

எல்லா மருந்து ஷாப்பு களிலும் கிடைக்கும்

மல்லிகாவின் பாக்யமே பாக்யம்!

போன வருடம் ஐயோ! அப்பா! என்று கஷ்டப்பட்டவள் இவ்வருடம் ஒரு குழந்தையை அன்புடன் அணைகிறாள்

"வேலன்ஸ் ஸ்திரீ ஸோதரி"

ஸ்திரீகளுக்கு மாதக்குளி காலத்தில் உண்டாகும் சூதக வாய்வு, சூதக பந்தம், சூதகக்கட்டினால் உண்டாகும் வயிற்று வலி, பேதி, பசியின்மை. வாந்தி, மயக்கம், தலைவலி, ஜ்வரம், உடல் ஸ்தூலித்தல முதலிய எல்லா கர்ப்பாசய வியாதிகளையும் கண்டித்து மலட்டுப் பூச்சிகளைக்கொன்று, கருப்பைக்கு பலந்தந்து ரக்ஷித்து சந்தான பாக்யத்தையளிக்கும் உன்னத ஔஷதம். பத்தியமில்லை, செட் விலை ரூபா 5.

வேலன்ஸ்மெடிகல் ஹால் 61. காரணீஸ்வரர்கோயில் தெரு மைலாப்பூர், சென்னை

நமது சிறுகதை

கூஷ்மாண்ட தர்மம்

"காசி"

அருணாசலம் கன்னியூர் கிராமத்தில் பள்ளிக்கூட உபாத்தியாயர்; போஸ்ட் மாஸ்டர்; வைதீகமுங்கூட. அவர் ஒருநாள் ஞாயிற்றுக்கிழமைதினம் குப்பனுக்கு ஒரு கார்டை விற்று அவன் கொடுத்த ஒரு காலணாவையும் ஆறு தம்பிடிகளையும் மேல் அங்கவஸ்திரத்தில் முடிச்சுப் போட்டுக்கொண்டிருந்தார். அப்பொழுது சடையன் மிகவும் கவலைப்பட்ட முகத்தினனாய் எதிரே வந்து நின்றான்.

ஊரிலுள்ளவர்கள் ஏதாவது யோசனை கேட்க வேண்டுமானால் அருணாசலத்தினிடம் தான் வருவது வழக்கம். அப்படி வருபவர்களிடம் அவர் கொஞ்சம் தடபுடலாகவும் இலக்கணமாகவும் பேசுவார். சடையனைப் பார்த்து "நல்லது சடையா? என்ன விசேஷம்? என்ன காரியமாக வந்தாயோ?" என்று வினவினார்.

சடையன் தன் முகத்தில் இன்னும் அதிகக் கவலையை வருவித்துக்கொண்டவனாய், "ஒன்றுமில்லீங்க, பக்கிரி என் மீது ரொம்பக் கோவமாயிருக்கான், எப்பொ என்ன பண்ணுவானோ, பயமாயிருக்குங்க" என்றான்.

"பக்கிரியுடனா சண்டை! அவன் முரடனாச்சே. என் உனக்கும் அவனுக்கும் மனஸ்தாபம்?"

"அவன் வழக்கமாகக் குத்தகைக்கு எடுக்கிற தோட்டத்தை நான் இந்த வருசம் எடுத்தூட்டேன். அதான் காரணம். வெளியிலே போவும் போதெல்லாம் உசிரைக் கையிலெ பிடிச்சுக்கிட்டுப் போய் வரவேண்டியிருக்குதுங்க"

"சடையா! நீ அவனோடு கூடியவரை சமாதானமாகப் போக முயலவேண்டும். நமக்கு விரோதியான ஒருவனை ஜயிக்கவேண்டுமானால் சாம, தான, பேத, தண்டம் என்ற சதுர்வித உபாயங்களையும் கைக்கொள்ள வேண்டுமென்று சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. நீ இந்த உபாயங்களுள் ஏதாவது ஒன்றைக் கைபபற்றிப் பார்த்தாயா?" என்று அருணாசலம் கேட்டார்.

"நீங்க சொல்றது புரியல்லிங்க. நான் ராஜியாய்ப்போக அவனை ஆகாசத்திலே தூக்கி வச்சுப் பேசினேன். அவன் தோட்டம் நல்லா யிருக்குதுன்னு சொன்னேன். அவன பெண்டாட்டி பெரிய மனுசா வீட்டுப் பொம்பிள்ளைங்க மாதிரியே இருக்கிறா என்று கூடச் சொல்லிப்பார்த்தேன். அவன் எவனோடும் முகங்கொடுத்துப் பேசுகிறதே இல்லீங்க" என்றான் சடையன்.

அருணாசலம் இப்பைச் சுற்றி ஒரு நிமிஷம் தேடிப் பார்த்துப் பொடி டப்பியை எடுத்துப் பொடி போட்டுக் கொண்டார். அப்பொழுது பக்கத்து வீட்டு முத்து வந்து, "ஸார்! பாட்டி ஒரு கவர் வாங்கிக் கொண்டு வரச் சொன்னா. நாளைக்கு அப்பா ஊரிலேருந்து வந்ததும் கொடுத்துவிடுகிறாளாம்" என்று கேட்டான். அருணாசலம் எழுந்திருந்து உள்ளே போய் ஒரு கவரைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுச் சிறிதுநேரம் யோசனையிலாழ்ந்தார்.

பிறகு சடையனைப் பார்த்து, "உன்னிடம் நல்ல பிலாக்காய்! கீக்காய் ஒன்றும் கிடையாதா?" என்று வினவினார்.

"இல்லீங்க. திடலிலே பூசணிக்காய் இருக்குது. ரொம்ப அருமையாயிருக்கும்" பக்கிரிக்குக் கூட எங்கொல்லை பூசணி ரொம்பப் பிடிக்கும்"

"நீ அதைக் கொண்டு போய்ப் பக்கிரியிடம் கொடு. அவனுக்கென்றே அதை விற்காமல் விட்டுவைத்திருந்ததாகச் சொல்லு. வீட்டில் அவனும் அவன் பெண்டாட்டியும் பேசிக்கொண்டிருக்கும் சமயம் பார்த்துப் போ!" என்று அருணாசலம் புத்திமதி கூறினார்.

சடையன் அப்படியே செய்வதாகக் கூறி விடைபெற்றுச் சென்றான்.

* * * *

பக்கிரி பெரிய வஸ்தாது போலிருப்பான். மகா முன் கோபி. ஊரார் அவனிடம் மிக ஜாக்கிரதையாக நடந்துகொள்வார்கள்.

அருணாசலத்தின் போதனைப்படி சடையன் அன்று சாயந்திரமே பூஷணிக்காயை எடுத்துக்கொண்டு பக்கிரி வீட்டுக்குச் சென்றான். பக்கிரி அப்பொழுது தான் ஏதோ வேலை செய்துவிட்டுக் களைத்துப் போய் வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்துகொண்டிருந்தான்.

சடையன் அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே "பக்கிரி அண்ணே! இது உனக்குத்தான் கொடுக்கணுமென்றே வச்சிருந்தேன். அண்ணியிடம் கொடுத்து வெல்லம் போட்டு ஆக்கச்சொல்லு" என்றான்.

பக்கிரி முகத்தில் கோபம் பொங்கியது "என்னை எகத்தாளியா பண்றே? உன்னையும் பார்த்தான். உன் பூசணிக்காயையும் பார்த்தான் தூக்கிட்டுப்போ" என்று கர்ஜித்துவிட்டுப் பக்கத்திலிருந்த அரிவாளைக் கையிலெடுத்துக்கொண்டான். சடையன் பதிற் பேசாமல் ஆள் தப்பினால் போதுமென்று காயை எடுத்துக்கொண்டு நழுவினான்.

II

மறுநாள் சடையன் தன் வயலில் வேலை செய்துகொண்டிருந்தபோது வாய்க்காலில் நிறைய ஜலம் வருவதைக் கண்டான். வரும்வேகத்தைப் பார்த்தால் கரையை உடைத்துக்கொண்டு வயலில் பாய்ந்து பயிரை அழித்துவிடும்போலிருந்தது சுற்றுமுற்றும் பார்த்தான். ஒருவருமில்லை. உடனே வாய்க்காலின் மீதிருந்த பனை மரப் பாலத்தின் மீதேறி வாய்க்காலைக் கடந்துசென்று எதிர்ப்பக்கத்து வயல்களின் மடைகளைத் திறந்துவிட்டான். வெள்ளம் அதில் பாயவே அவன் வயல் தப்பியது.

வெள்ளம் மற்ற வயல்களில் பாய்வதைக் கவனித்துக் கொண்டிருந்த சடையனுக்கு பளிச்சென்று ஒரு யோசனை உதயமாயிற்று. அதன்படி செய்வதென்று தீர்மானித்துக் கொண்டு தன் காரியம் முடிந்ததும் பக்கிரி வேலை செய்து கொண்டிருந்த தோட்டப் பக்கம் சென்றான்.

சடையனைக் கண்ட பக்கிரி ஆகாயத்தில் ஓங்கின மண்வெட்டியை அப்படியே நிறுத்திக்கொண்டு சடையனை வெறித்துப் பார்த்தான்.

சடையன் ஏதோ பெரிய ரகசியம் சொல்லப் போகிறவன்போல் யாராவது இருக்கிறார்களா என்று நாலாபுறமும் பார்த்துவிட்டு பக்கிரியின் சமீபத்தில் வந்து "அண்ணே! ஒரு சமாச்சாரம்" என்றான்.

(31-ம் பக்கம் பார்க்க)

திருப்பதி ஸ்ரீனிவாஸப் பெருமாள் ரதோத்ஸவம் சமீபத்தில் நடைபெற்றது. தேர் ஒரு மின்சார விளக்கு ஸ்தம்பத்தில் முட்டி இடையூறு ஏற்பட்டு மறுநாள்தான் நிலைக்கு வந்தது. இம்மாதிரி தேர் புறப்பட்ட தினமே நிலைக்கு வராதது பல வருஷங்களுக்கு முன் ஒரு தடவை நடைபெற்றது.

மியூச்சுவல்
அஷ்யூரன்ஸ் கம்பெனி,
லிமிடெட்.

தலைமை ஆபீஸ் :
187, மவுண்ட் ரோட், மதராஸ்.

நவீன, சாஸ்திர பூர்வமான, தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை. குறைந்த பிரீமிய விகிதங்கள்

டி. வி. ராமமூர்த்தி,
செக்ரிடரி.

கைரேகை மர்மங்கள்

உங்கள் கை உபயோகமுள்ளதா?

(சக்திதாஸன் எழுதியது.)

மனிதர் பிறப்பதின் பயன் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உபகாரமாயிருப்பதற்கேயாம். உங்கள் கை தாழ்ந்திருக்க ஆசைப்படமாட்டீர். தேச சேவையிலோ, குடும்ப விவகாரங்களிலோ தலையிடும்போது கஷ்டத்தை மேற்கொள்ளும்படி நேரிடும். அப்பொழுதுதான் உங்களுடைய அந்தரங்க விஸ்வாசம் வெளிப்படும்.

உங்களுக்கு சமாதானமே இஷ்டம். தவறு செய்தவர்களையும் ஆதரிக்க முற்படுவீர். இதைக் கண்டு விரோதிகளும் ஆச்சரியப் படுவர். உறுதியான தீர்மானத்தையும் கண்டுகொள்வர். முடிவில் காரியம் சித்தியாகும்போது அந்தரங்க சுத்தி வெளியாகின்றது. இது சதுரக் கையின் அமைப்புக்குள்ள விசேஷமாகும்.



சதுரக் கை

சதுரக் கையுடையவரின் ஆழ்ந்த கருத்துகளை மேல்வாரியாகத் தெரிந்துகொள்ள முடியாது. விவகாரத்தின் முடிவிலேதான் காணலாம். வியாபாரிகளிலும், வித்யார்த்திகளிலும், லாயர்களிலும், பொறுப்பு வாய்ந்த பெரிய உத்தியோகங்களை வகித்திருப்போர்களிலும் இம்மாதிரியான சதுரக் கைகளைப் பார்த்திருக்கிறேன். இவர்களுக்கு காரியத்தின் மேல்தான் குறி. தங்கள் எண்ணம் இதுவென எவ்வகையிலும் காட்டிக்கொள்ள மாட்டார். இவர்களிடம் பேச்சைக் கொடுத்துப் பார்த்தாலும், புன்னகைகாட்டி மௌனம் சாதிப்பர். இவர்களிடம், பிறருக்கு உபகாரஞ்செய்ய, தளராத சக்தியும் அமைதியான ஊக்கமும் இருந்துவருவதால் கௌரவம் தாங்கியவராவர். இவர்கள் மற்றவர்களின் தாரதரத்தை நன்கறிந்து ஒரு தீர்ந்த அபிப்பிராயங்கொண்டவராயிருப்பவர். எக்காரணங்கொண்டும் மாற்றிக்கொள்ளார். அசாத்தியமான (ஆழ்ந்த) பகுத்தறிவு, தத்துவ ஞானத்தைவிட மிக்க மகத்வம் பொருந்தியதென்று ஒப்புக்கொள்ளலாமல்லவா? சதுரக் கையுடையோர் சந்தர்ப்பத்துக்கே காத்திருப்பர். உங்கள் கை சதுரமாயிருந்தால் நீங்கள் உலகுபகாரியாவீர்.

முன் கையைவிட புறங்கை விசாலமாய் அகண்டிருப்பது தத்துவக் கை. புறங்கை சதைப் பற்றின்றி, கை நரம்புகள் நன்றாய் மேடு பள்ளத்தோடு தெரியும். விரல் அங்குலாஸ்தியின் முடிச்சுகள் மாத்திரம் பருமனுயிருக்கும்.



தத்துவ ஞானக் கை

உங்கள் கை இம்மாதிரியிருந்தால், விவகாரங்களை அலசிப் பேசுவீர். உண்மையை அறிய வாதம் செய்வீர்.

ஸ்தூல சூட்சும பிரபஞ்சங்களை ஆராய்ந்து காரண காரியம், ஞான அஞ்ஞான மென்பதைப்பற்றித் தெரிந்து கொள்வர். சத்தியப்பிரகாசத்தை நாடியிருப்பர். எப்பொழுதும் சிந்தனையாளராகவேயிருந்து வருவர். ஆராயும் அறிவுள்ளவராயிருப்பதையும் தெரிந்துகொள்ளலாம். சுயநலங்கொண்டு உலகப்பொருளை விரும்பார். ஆராய்ந்து தெரிந்து கொள்ளாமல் மற்றவர் சொல்வதை அப்படியே ஒப்புக்கொள்ளமாட்டார்.

நியாயவழியில் இருப்பதால் நல்ல நண்பர்கள் சேர்வர்.

இது விஞ்ஞானத்தின் விசேஷமாதலால் இதற்கு தனிப்பட்ட கௌரவமுண்டு. ஞான சக்தி விலைமதிப்புக்கு எட்டாதது. சாத்தியமான சமாதானமுண்டாகும்போது கீர்த்தியும் உண்டாகும்

இது மேற்சொன்ன இரண்டுக்கும் பொதுவானது. கை உள்ளும் புறமும் சதைப் பிடித்து விரல் உருட்சியாயிருக்கும். இம்மாதிரி கையுள்ளவருக்குக் கையில் அதிக ரேகைகள் காணப்படமாட்டா. இதை சுகவாசியான கையென்

நடுவான கை

றும் சொல்லத்தகும். பொறுப்பும் கவலையுமற்றவராவர் அதிகம் பேசமாட்டார். எதிலும் ஆலோசனை இராது. சில சமயம் வாக்கு பலிக்கும். உண்டுண்டு உறங்குவதே வேலை. இத்தகையோருக்குக் கோபம் வரின் தேக பலத்தையே காட்டுவர். புத்தி விசேஷமாய் வேலை செய்யாது. சாந்தமாயிருப்பதுபோல் தோன்றுவர்.

அழகான கை

மிருதுவான நீண்ட விரல்களும் விரல் முனை நகத்துடன் கூர்மையாயிருக்கும் பார்ப்பதற்கு அழகு பொதிந்து நிற்கும். முகம் மலர்ந்த புஷ்பம் போல் தேஜஸோடு விளங்குவர். இத்தகைய கை மிக்க அபூர்வம். உலக ஆசாபாசத்துக்குட்பட்டவருக்கு நேர்த்தியான கை அமையாது.

பார்ப்பதற்கு ரம்மியமானகரம் தெய்வீக சக்தியுடையது. தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாய் எந்தக் காரியத்தையும் செய்யமாட்டார். இவர்கள் இருக்குமிடத்தில் தெய்வீக உணர்ச்சியை உண்டாக்கும். இவர்களுடைய அன்பு பரிசுத்தமானது. உலக ஆசாரம், சுகம், துக்கம், உண்டு, இல்லை என்ற உடன்பாடு எதிர்மறைக்குப் பொதுவாயிருப்பர். இவர்களுக்கு இயற்கை வனப்பும் இனிய கீதமும் ஆகாரமாகும். தேகத்துக்கு அதீதமாக தங்கள் ஆத்ம சக்தியை வியாபகமாய் உணர்வர். சாமான்ய

(12-ம் பக்கம் பார்க்க)

MINSARARASAM
நிகரற்ற தேக வலிமை -
புதிய ரத்தோட்டம் -
அபாரமான ஜீவசக்தி -
ஆனந்தமயமான வாழ்வு -
இவைகளை
படைய
மின்சாரரசம்
வெகு அதிசயமான போக்கிஷம்.
ஓரே முறை
பரீக்ஷியுங்கள்
எல்லா இடங்களிலும் கிடைக்கும்
புட்டி 1-க்கு ரூ. 2.
மின்சார ரசம்
கம்பெனி(லிட்) சேலம்.
MINSARARASAM

தகப்பனைப்போல்
தனயனும்

தகப்பன் வெளியே
சென்றபோது!

கைரேகை மர்மங்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனங்கள் இத்தகையோரைக் கண்டு கொள்ள முடியாது.

இவர்கள் உள்ளம் சத்தியத்திலேயே இருக்கும். சாத்மீக மனத்தராய் எப்பொழுதும் காணப்படுவர். சீக்கிரம் ஏமாற்றப்படுவர். ஆயினும் சாந்தமாகவே இருப்பர்.

உருட்சிக் கை

இது அகண்ட நகங்களையுடைய விரல்களுள்ள கை. இதுவும் சதுரக்கைபோலவே அமைந்திருக்கும். கை எப்பொழுதும் சுறுசுறுப்பாக

இருக்கும். அதாவது கைக்கு ஏதாவது வேலை இருந்துகொண்டிருக்கவேண்டும்.

உங்களுக்கு இம்மாதிரி கை இருக்கிறதா? அப்படியிருந்தால் இஞ்சினீர் அல்லது புதிய கைத்தொழிலைக் கண்டு பிடிப்பவர்களாயிருக்க வேண்டும். விரல் முனையும் உள்ளங்கையும் அகண்டு அமைந்திருக்கும். கை மிருதுவாயிருந்தால் அதிக வேலை செய்யச் சௌகரியப்படாது. விரல்களுக்குக் கஷ்டமுண்டாகும்.

கை கெட்டியாய் அமைந்திருப்பின் சுதந்தரமாய் வேலை செய்வர். மனத்திலுதித்தபடி செய்து முடியும்வரை இடைவிடாது வேலை செய்துகொண்டிருப்பர். தம்முள் யோசனை செய்து, அதை உடனே காரியத்தில் நடத்திக்காட்டுவர்.

கைத்தொழில் வகையில் பொன், வெள்ளி வேலைசெய்வோர் கடினமான இரும்பு வேலைசெய்வோர், மரவேலை செய்வோர், பரம்பரையாகக் கெட்டிக் கையாக அமைந்து வரும்.

கலப்புக் கை

இந்தக் கையில் ஐந்து விரல்களும் ஐந்து விதமாய் அமைந்திருக்கும். ஒரு விரல சதுரம், ஒன்று கூர்மை, மற்றொன்று சங்கைப்போல், ஒன்று தத துவ விரல் இவ்வாறிருக்கும்.

இவர்களுடைய குணம் சீதோஷ்ணம்போல அடிக்கடி மாறிக்கொண்டிருக்கும். சாமான்யர் முதல் பெரிய உத்தியோகஸ்தர்வரை பழக்கமுள்ளவராயிருப்பர். நல்ல சந்தர்ப்பத்தில் தங்களை உயர்த்திக்கொள்வர். அதுவரை யாதுமறியாதவர் போல நடந்துகொள்வர்.

நஞ்சன்கூடு சதவைத்யசாலை
ச்யாவனப்ராச
சுவாச டானிக்
யுனைடெட் கன்ஸர்ன், பந்தர்தெரு, மதறாஸ்
(குழந்தைகளுக்கு நம்பிக்கையான மருந்துகள் இடம்.)



10வருஷம்உத்திரவாதமுள்ள
புது மாதிரியான
பஞ்ச வர்ண கல் செயின்கள்
(செயின் 1-க்கு)
ரூபாய் 5-0-0
எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான செயற்கை கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்த மடையலாம்.
(கேட்லாக் இலவசம்)
R.S. பிரகாசம் & Co.,
அலாய் கோல்டு ஜுவல்லர்ஸ்,
187, சைனா பஜார் ரோட், ஜி. டி. மதராஸ்.

ஸோல்ஜர் உருவம் இல்லாத டின் பிளிட் அல்ல.

தென்னிந்தியாவிற்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
டி. டி. கிருஷ்ணமாச்சாரி, 11-14, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

"அம்மா! பக்ஷணம் எனக்கென்றாள்"

சற்று முன் தான் குழந்தை ராஜம் வாசலில் விளையாடிக் கொண்டிருந்தாள். "கம" என்று ஒரு வாசனை உள்ளிருந்து வெளிக் கிளம்பியது. தாயார் பக்ஷணங்கள் தயார் செய்கிறாளென்றெண்ணி ஓடோடியும் உள்ளே வந்து,

"அம்மா! பக்ஷணம் எனக்கென்றாள்"

"கண்ணே ! ரசமல்லவோ அடுப்பில் கொதிக்கிறது. தின்பண்டமேதுமில்லையே" என்றாள்.

"அன்னையே ! ரசத்திற்கு இவ்வளவு அபரிமிதமான வாசனை யேது ?" என்று குழந்தை ஆவலுடன வினவினாள்.

"செல்வமே ! இது எல். ஜி. பெருங்காயத்தின் இன்பகரமான வாசனை. கொஞ்சந்தான ரசத்தில் போட்டேன். அதற்குள் வாசனை ஊரைத் தூக்குகிறது" என்று அம்மையார் பதிலளித்தார்.

உடனே சாப்பிட வேண்டுமென்று ஆசைப்பட்ட குழந்தையை அன்னையும எடுத்து அமுது படைத்தாள். வயிறு நிறைய உண்டபின் குழந்தை ராஜம் மகிழ்ச்சியுடன் பள்ளிக்கூடத்திற்கு ஓட்டம் பிடித்தாள். எல். ஜி. தான் எல். ஜி அதற்கு ஒப்பும், உயர்வும் இல்லை. எல். ஜி. கொள்வோர் எழில் பெறுக.

லால்ஜி கோது & கம்பெனி,
பிரபல பெருங்காய வியாபாரிகள்,

ஹாஸ்யப்பகுதி

வனஜாவைக் கண்டித்தல்

கூடத்தில் வந்ததுதான் தாமதம். "அவளை நீங்கள் கண்டிக்க வேண்டும்- இல்லாவிட்டால் படுமோசமாய்விடும். அந்தத் தடிச் சிறுக்கிக்கு என்ன ராங்கி......

(ஸ்ரீமான் எம். எஸ். சுப்பிரமணியன் எழுதியது.)

நாள் முழுவதும் ஆபீசில் உழைத்து, களைத்துப்போய் அதிவேகமாக வீட்டை நோக்கி நடந்தார் ராமசுப்பையர். வாசற்படியில் காலை வைத்ததுதான் தாமதம்; "இதோ அப்பா வந்துட்டா; தோலை உறிச்சி உப்பு போடச் சொல்றேன் பாரு. துளிகூடப் பயம் கிடையாது. இரு சொல்றேன். கொன்னு குழிதோண்டிப் புதைக்கச் சொல்றேன் பாரு" என்ற ஒரு சொற்பொழிவு ராமசுப்பையரின் காதில் விழுந்தது.

ராமசுப்பையர் கொலைக்காரரல்ல. தோலை உறித்து உப்பு எப்படிப் போடுவது என்பதும் அவருக்குத் தெரியாது. ஆனுல், இந்தப் புனித காரியங்களை அவர் செய்யவேண்டுமென்பது அவர் மனைவி கமலாவின் அபிப்பிராயம் தகப்பனார்களாயிருப்பவர்கள் இப்படிப்பட்ட தர்ம கைங்கரியத்தைச் செய்தே தீரவேண்டும்.

யாரைப்பற்றி மேற்சொன்ன சொற்பொழிவு நடந்தது என்பது ராமசுப்பையருக்குத் தெரியும். எல்லாம் அவர் செல்வக் குழந்தை வனஜாவைப்பற்றித்தான். வயது ஐந்துதான்; ஆனுல், அவள் செய்யும் விஷமம் சொல்லி முடியாது. வனஜாவின் விஷமச் செயல்கள் அவள் அம்மாவிடமிருந்து, அதாவது தமது மனைவியிடமிருந்து, மாதுரார்ஜிதமாக அடையப்பட்டது என்பது ராமசுப்பையரின் தாழ்ந்த அபிப்பிராயம்; ஆனுல் கமலா, தன் கணவரின் காதுக்கெட்டாமல், "எல்லாம் அவள் அத்தையைக் கொண்டிருக்கிறது" என்று சொல்லுவாள்.

கூடத்தில் வந்ததுதான் தாமதம். "அவளை நீங்க கண்டிக்க வேண்டும். இல்லாவிட்டால் படுமோசமாய்விடும். அந்தத் தடிச்சிறுக்கிக்கு என்ன ராங்கி...',

"கண்டிக்கிறேனடி, என் இப்படிக் கத்தரே? கண்டிக்கிறேன். குழந்தை என்ன செய்தாள்!" என்று சாவதானமாகக் கேட்டார் ராமசுப்பையர். வனஜா ஒருநாளில் எத்தனையோ விஷமம்செய்வதால், ராமசுப்பையர் அவைகளை மறந்து விடுவது வழக்கம்.

"கேழ்ப்பானேன், பௌண்டன் பேனுவுக்கு இங்க் விட்டாள். மேஜையின்மேலிருந்த டேபிள் கிளாத்தில் ஒரே இங்க் மயம். அது நாசமாய்ப் போக; இந்த வீட்டிலே ஒரு நல்ல சாமான் வைக்க விடுகிறதில்லை. இப்போதான் போட்டேன்" என்று கண்கள் சிவக்கக் கமலா வனஜாவைப் பார்த்தாள்.

வனஜா தனக்கு மரியாதை கிடைப்பதற்கு முன் அங்கிருந்து நழுவ வேண்டுமென்று போய்விட்டாள். ராமசுப்பையருக்கு இந்த விஷயத்தைக் கேட்டதும் குழந்தையினிடத்தில் கொஞ்சம் பிரியம் ஏற்பட்டது. காரணம் அந்த டேபிள் கிளாத். அதைக் கமலா எம்பிராய்டரி செய்ய ரூ. 15-க்குப் பணப்பையில் கையை வைத்துவிட்டாள். போதாதற்கு டேபிள் கிளாத்திற்கு எம்பிராய்டரி செய்யும்போதெல்லாம் தன் கணவரிருப்பதையே மறந்துவிடுவாள். தன்னைக்கூடக் கவனிக்காமல், லக்ஷியம் செய்யாமல் கமலாவின் கவனத்தைக் கவர்ந்த அந்த டேபிள் கிளாத்தின மேல் கொஞ்சம் குறை. அது பூர்த்தியாயிற்று அன்று அவருக்குச் சந்தோஷம் ஏற்பட்டதில் என்ன தவறு? ஆனுல்...

"என்ன யோசிக்கிறேளே... ......இந்த மாதிரி செல்லம் கொடுத்துத்தான் தலைகால் தெரியாமல் தலைவிரித்தாடுகிறுளே..."

"என்ன கமலா, அவசரப்படுகிறுய். இப்போதானே வந்தேன். இன்னிக்கி அவளைக் கண்டித்துத் தான் மறு ஜோலி பார்க்கப்போகிறேன். இருக்கட்டும்; போக்கிரி ராஸ்கல்"

தன் மனைவியையல்ல, வனஜாவை. நீங்களெல்லோரும் உங்கள் வீட்டில் இந்த விஷயத்தில் எப்படி நடந்து கொள்கிறீர்களோ; ஆனுல் ராமசுப்பையரும் கமலாவும் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டதிலிருந்து குழந்தைகளை அடிப்பதற்கு ராமசுப்பையருக்குத்தான் உரிமையுண்டு என்று நிச்சயித்தார்கள்.

இத்தனை நாட்களாகக் கமலா வனஜாவைப் பயமுறுத்தி வந்தாள். விஷமம் செய்யும் குழந்தைகள் நரகத்திற்கு செலவார்களென்றும், அங்கே பயங்கரமான ஹிம்சைகள் ஏற்படுமென்றும் சொல்லியிருந்தாள். ஆனுல் அதையெல்லாம் கட்டுக்கதையாகப் பாவித்தாள் வனஜா. இம்முறை வனஜாவை விட்டுவிடக் கூடாது என்று கமலா சொன்னபடியால், ராமசுப்பையர் வனஜாவை அடித்தே தீருவதென்று நிச்சயித்தார்.

"என்ன பிரம்பினுலேயே அடிக்கட்டுமா?......" என்று மனைவியைக் கேட்டார்.

"ஏன்? கைதானிருக்கே...?" என்றுள் கமலா.

"வனஜாவை அடித்தால் என் கை வலிக்குமே என்று யோசிக்கிறேன். அவள் உன்னைப்போல ஒரே எலும்பாயிருக்காளே......"

"இல்லாதபோனுல் வாழ்ந்தது; ஒன்றுமில்லாததற்கு தான் வழி..." என்று கமலா சமையலறைப் பக்கம் சென்றுவிட்டாள்.

சாதாரணமாய் அடிப்பதென்றுல் நமக்குக் கோபமாயிருக்கும்பொழுதே அடித்துவிடவேண்டும்; இல்லாவிட்டால் நாம் சாந்தமாகிவிடுவோம்! தவிர அப்புறம் அடிப்பதில் பலன் இருக்குமென்றும் தோன்றவில்லை! ஏனென்றுல், அடிக்கவே எண்ணம் உதிக்காது—அச்சமயங்களில் நாம் அநேக தர்ம சங்கடங்களில் அகப்பட்டுக்கொள்ள நேரிடும்.

அடிப்பதனுல் குழந்தைக்கு நல்லதா; ஏதாவது தப்பித் தவறிக் குழந்தை சுருண்டு விழுந்துவிட்டால் என்ன செய்வது' நல்லது கெட்டதைச் சொல்லி, குழந்தையை வாயா வார்த்தையாகத் திருத்தக் கூடாதா? ஆனுல், 'அடியாத மாடு படியாது' என்று சொல்லுகிறுர்களே; ஆனுல் வனஜா மாடு இல்லையே, குழந்தையல்லவா, அதுவும் நம்பெண் அல்லவா? இப்படிப் பலவிதமான கேள்விகள் ராமசுப்பையரின் மூளையைத் துளைத்துவிடும். அப்புறம் அவர் எப்படி அந்தக் காரியத்தைச் செய்ய முடியும்?

இப்படி யோசித்துக் கொண்டிருக்கும்பொழுது மறுபடி கமலாவின் குரல் கேட்டது.

சுத்த மைசூர் பட்டு நூல் | வெளி நாட்டு பட்டு நூலே கிடையாது

வெள்ளை ஸில்க் கோட்டு துணி | புதிய மோஹினி, இந்திராணி கரை போட்ட பூனதலைப்பு தர்மாவரம் சரிகைச் சேலைகள் | டென்னிஸ் மேல் அங்கவஸ்திரம்.

D. R. NARAYANASWAMY & SONS. Darmavaram (Anantapur Dt.)

"என்ன அடிச்சாச்சா, இல்லையா?"

"இன்னும் இல்லை"

"இப்படி நாழியாக்கறேளே அவளுக்கு எப்படிப் பயமிருக்கும் சூட்டோட சூடா கொடுக்க வேண்டாமா?"

"எல்லாம் தெரியும்...வனஜா எங்கே?" என்று கேட்டுக்கொண்டே அவள் இல்லாத இடங்களில் தேடினார் ராமசுப்பையர். அப்புறம் ஒரு யுக்தி தோன்றியது.

வனஜா படுக்கையறையில் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். ராமசுப்பையர் உள்ளே சென்று கதவை உள்பக்கம் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டார்.

* * * *

சில நிமிஷங்களுக்குப் பிறகு படுக்கையறையிலிருந்து கோரமான, துக்ககரமான, பரிதாபகரமான சப்தம் வெளிக்கிளம்பியது.

"இன்னமே செய்யாதே!" என்று ராமசுப்பயர் தப்பு திப்பு என்று கையாலும் பிரம்பினுலும் வீர் வீர் என்று அடித்துக்கொண்டிருந்தார்.

வனஜா, "அப்பப்பா, அய்யய்யோ, அய்யய்யோ, அப்பப்பா, இல்லேப்பா, இன்னமே செய்யமாட்டேன்" என்று அழுகைக் குரலுக்கு நடுவில் கசாப்புக் கடைக்கு இழுத்துச் செல்லும் ஆடுபோல் ஓலமிட்டாள்.

அடி சத்தமும் அழுகைக் குரலும் மாறிமாறி அதிக உணர்ச்சியுடன் வளர்ந்தது கமலாவிற்குப் பொறுக்க முடியவில்லை. என்றைக்குமில்லாமல் தன் கணவர் வனஜாவை இப்படிக் கண்டிக்கத் தலைப்படுவாரென்று நினைக்கவில்லை. ஆச்சரியமாகவேயிருந்தது. கதவைத் தடதடவென்று தட்டினுள்.

ஐந்து நிமிஷம் தட்டின பிறகுதான், ராமசுப்பையருக்கு அவள் தட்டுவது காதிற் கெட்டியது.

"யாரங்கே.....?" என்று கோபமாகக் கேட்டார்.

"நான்தான்......"

"என்ன?"

"போதுமே குழந்தையை கண்டித்தது. கொலை பண்ணிவிடுவேள்போலிருக்கே......"

"நீதானெடி தோலை உறிச்சி உப்புப் போடச் சொன்னே! இன்னமே இந்த சனியன் என்னத்துக்கு? தொலைந்துபோகட்டும் ஒரு வழியா. இந்தப் பிடாரிக்குக் குழந்தை இருந்து என்ன, செத்து என்ன?" என்று சொல்லிக்கொண்டே மறுபடியும் ஓங்கி ஓங்கியடித்தார் ராமசுப்பையர்.

"அய்யோ, போருமே, இது என்ன கிரகசாரம்.........?" என்று கமலா வெளியிலிருந்து கத்தினுள்.

"நீதானெடி அடிக்கச் சொன்னே......"

"ஆமாம், நான் அடிக்கச் சொன்னேன், அடிச்சேள். இப்போ நிறுத்துங்கோன்னு சொல்றேன் உங்களுக்குப் புண்ணியம். கொஞ்சம் நிறுத்துங்கோ......"

"எல்லாம் உன்னிஷ்டமோ, உன் ஆட்டப்படி நான் நடக்கணுமோ......"

கமலா அழ ஆரம்பித்து விட்டாள். "அய்யோ போருமே, அவளை விடுங்கோ. இருக்கிறது ஒரு குழந்தை; அதை கண்ணுலேபார்க்கக் கொடுத்து வைக்கணுமே.........கதவைத் திறங்கோ!......"

"பெண் புத்தியெல்லாம் இப்படித்தான். எனக்கென்ன? ராங்கித்தனம் ஜாஸ்தியாகும். உன்பாடு; உன் குழந்தைபாடு. சரி தொலைந்துபோ; ராஸ்கல்" என்று சொல்லிவிட்டுக் கதவைத்திறந்தார்ராமசுப்பையர்.

"என் கண்ணே, அய்யோ குழந்தை சுருண்டு போச்சே. அய்யோ பாவம்" என்று வனஜாவைத் தாவி அணைத்துக் கொண்டாள் கமலா. வனஜா மட்டும் அழவில்லை, சிரித்துக் கொண்டிருந்தாள்!

பாவம்! அடிபட்ட மெத்தையையும் படுக்கையையும் ராமசுப்பையர் நன்றாக விரித்துவிட்டு, அடித்த சிரமம் தாங்கமாட்டாமல் அதன் மேலேயே படுத்துக்கொண்டார்.

உலக ரகஸ்யம்

ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டிய அத்யாச்சரியமான அநேக அறிவு புகட்டும் படங்களுடன் கூடிய 150 விஷயங்களுடன் 350 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 1—0—0

சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

நீலகிரி

காப்பிக்கொட்டை

கீழ்க்கண்ட ரகங்களை சகல சார்ஜும் உள்பட சென்னை ராஜதானியில் அல்லது பம்பாய்க்குத் தெற்கேயுள்ள எந்த ஸ்டேஷனுக்கு வேண்டுமானுலும் அனுப்பப்படும்:—

— வி. பி. ரெயில்வே பார்சல் மூலமாய் —

10 lb எக்ஸ்ட்ரா போல்டு தட்டைக்கோட்டை	ரூபா	5—2—0
கூட்ஸ் வண்டி மூலமாக (Goods Train)		
1×30 lb மூட்டை நீலகிரி "O" சைஸ்	,,	14—4—0
1×30 lb மூட்டை ,, எக்ஸ்ட்ரா போல்டு	,,	12-11—0

இன்னும் இதர காப்பிப்பொடி ௳ தினுசுகளின் விலை விவரங்களுக்கு :: :: கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :: ::

யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி, லிமிடெட்.,

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்

T. ஸ்டேன்ஸ் & Co, Ltd., கோயம்புத்தூர்.

ஸ்தாபிதம் 1910

5 வருஷ உத்திரவாதம். 800 ரூபா மதிப்புள்ளது.

22 காரட் ரோல்டுகோல்டு தங்க ஒட்டியாணங்கள்

விலைகள் சரசமுள்ளதாயும் 300 கெஜ்ஜைகள் கட்டியதும் அசல் சவரன் பொன்னுக்கு ஒப்பானதாக எமது கம்பனியில் கைதேர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு தங்கத்தினுல் செய்த ஒட்டியாணத்திற்கும் இதற்கும் யாதொரு வித்தியாசப்படாமல் தயாரித்துள்ளோம். இதை சிறுவர் முதல் பெரியோர் வரையிலும அணியக்கூடிய ஜாலர் ஒட்டியாணம் 1-க்கு ரூ 6-8-0; ஷை சின்னது 1-க்கு ரூ. 5-8-0; சாதா கெஜ்ஜை வங்கி ஒட்டியாணம் முதல் நெம்பர் 1-க்கு ரூ. 5-8-0; 2-ம் நெம்பர் 1-க்கு ரூ. 3-8-0; 3-ம் நெம்பர் 1-க்கு ரூ. 2-8-0. கைவளையல் பெரிய ஜதை 1-க்கு ரூ 2-8-0; சின்ன ஜதை 1-க்கு ரூ 1-8-0; கழுத்து செயின் சரம் 1-க்கு ரூ. 3-8-0 வி. பி. தபால் சார்ஜ்வேறு.

கே. நாதமுனி அண்டு சன்ஸ், 168, சைனுபஜார்ரோடு, மதராஸ்.

தமிழன்பர்களுக்கு ஓர் நல்விருந்து!

புதுமைக்கவி ஸ்ரீ பாரதியாரின் நூல்களைப் படித்து ஆனந்தமடையுங்கள்.

1.	கவிதைகள் (8-பாகங்கள்)	ரூ.	2—8—0
2.	வசனங்கள் (6-பாகங்கள்)	,,	2—0—0
3.	கதைக்கொத்து	,,	0—8—0
4.	பகவத் கீதை	,,	0—8—0
5.	கட்டுரைகள் பகுதி 1 தத்துவம்	,,	0--10—0
	,, ,, 2 மாதர்	,,	0—8—0
	,, ,, 3 கலைகள்	,,	0—8—0
	,, ,, 4 சமூகம்	,,	0--12—0

6. Bharathi and his works
by Mr. C. Visvanathan, Brother of Bharathi 0 4 0

பாரதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

போலிகளைக் கண்டு உஷார்!!!

அமிர்தாஞ்சனம்

சகல வலிகளையும் போக்கும் இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனம் டிப்போ

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

"குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு)
"பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)

[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிராபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானுல் இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.

ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.

Manager, **Gujarat Samachar & Praja Bhandhu**
AHMEDABAD.

புதுமாதிரி நிட்டிங் லேஸ்

(ஸ்ரீமதி ஆ. ராஜசூடாமணி அம்மாள் எழுதியது.)

[காபிரைட்]

தொடக்கத் தையல் 20 தைத்துக்கொள்ளவும்.

முதல் வரிசை:—2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பால் உள்ளடக்



கம்; நிட் 1, 2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பால் உள்ளடக்கம்; நிட் 9 ஊசிமேல் நூல், 1 பால் உள்ளடக்கம்.

2-ம் வரிசை:—ஊசிமேல் நூல், 1 பால் உள்ளடக்கம்; நிட் 12, அடுத்துவரும் ஊசிமேல் தையலிலேயே முதலில் ஒரு நிட், தையலை ஊசியிலிருந்து எடுக்காமல் அதே தையலில் 1 பால், நிட் 3, ஊசிமேல் நூல் 1 பால் உள்ளடக்கம்.

3-ம் வரிசை:—2 முறை மாறி மாறித் தைக்கவும்; ஊசிமேல் நூல், 1 பால் உள்ளடக்கம்; நிட் 3, 2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பால் உள்ளடக்கம்; நிட் 8, ஊசிமேல் நூல் 1 பால் உள்ளடக்கம்.

4-ம் வரிசை:—ஊசிமேல் நூல், 1 பால் உள்ளடக்கம், நிட் 11, அடுத்துவரும் ஊசிமேல் தையலில் நிட் 1, அதை தையலில் பால் 1, நிட் 5, ஊசிமேல் நூல், 1 பால் உள்ளடக்கம்.

5-ம் வரிசை:—2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பால் உள்ளடக்கம், நிட் 5, 2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல் 1, பால் உள்ளடக்கம், நிட் 7, ஊசிமேல் நூல் 1 பால் உள்ளடக்கம்.

6-ம் வரிசை:—ஊசி மேல் நூல், 1 பால் உள்ளடக்கம், நிட் 10, அடுத்து வரும் ஊசிமேல் தையலில் நிட் 1, பால் 1, நிட் 7, ஊசிமேல் நூல் 1 பால், உள்ளடக்கம்.

7-ம் வரிசை:—2 முறை மாறி மாறித் தைக்கவும், ஊசிமேல் நூல், 1 பால் உள்ளடக்கம்; நிட் 7, 2 முறை மாறி மாறித் தைக்கவும், ஊசிமேல் நூல், 1 பால் உள்ளடக்கம்; நிட் 6, ஊசிமேல் நூல், 1 பால் உள்ளடக்கம்;

8-ம் வரிசை:—ஊசிமேல் நூல், 1 பால் உள்ளடக்கம், நிட் 9, அடுத்துவரும் ஊசிமேல் தையலில் ஒரு நிட், ஒரு பால், நிட் 9. ஊசிமேல் நூல், 1 பால் உள்ளடக்கம்.

9-ம் வரிசை:—2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பால் உள்ளடக்கம்; நிட் 9, 2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பால் உள்ளடக்கம், நிட் 5, ஊசிமேல் நூல், 1 பால் உள்ளடக்கம்.

10-ம் வரிசை:—ஊசிமேல் நூல், 1 பால் உள்ளடக்கம், நிட் 8, அடுத்து வரும் ஊசிமேல் தையலில் நிட் 1, பால் 1 நிட் 11, ஊசிமேல் நூல் 1 பால் உள்ளடக்கம்.

11-ம் வரிசை:—2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பால் உள்ளடக்கம்; நிட் 11, 2 முறை மாறி மாறித்தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பால் உள்ளடக்கம், நிட் 4, ஊசிமேல் நூல், 1 பால் உள்ளடக்கம்.

12-ம் வரிசை:— 6 தையல்களை முடிக்கவும். அதாவது (முதல் 2 தையல்களையும் நிட்டாகத் தைத்து கடைசித் தையலை முந்தின தையலின் பின் பக்கமாகத் தைக்காமல் நழுவ விடவும்) நிட் 2, அடுத்து வரும் ஊசிமேல் தையலில் நிட் 1, பால் 1, நிட் 13, ஊசிமேல் நூல் 1 பால் உள்ளடக்கம் முதல் வரிசையிலிருந்து மாறி மாறித் தைக்கவும்.

மோகன்தாஸ் அல்லது லைலாவின் நவரத்ன லாக்கட்.

இந்தப் புதிய துப்பறியும் நாவலில் மங்கையர் சுகமும் மாங்கனியின்பமும் முன் இன்பம் பின் துன்பம் முதலானதுகள் படிக்கத் திடுக்கிடும்படியோடு துப்பறிதலும் வெகு விசித்திரம். விலை அணு 12.

சுதேசமித்திரன் புத்தகசாலை,
சென்னை.

இந்தியா கவர்ன்மெண்டில் மேடிகல் ஸன்னதுடன் வைத்தியப் பட்டம் பெற்றவரும், கவர்ன்மெண்டு இந்திய வைத்திய கவர்னிங் பாடி & ஸெண்டிரல் போர்டு மெம்பரும், கவர்ன்மெண்டு வைத்திய கலாசாலை & I. M. S. ஹாஸ்பிடல் பரீக்ஷாதிகாரியுமான

வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய

(Sastriar in Govt. Medical dress)

மஹா
பில்வாதி லேகியம்

பித்தவாயு, கீல் பிடிப்பு, பித்த மயக்கம், பலஹீனம், அன்னத்துவேஷம், அஜீர்ணம், மலச்சிக்கல் இவைகளைக் கண்டிக்கும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3. வி. பி. வேறு.

ஆனந்த பற்பொடி

குணம், ருசி, வாசனை இவைகளில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு 0—2—9 ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூபா 1—14—0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

ஆனந்த பற்பசை

ஆனந்த பற்பொடியை பசை ரூபமாக செய்யப்பட்டிருக்கிறது. ட்யூப் 1க்கு 0-8-0 வி. பி. வேறு. எங்கும் கிடைக்கும்.

மேன்மை தங்கிய ஹிஸ் எக்ஸலென்ஸி ஸர் கே. வி. ரெட்டி நாயுடு காரு, Kt, சென்னை மாகாண கவர்னர் அவர்கள் எழுதுகிறார்:—

"வைத்யரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரி, D. V. S. அவர்களால் தயார்செய்யப்படும் மருந்துகளின் அபாரமான வீர்யத்திற்கு நான் நற்சாக்ஷி கொடுக்க மிகவும் ஸந்தோஷமுள்ளவனாக இருக்கிறேன். இவர் நன்றாய்ப் படித்துத் தேர்ந்த ஸம்ஸ்கிருத வித்வானாக இருக்கிறார். இவர் ஸம்ஸ்கிருதத்திலுள்ள வைத்திய சாஸ்திரங்களை நன்றாய் படித்துப் பரிசோதித்து யதோக்தமான அனேக மருந்துகளைத் தயார் செய்வதில் தமது கியானத்தை உபயோகித்து அவைகளை அனுபவத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறார். அப்போர்க்கொத்த இவருடைய மருந்துகளை நான் உபயோகித்ததில் அம்மருந்துகள் உண்மையில் வீர்யமுள்ளவைகள் என்பதை நம்பிக்கையுடன் நான் தெரிந்துகொண்டேன்."

நேரில் வருவோருக்கு கன்ஸல்டிங் சார்ஜ் கிடையாது.

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார்ரோட், மயிலாப்பூர், மதராஸ்

கண்ணோட்டம் - பிரமுகர்கள்

தஞ்சை குமார கான சபை நடிகரான ஸ்ரீமான் என். விஸ்வநாதன். இவர் எழுதியுள்ள "ராஜசேகரா" என்னும் நாடகம் படமெடுப்பதற்கு ஒரு பிலிம் கம்பெனியாச் வாங்கப்பட்டிருக்கிறது.

வைத்தியத்:திலமீமல படிப்பிற்காக இங்கிலாந்து சென்றுள்ள டாக்டர் மிஸ். எஸ். டி. வோரா.

பெய்ஸ்பூர் காங்கிரஸ் ஸ்திரீ தொண்டர்கள் தலைவர் ஸ்ரீமதி ப்ரேமா கந்தர்.

மைசூர் ஜில்லா போர்டு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமான் பி. எஸ். புட்டாசாமி.

சமீபத்தில் லாகூரில் நடைபெறவிருக்கும் ஹிந்து மஹாசபை மஹாநாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் டாக்டர் குர்த்கோடி.



ஈரோடு ஆடிடர் ஸ்ரீமான் என். ஸி. ராஜகோபால் குமாரி ஸ்ரீமதி கண்ணம்மாளுக்கும பாபாயில் மிட்சுயி பூசன் கெய்ஷா கம்பெனியில் அக்கவுண்டெண்டாக விருக்கும் ஸ்ரீமான் வி. ஆர். கோபாலுக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.



குண்டூரில் இப்பீரியல் பாங்கியின் பிராஞ்சில் உத்தியோகம் வகித்து வரும் ஸ்ரீமான் கே. டி. கிருஷ்ணமூர்த்தியின் குமாரி ஸ்ரீமதி தமயந்திக்கும் ரேடியோ எஞ்சினியர் ஸ்ரீமான் எம். எஸ். ராமச்சந்திரனுக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.



சென்னை ஸம்ஸ்கிருத அகாடமியின் ஆதரவில் நடைபெற்ற ஸம்ஸ்கிருத வாக்கு வன்மைப் போட்டியில் ஸ்ரீமான் டி. எம். கணேசன வெற்றிபெற்று மஹாமஹோபாத்தியாய எஸ். குப்புசாமி சாஸ்திரியார் தங்கப் பதக்கத்தைப் பெற்றார்.

அகில இந்தியா ரேடியோ ஸர்விஸில் ப்ரோக்ராம் டைரக்டராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமான் வி. பாஞ்சோதி.



ஸ்ரீமான் சங்கராராவ்தேவ். மஹாராஷ்டிர மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவரான இவர் பெய்ஸ்பூர் காங்கிரஸ் உபசரணைக் கமிட்டித் தலைவராவார்.



பிரபல காங்கிரஸ் ஊழியரான ஜனாப் வி. எம். உபயதுல்லா சாஹெப். இவரது விவாஹம் சமீபத்தில் நடைபெற்றது.

பெய்ஸ்பூர் காங்கிரஸ் தொண்டர் படைத்தலைவர் ஸ்ரீமான் பி. எச். பட்டவர்த்தன்.

ஜஸ்டிஸ் கே. பி. லக்ஷ்மணராவ் தலைமையில் சென்னையில் ''சாரணர் வாரம்'' ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்திய வர்த்தமானம்

சென்னையில் காங்கிரஸ் தலைவர்

காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு சென்ற திங்கட்கிழமை மாலை சென்னை வந்து சேர்ந்தார். தலைவரை வரவேற்க வரும் ஜனங்களுடைய சௌகரியத்தையுத் தேசித்தும் இதர பிரயாணிகளுக்கு அசௌகரியம் ஏற்படாமலிருக்கும்படிச் செய்யவும் எம். எஸ். எம். ரெயில்வே அதிகாரிகள் பொன்னேரியிலிருந்து ஸென்ட்ரல் ஸ்டேஷனுக்குக் காங்கிரஸ் தலைவருக்காக ஸ்பெஷல் ரயில்விட்டனர். ஸென்ட்ரல் ஸ்டேஷனிலும் வெளியிலும் பல்லாயிரக்கணக்கான ஜனங்கள்கூடிக் காங்கிரஸ் தலைவரை வரவேற்றனர். பண்டித ஜவஹர்லால் நேரு சென்னையில் வெள்ளிக்கிழமைவரை தங்கியிருந்து பிறகு தமிழ்நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தை ஆரம்பிக்கிறார்.

* * * *

சென்னைக் கார்ப்பரேஷனில் செருப்பு வீச்சு

பண்டித ஜவஹர்லால் நேரு சென்னைக்கு விஜயம் செய்கையில் அவருக்கு உபசாரப் பத்திரமளிக்க வேண்டுமென்ற தீர்மானத்தைப்பற்றி யோசிக்க 20 அங்கத்தினர்கள் கையெழுத்திட்டு அனுப்பிய வேண்டுகோளின்பேரில் மேற்படி கூட்டம் நடைபெற்றது. உக்ரமான விவாதத்திற்குப் பின் தீர்மானம் [illegible]கப் பெ[illegible]வேறியது. சில கௌன்ஸிலர்கள் 'காந்திக்கு ஜே' என்று கோஷம் செய்தனர். விசிட்டர்கள் ஹால் முழுவதும் நிரம்பியிருந்தனர். அவர்களில் சிலரும் இந்தக் கோஷத்தில் கலந்துகொண்டனர். இச்சமயம் பழைய செருப்புகள் இரண்டும் சில முட்டைகளும் ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினர்கள் மத்தியில் விழுந்தன. மேயர் விசிட்டர்களனைவரையும் வெளியே போகச் சொன்னார். பிறகு கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

* * * *

பள்ளிக்கூடங்களில் வந்தே மாதரம் பாட்டு

முனிஸிபல் ஹிந்தி மராத்தி பள்ளிக்கூடங்களிலெல்லாம் பிரதிதினமும் வகுப்புகள் ஆரம்பிக்கு முன்பு வந்தேமாதரம் வந்தனைப்பாட்டு கட்டாயமாகப் பாடப்படவேண்டுமென்று நாகபுரி நகர சபையார் தீர்மானித்திருக்கிறார்கள். உருது பள்ளிக்கூடங்கள் இதற்காக்ஷேபித்தால், அவற்றை விதிவிலக்குச் செய்ய நகர சபைத்தலைவருக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

* * * *

தேர்தலில் அதிகாரிகள் தலையீட்டைத் தடுக்க வேண்டுகோள்

தேர்தலில் அதிகாரிகள் தலையீட்டைத் தடுக்கவேண்டுமென்று வற்புறுத்துவதற்காக இந்தியா சட்டசபையில் டாக்டர் கான் சாகிப் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். சர்க்கார் ஊழியர்கள் நேர்முகமாகவாவது அல்லது மறைமுகமாகவாவது தலையிடாதிருக்கச் சர்க்கார் உடனே[illegible]

பிராட்காஸ்ட்

புதிய ரிகார்டுகள்

பிராட்காஸ்ட் அக்டோபர் வெளியீட்டு ரிகார்டுகள் எப்போதும்போல் உயர்தரமானவையாக விருக்கின்றன.

ஞான சௌந்தரி நாடகத்திலிருந்து ஒரு தர்க்கத்தை ஸ்ரீமான் எஸ். வி. சுப்பையா பாகவதரும் ஸ்ரீமதி எம். எஸ். விஜயாளும் நடத்தியிருக்கின்றனர். இந்த ரிகார்டு பல வகைகளில் போற்றற்குரியது. ஸ்ரீமான் பாகவதரின் சாரீரம் சற்று கனமானது. பிருகா நிறைந்தது. கீழ் ஸ்தாயிகளில் மிகவும் உதவுபடியானது. ஸ்ரீமதி எம். எஸ். விஜயாளின் சாரீரம் மெல்லியது. கனிப்பானது. எந்த ஸ்தாயியிலும் இனிமை பயப்பது. இவ்விருவரும் சேர்ந்து நடத்தியிருக்கும் தர்க்கம் சங்கீத நயம் செறிந்து விளங்குவதோடு செவிக்கும் விசேஷ இன்பத்தை யளிக்கிறது.

* * * *

ஸ்ரீமதி சுந்தரகாமாக்ஷி

மாண்டு, சாரங்கா ராகங்களில் இரண்டு தமிழ்ப் பாட்டுகளைப் பாடியி[illegible] இவைகள் இவர் சங்கீதத்தின் உயர்வைக் கண்டுகொண்டிருப்பார்கள். பிரஸ்தாப ரிகார்டில் இவர் சாரீரத்தின் நயம் முற்றிலும் வெளியாகிறது.

* * * *

பபூன் ஷண்முகம்

இம்முறை "ஓட்டுக்குக் கையெழுத்து" என்ற பாட்டையும் "தங்க மேத்தா" என்ற பாட்டையும் பாடியுள்ளார். இவற்றுள் முதல் பாட்டு நொண்டிச் சிந்து மெட்டில் அமைந்துள்ளது. பாட்டின் விஷயமும் நகைப்பை யுண்டுபண்ணக்கூடியது. மற்றைய பாட்டு பிராட்காஸ்ட் கம்பெனி முதலாளிகளைப் பற்றியது.

* * * *

மிஸ அநுசூயா வெலங்கி ராயுடு பதமொன்றையும் ஒரு நிருத்ய கீதத்தையும் பாடியிருக்கிறார். இவை யிரண்டும் அழகாக அமைந்திருக்கின்றன. பொருட் செறிவிலும் சங்கீத நயத்திலும் இந்த ரிகார்டு மிக உயர்தர ரிகார்டுகளில் ஒன்றாக மதிப்பிடப்படவேண்டிய

பண்டித ஜவஹர்லால் நேரு சென்னைக்கு விஜயம் செய்தபோது சென்ட்ரல் ஸ்டேஷனில் வரவேற்கப்பட்ட காட்சி.

வேண்டுமென்பது மேற்படி தீர்மானத்தின் சாரமாகும். இது சம்பந்தமாக நடந்த விவாதத்தில் சட்ட மெம்பர் ஸர் என். என். சர்க்கார் தேர்தலில் தலையிடாதிருப்பதே சர்க்காரின் முறை என்று கூறி நடு நிலைமைக்கு மாறாக நடந்ததாக நிரூபணமாகியவர்கள் மீது கண்டிப்பான நடவடிக்கை எடுக்கவேண்டுவது சர்க்காரது விருப்பமாகும் என்றும் உறுதிமொழி கூறினர். விவாதம் முடியாமல் மற்றொரு நாளைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

* * * *

தஞ்சை—பட்டுக்கோட்டை ரயில்பாதை

தஞ்சைக்கும் பட்டுக்கோட்டைக்கும் ரயில் போடும் பிரச்னையைப் பரிசீலனை செய்து பார்த்ததில் அது லாபகரமாகவிராதென்று தெரியவந்ததாயும், சென்னை சர்க்கார் உத்தரவாதம் கொடுத்து லயன் போடப்பட வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தாலன்றி, மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட மாட்டாதென்றும் இந்தியா சட்டசபையில் சர்க்கார் அறிவித்திருக்கின்றனர்.

* * * *

மாகாணத் தேர்தல்கள்

மாகாணத் தேர்தல்கள் சம்பந்தமாகக் காங்கிரஸ் தலைவரான பண்டித ஜவஹர்லால் நேருவும் அகில இந்திய சட்டசபைக் கமிட்டித்தலைவரான ஸர்தார் வல்லபாய் படேலும் ஒன்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர்:—

இந்தியா சட்ட சபையிலுள்ள காங்கிரஸ் அங்கத்தினர்கள் மாகாண சட்டசபைத் தேர்தல்களுக்கு அபேட்சகர்களாக நிற்கலாமாவென்று பல

இதில் எவ்விதக் கொள்கைகளும் சம்பந்தப்படவில்லை. நிலைமைக்குத் தகுந்தவாறு இவ்விஷயத்தைத் தீர்மானிக்க வேண்டும். பொதுவாக இந்தியா சட்டசபை யங்கத்தினர்கள் இருந்தவிடத்திலேயே இருக்கவேண்டும். மாகாண சட்டசபைத் தேர்தல்களுக்கு நிற்கக்கூடாது. மாகாணப் பிரச்னைகள் சம்பந்தப்பட்ட விசேஷ நிலைமையில், மாகாணச் சட்டசபைத் தேர்தல்களுக்கு அபேட்சகர்களாய் நிற்க இந்தியா சட்ட சபை அங்கத்தினர்களுக்கு அநுமதி கொடுக்கப்பட வேண்டும்.

* * * *

"சர்க்கார் பென்ஷனர்கள் காங்கிரஸ்காரர்களாக நிற்கலாம்"

ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி இந்தியா சட்ட சபையில் கேட்டகேள்வியொன்றின் பதில் மூலம் ஒரு முக்கியமான விஷயம் வெளியாகியிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:—மாகாணச் சட்ட சபைத்தேர்தல்களில் பென்ஷன் பெற்ற சர்க்கார் ஊழியர்கள் எந்தக் கக்ஷியின் அபேக்ஷகர்களாகவும் நிற்கக்கூடாதெனத் தடுக்கும் உத்தரவெதுவும் பிறப்பிக்கப்படவில்லை. கவர்ன்மெண்டைக் கவிழ்ப்பதற்கான இயக்கமெதிலாவது சேர்ந்துகொள்ளும் பென்ஷனர்கள்மீது சர்க்கார் நடவடிக்கை எடுத்து வந்தனர். ஒரு சமயத்தில் காங்கிரஸ் கவர்ன்மெண்டைக் கவிழ்ப்பதற்கான இயக்கங்களை நடத்தி வந்தது. இப்பொழுது காங்கிரஸ் அபேக்ஷகர்களாக நிற்கும் கவர்ன்மெண்ட் பென்ஷனர்கள்மீது சர்க்கார் நடவடிக்கை எதுவும் எடுக்க உத்தேசிக்கவில்லை.

* * * *

(24-ம் பக்கம் பார்க்க)

1 & 2 மேலக்கோபுர வீதி
மதுரையில்
நரசுஸ்
சுத்தமான
கா...பித்தூள், நீலகிரி காப்பிக்கொட்டை
தேயிலை
முதலியவைகளை விற்பனை செய்ய
12-...வது கிளை ஆபீஸ் திறக்கப்பட்டிருக்கிறது.
...த சரக்கு! நயமான விலை !!
உயர்ந்... மின்சார இயந்திரங்களுடன் அமைக்கப்பட்டிருக்கிறது.
நாகரீக ...
நரசு... ஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி,
மதுரை, பிராஞ்சு:
H. O. SAL... EM.
...தென்னிந்தியாவெங்கும் கிளை ஆபீஸ்கள்:—



“ஸோஹாக்—கா—தான்” என்ற ஹிந்தி பேசும் படத்திலிருந்து ஒரு காட்சி. இது லாகூர் தாஜ் கம்பெனியாரின் படம்.

* * படங்களில் உல

மாஜி அரசர் அமனுல்லா கான். ஆப்கானிஸ்தானத்தில் இரான் எல்லைப்புறத்தில் குழப்பங்கள் ஏற்பட்டிருப்பதாயும் அமனுல்லா தம்மால் முன்பு இழக்கப்பட்ட சிம்மாதனத்தைத் திரும்பப் பெறச் சண்டையை ஆரம்பித்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.



டென்னஸ்ஸி ஆற்றில் கட்டப்பட்டு வரும் "வீலர் தேக்கம்" வெகு சமீ
50 அடி உயரமுமுள்ள இத்தேக்கத்தை கட்ட



இங்கிலாந்தில் ஸாலிஸ்பரி பள்ளத்தாக்கில் பிரிட்டிஷ் டாங்கிகளின் அணிவகுப்பு நடைபெற்றது.



1940-ம் வருஷத்திய ஒலிம்பிக் ஆட்டங்க
கமிட்டி தீர்மானித்திருப்பது ஜப்பானில் ம
தீர்மானத்தைக் கொண்டாடுவதற்காக டோ
வ

லகச் செய்திகள்



து சமீபத்தில் திறந்து வைக்கப்படும். 100 சதுர மைல்கள் விஸ்தீரணமும
கட்ட 19[illegible]-ம் வருஷத்தில் வேலை ஆரம்பமாயிற்று.

ஸ்பெயினிலிருந்து ஜனங்கள் வெளியேறிக்கொண்டிருக்கின்றனர்; பலர் ஹெண்டே நதியைக் கடந்து பிரான்ஸில் குடியேறிவிட்டனர். ஸ்திரீகள் பிரான்ஸின் எல்லையில் நதிக்கரையிலிருக்கும் காட்சி. முன்னால் சிறுவர்கள் கவலையற்று விளையாடிக் கொண்டிருக்கின்றனர்.



ட்டங்களை ஜப்பானில் நடத்துவதென்று சர்வதேச ஒலிம்பிக்
ரில் மிகுந்த உற்சாகத்தையுண்டுபண்ணியிருக்கிறது. மேற்படி
டோகியோ விளையாட்டுச் சங்கங்கள் ஒன்று சேர்ந்து நடத்திய
விளையாட்டுகள்.

மேல் நாடுகளுக்குச் சென்றிருந்த ஸர் நௌரோஜி சக்ளத்வாலா தமது மனைவியுடன் சென்ற வாரம் பம்பாய் வந்து சேர்ந்தார்.

1940-ம் வருஷ ஒலிம்பிக் விளையாட்டுகளை ஜப்பானில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டிருப்பது டோகியோ நகரெங்கும் விசேஷ உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டிருக்கிறது. முனிஸிபல் லாரிகளெல்லாம் ஒலிம்பிக் கொடிகளால் அலங்காரம் செய்யப்படுகின்றன.

சமீபத்தில் இத்தாலியில் இராணுவ அணிவகுப்பு நடைபெற்றது. டாங்கிகள் அணிவகுத்துச் செல்வதை ஸீனர் முஸோலினி பார்வையிட்ட காட்சி.

சென்னையில் கல்வி வாரம் வேப்பேரியிலுள்ள ஸெயிண்ட் பால்ஸ் பள்ளிக்கூடத்தில் சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் மிஸ்டர் ஹார்வில்லினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பிரபஞ்ச வர்த்தமானம்

பிரிட்டன்—தென்னாப்பிரிக்கா விமானப் போட்டி

இந்தப் போட்டியில் மிஸ்டர் ஸி. டபிள்யூ. ஏ. ஸ்காட் வெற்றியடைந்திருக்கிறார். விமானி இங்கிலாந்திலுள்ள போர்ட்ஸ்மத்திலிருந்து ஜோஹன்ஸ் பார்க்கிற்குச் செல்ல வேண்டுவதே இந்தப் போட்டியாகும். இவ்விரண்டிடங்களுக்குமுள்ள தூரம் 6,150 மைல். இதை ஸ்காட் 52 மணி 56 நிமிஷம் 48-2 விநாடி நேரத்தில் கடந்திருக்கிறார். இவர் மணிக்குச் சராசரி 123 மைல் வேகத்தில் சென்றிருக்கிறார்.

* * * *

அபிஸீனிய மன்னர் அரசுரிமையைத் துறப்பாரா!

சமீபத்தில் நடந்த சர்வதேச சங்கப் பொதுச்சபையின் கூட்டத்தில் அபிஸீனியப் பிரதிநிதியான டாஸாஸ் ஒரு மர்மமான அறிக்கை விடுத்தார். இத்தாலியர் மீண்டும் அபிஸீனியர்களைத் தாக்கவிருப்பது பற்றி டாஸாஸ் குறிப்பிட்டு "இந்நிலையில் தமது குடிகளின் உயிருக்கும் அவர்களது தேச சுதந்திரத்துக்கும் பாதகம் நேராதிருக்கும்பொருட்டு அபிஸீனிய மன்னர் சங்க உடன்படிக்கைப்படிப் பாதுகாக்கப்பட்டுள்ள தமது உரிமைகளைத் தியாகம் செய்ய இணங்குவது தமது கடமையென எண்ண வேண்டியிருக்கிறது" என அவர் அறிவித்தார். இதிலிருந்து அபிஸீனிய மன்னர் தமது அரசுரிமையை உடனே துறக்கவிருக்கிறாரென முதலில் தோன்றியது. ஆனால் அபிஸீனியாவில் சில பாகங்களை இத்தாலியர் ஜெயித்திருப்பதை நெகஸ் அங்கிகரிக்கத் தயாராகவிருக்கிறாரென்பதும் அதற்குக் கைம்மாறாகப் பாக்கியுள்ள பிரதேசங்களில் அவரது அரசுரிமைக்குப் பாதகம் விளைக்கக் கூடாதென்பதுமே அதன் பொருளெனப் பிறகு கூறப்பட்டது.

* * *

ஸ்பெயின் கலக நிலைமை

ஸ்பெயின் கலவரத்தில் சிறிது ஓய்வு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. தலவிராவில் கலகக்காரர்கள் துருப்புகளைச் சேர்த்து வருகின்றனர். ஸ்பெயின் தலைநகரான மாட்ரிட் நகரைத் தாக்குவதற்கு அவர்கள் ஏற்பாடு செய்து வருகின்றனர். இதைத் தடுக்கச் சர்க்கார் துருப்புகளும் முயற்சி செய்து வருகின்றனர்.

ஸ்பானியக் கலகத் தலைவரான ஜெனரல் பிராங்கோ ஸ்பானிய மக்களுக்கு ஒரு பிரகடனம் விடுத்திருக்கிறார். அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:—"இனி ஸ்பெயினில் போர்ச்சுகலில் இருப்பது போன்ற பாஸிஸ்டு ஆட்சிமுறை ஸ்தாபிக்கப்படும். அனைவரும் வேலை பெற்று சந்துஷ்டியான வாழ்க்கை நடத்த திட்டமான ஏற்பாடு செய்யப்படும். இனி முதலாளித்துவ ஆதிக்கத்துக்கு இடமிருக்காது. எல்லாத் தொழிலாளருக்கும் குறைந்த அளவு கூலி விகிதம் நிர்ணயிக்கப்படும். ஏற்கனவே பலர் பெற்றுள்ள உரிமைகள் விஷயத்தில் புதிய சர்க்கார் தலையிடமாட்டார்கள். சுய நலத்தை முன்னிட்டு சமூகத்துக்குத் தீங்கிழைப்பதையே தொழிலாகக் கொண்டோர் அடியோடு வீழ்த்தப்படுவர். ரோமன் கத்தோலிக் சர்ச்சைச் சேர்ந்தவர்களுடன் நல்லுறவு வளரக்கூடியவாறு ஒரு சமரச ஏற்பாடு செய்து கொள்ளப்படும். புதிய சர்க்கார் ரஷ்யாவைத் தவிர மற்றெல்லா நாடுகளுடனும் நட்புறவு இருந்துவரக் கூடிய முறையில் நடந்துகொள்வர். ரஷ்யா மட்டும் ஸ்பெயினின் விரோதியாக மதிக்கப்படும்.

* * * *

மற்ற பக்கங்களில்

நாரீ திலகம்	1
தென்னிந்தியப் பிரமுகர்கள்	2
விநோதக்கொத்து	5
ஸங்கீதப்பகுதி	6
கூஷ்மாண்ட தர்மம் (சிறுகதை)	9
கைரேகை மர்மங்கள்	10
வனஜாவைக் கண்டித்தல் (ஹாஸ்யப்பகுதி)	13
தையல்வேலை	15
கண்ணோட்டம் - பிரமுகர்கள்	16
இந்தியவர்த்தமானம்	17
புதிய பிராட்காஸ்ட் ரிகார்டுகள்	17
பிரபஞ்சவர்த்தமானம்	23
நாட்டு நடப்பு- சித்திரக் கண்ணாடி	25
பாட்டியின் அழுகை (சிறுவர் கதை)	27
ஜம்புலிங்கத்தின் திருவிளையாடல்கள் (தொடர்கதை)	29
அதிசயம் ஆனால் உண்மை	2
நவநாகரீகம்	33
சாமியின் சாமர்த்தியம்	36

பாலஸ்தீனத் தொல்லை

பாலஸ்தீனத் தொல்லை இன்னும் தீர்க்கபாடில்லை. இங்கிலாந்தில் பாலஸ்தீன ராணுவச் சட்ட உத்தரவெனப் பெயர் கொண்ட ஒரு மன்னர் உத்தரவு வெளியிடப்பட்டிருக்கிறது. இதன்படி பொது பந்தோபஸ்துக்கும் பாலஸ்தீனத்தின் தற்காப்புக்கும் பாதகம் நேராமல் செய்வதற்கான சட்டங்கள் இயற்றுவதற்கு அங்குள்ள ராணுவத் தலைவருக்கு அதிகாரம் கொடுக்க ஹை கமிஷனருக்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. பிறகு ஹை கமிஷனர் ராணுவத் தலைவரான ஜெனரல் டில்லுடன் கலந்து யோசித்து, அடுத்த பிரகடனத்தை எப்பொழுது வெளியிடுவதென முடிவுசெய்வார். இப்பிரகடனத்தின்படி ராணுவக் கோர்ட்டுகள் ஸ்தாபிக்கவும், சாதாரணக் கோர்ட்டுகளின் அதிகாரத்துக்குட்படாத சட்டங்கள் இயற்றவும், செய்தித் தணிக்கை செய்யவும் யாரையும் கைதுசெய்து நாடு கடத்தவும், துறைமுகங்களில் கட்டுப்பாடு செய்யவும், தரை, கடல், ஆகாயப் போக்குவரத்து, வர்த்தகம் இவை சம்பந்தமாகக் கட்டுப்பாடுகள் விதிக்கவும், கூட்டு முறையில் அபராதம் விதிக்கவும், தண்டிக்கும் முறையில் சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும், அழிக்கவும் ஜெனரல் டில்லிக்கு அதிகாரம் கொடுக்கப்படும்.

* * *

சீனா-ஜப்பான் தகராறு

சீனா-ஜப்பான் தகராறு நெருக்கடியான நிலைமையிலேயே இருந்து வருகிறது. தங்களுக்கும் சீனாவுக்குமுள்ள தகராறுகள் தீரத் தங்களுடைய கோரிக்கைகள் பலவற்றை சீனர் ஏற்றுக்கொண்டாக வேண்டுமென ஜப்பானியர் தெரிவித்திருக்கிறார்கள். இவற்றுள் ஜப்பானியக் குடிகளைப் பாதுகாக்கும்பொருட்டு யாங்ட்ஸ் பள்ளத்தாக்கிலுள்ள பல்வேறு ஸ்தலங்களில் ஜப்பானியத் துருப்புகளை நிறுத்தி வைக்க உரிமையளிக்கவேண்டுமென்பதும் ஒன்று எனத் தெரிகிறது.

மற்ற கோரிக்கைகளில் முக்கியமானவை வருமாறு:— "வடபாகத்திலுள்ள ஐந்து மாகாணங்களுக்குச் சுதந்திரமளிக்க வேண்டும். சீன பள்ளிக்கூடப் பாடபுத்தகங்களில் ஜப்பானியர்மீது துவேஷமுண்டாக்கக் கூடிய பாடங்கள் இல்லாமற் செய்யும் பொருட்டு, அப்புத்தகங்களைத் திருத்தும் உரிமை ஜப்பானியருக்கிருக்க வேண்டும். இரு நாடுகளுக்கும் பொருளாதார விஷயத்தில் ஒத்துழைப்பு ஏற்படவேண்டும்.

இதற்கு போட்டியாக சீனர் [illegible]

டிருக்கின்றனர். அவற்றின் விவரம் வருமாறு:—

ஜப்பானியர் கள்ளத்தனமாக துப்பாக்கிகள் முதலிய சரக்குகளை சீனாவில் இறக்குமதி செய்வதைத் தடுக்க வேண்டும். கிழக்கு ஹோபெயில் உள்ள சுயேச்சை சர்க்கார் விஷயத்தில் நாங்கிங் சர்க்கார் தங்கள் இஷ்டம் போல் நடவடிக்கை எடுத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும். வட சீனாவில் அதிகப்படியாகவுள்ள ஜப்பானியத் துருப்புகளைத் திரும்பஅழைக்க வேண்டும். சீனாவின் உட்பாகத்திற்குச் சென்றிருக்கும்

காலஞ் சென்ற ஹங்கேரி தேசப் பிரதம மந்திரி ஜெனரல் கோம்போஸ்

ஜப்பானியப் படையைத் திரும்ப அழைக்க வேண்டும். சீனாவின் உள்நாட்டு விவகாரங்களில் ஜப்பானிய ராணுவம் தலையிடக்கூடாது. டங்கு—ஷாங்கை சமரச ஒப்பந்தங்களை ரத்து செய்துவிட வேண்டும்.

* * * *

கள்ளத்தனமான சாராயம்

அமெரிக்கா மயக்கந்தரும் பானத்தடுப்பு இலாகா அதிகாரிகள் கள்ளத்தனமாகச் சாராயம் காய்ச்ச உபயோகிக்கப்பட்டு வந்த நூற்றுக் கணக்கான கருவிகளைக் கைப்பற்றியிருக்கின்றனர். இது சம்பந்தமாகச் சட்டத்தை மீறுவோர்மீது அதிகாரிகள் கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகின்றனர். சுமார் ஆயிரம் பேர் வரை கைதி செய்யப்பட்டிருக்கின்றனராம்.

பிரதாப சிம்மன்

நம் இந்திய நாட்டில் வீரப் பிரதாபனாய் விளங்கிய பிரதாப சிம்மனது சரிதையினைக் குழந்தைகளும் படித்தறியுமாறு எளிய நடையில் எழுதி அழகிய பல படங்களுடன் உயர்ந்த பேப்பரில் வெளியிடப்பட்டுள்ளது. விலை அணா ஐந்தே.

சுதேசமித்திரன் புத்தகசாலை,
சென்னை.

இந்திய வர்த்தமானம்

(18-ம் பக்கம்தொடர்ச்சி)

பெண்ணின் மனதைக் கவர்ந்த பிச்சைக்காரன் சங்கீதம்

ஒரு முஸ்லிம் பிச்சைக்கார ப்பாடகன் தனது மதுரமான பாடலினால் கோட் பெல்லில் (ஷெயிக்புரா) என்ற ஊரிலுள்ள ஒரு வீட்டிலிருந்து ஒரு பட்டாணியப் பெண் மனதைக் கவர்ந்து அவளை அழைத்துக்கொண்டு போனதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. அவன் பெண்ணுடன் ஜம்முவில் இருந்தபோது போலீஸார் சந்தேகப்பட்டு அவனைக் கைது செய்தனராம்.

* * * *

ஒரு தீர்மானத்திற்கு 100 மெம்பர்கள் கையொப்பம்

இந்தியா சட்டசபையில் வரவிருக்கும் ஒரு தீர்மானத்திற்கு 100 மெம்பர்கள் கையொப்ப மிட்டிருக்கிறார்கள். சர்வதேச சங்கத்திலிருந்து இந்தியா விலகிக்கொள்ள வேண்டுமென்றும் அதற்கு வருஷந்தோறும் கொடுத்து வரும் பகுதிப் பணத்தை நிறுத்தவேண்டுமென்றும் இத்தீர்மானம் கூறுகிறது. இதை அக்கிராசனர் விவாதத்திற்கு ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

"மாடர்ன் டயமண்ட்ஸ்"

ஐரோப்பியா, இந்தியா வைரவியாபாரிகளால் போற்றப்பெற்றவை.
ஹைகோர்ட்டு நீதிபதிகள், ராஜாக்கள், ஜெமீன்தார்கள், பிரபுக்கள் முதலியவர்களால் உபயோகிக்கப்படுபவை.

இழைக்கப்பட்ட ஆபரணங்கள் அருமையான அமைப்பு, நேர்த்தியும், அழகும் மிகுந்தவை.

ஒரு முறை பரீக்ஷித்து உண்மை அறியுங்கள்.

ஸி. ஸி. ஆச்சார்யுலு & ஸன்,

S—63, பொன்னப்ப செட்டி தெரு, பார்க் டவுன், மதராஸ்.

மழை கொட்டுகிறது!
குளிர் நடுக்குகிறது!

வீட்டுக்குள்ளேயே இருக்க முடியுமா?

முடியாது. நீங்கள் வேலைக்குப் போகவேண்டும் அல்லது கடையைக் கவனிக்கவேண்டும்.

ஆனால் மழை உங்களை நனைக்கிறது; குளிர் உங்களை நடுக்குகிறது—உங்கள் ஊக்கம் குறைகிறது. தேகத்தில் செழிப்பான சிவந்த இரத்தம் நிறைந்திருந்தால், நீங்கள் எதையும் எதிர்த்து நிற்கலாம். இவ்வகையில் சிறந்த இரத்த டானிக்

அமிர்தா

எல்லா மருந்து வ்யாபாரி களிடமும் கிடைக்கும்
அல்லது
கேஸரி குடீரம், மதராஸ்.

நாட்டு நடப்பு சித்திரக் கண்ணாடி

பம்பாய், தார்தியோவிலுள்ள ஒரு ஸோப்புத் தொழிற்சாலையில் ஓர் மூலையில் இடது பக்கப் படத்தில் காணப்படும் நாகம் சென்றவாரம் ஒருநாள் காலை காணப்பட்டது. அதைப்பார்க்க ஏராளமான ஜனங்கள் கூடினார்கள். நாகம் ஒருவரையும் தீண்டவில்லை. சிலர் அதற்குப்பால் வார்த்தனர். பிறகு அன்று இரவு அது திடீரெனக் காணமற் போய்விட்டது.

சென்னையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை 10 மைல் நடக்கும் போட்டியொன்று நடைபெற்றது. அதில் வெற்றிபெற்றவர்கள் படத்தில் காணப்படுகின்றனர். (இடது பக்கமிருந்து) ஸ்ரீமான் வி. மோஹனம் (முதலாவதாக வந்தவர்) ஸ்ரீமான்கள் என சந்தானம், கே. பாண்டுரங்கம் எம். ஆர். ஸ்ரீனிவாஸன் (இரண்டு, மூன்று, நான்காவதாக வந்தவர்கள்.)



மகாத்மாஜி பிறந்த தினக்கொண்டாட்டம் பம்பாய் காங்கிரஸ் மாளிகையில் கொண்டாடப்பட்டது. ஸ்ரீமதி சரோஜனி தேவி தேசியக் கொடியை யேற்றுவித்தார்.

(இடது பக்கம்)

சென்னை அடையாற்றில் டாக்டர் பெஸண்ட் பிறந்ததினக்

கொண்டாட்டம் நடைபெற்ற...

தமிழ்நாட்டில்
குறைந்த சந்தா மாதப்பத்திரிகை

“ சி த் த ன் ”

ஒன்றே. கட்டுரைகள், கதைகள், ஹாஸ்யம், உலக விநோதம், வைத்தியக்குறிப்பு. சினிமா விமர்சனம், முதலியனகொண்டது மாதிரிப்பிரதி இனம். 3000 பிரதிகள் வெளியாகின்றன. விளம்பர விகிதம் குறைவு. சந்தா உள்நாடு அணா 8. வெளிநாடு ரூ. 1.

மானேஜர், சித்தன், பழனி.

வெண் குஷ்டம்
பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். நிவர்த்திக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக,

KAMALA WORKS (S. M.)
Panchpota—Bengal, India.

ஜோதிஷ மகுட வர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சுகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் “உலக சிரேஷ்டர்” என வெற்றி பாமாலையும் தங்க சன்னதங்களும் பெற்றவர்.

ஜாதகம்-லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1 ஒரு தெசைக்கு புக்தி பலன் ரூ 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா 7. ஜாதக குறிப்பு முன் பணம் ரூபா 4. தேவை.) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரோபஸர் **N.** சுப்பிரமணியம்,
நெ. 2 (ஜோதிஷ ஆசிரமம்)
வாலாஜாபாத், S. I. R. சென்னை.

“குப்த மந்திரம்”

ரூபா 100 இனம்.

லக்ஷம் லக்ஷமாகப் பணத்தைச் செலவழித்துச் சாதிக்க முடியாத காரியங்களை இந்த மந்திரத்தை எழு தடவை ஜபித்துச் சாதிக்கலாம். கஷ்டமெதுவுமில்லை. முன் தயாரிப்பு அவசியமில்லை. யாவரும் உங்களை நேசிப்பார்கள். இது ஓர் **‘வசீகரண மந்திரம்’** உங்களுக்கு அதிர்ஷ்டமுண்டாகும்; வியாஜ்யத்தில் வெற்றியும், வியாபாரத்தில் லாபமும் அளிக்கும். பலனில்லையென நிரூபிப்பவர்க்கு ரூ 100 இனம். தபால் செலவு உள்பட ரூ 2-7.

SIDDHA MANTRA ASHRAM

மலரிற் சிறந்தது மல்லிகை

குக்கரிற் சிறந்தது ருக்மணி

போலி குக்கர்களைக் கண்டு ஏமாறாதீர்கள்.
எல்லா குக்கர்களும் குக்கர்களாகாது.

ருக்மணி குக்கர்

தான் எந்தக் காலத்திலும் ஆரோக்யமும் சூடுமான ஆகாரத்தைக் கொடுக்கும். எல்லோரும் வாங்கும் பொருட்டு விலைகளையும் குறைத்திருக்கிறோம். 1 முதல் 16 பேர்கள் வரை சாப்பிடக் கூடிய 7 அளவுகள் 9 ரூபாய் முதல் 38 ரூபா வரை இருக்கின்றன.

விபா புத்தகம் இனம்.

ருக்மணி குக்கர் கம்பெனி,

ராயபுரம், (12) **சென்னை.**

எமது ஏஜெண்டுகள் :

திருவண்ணாமலை:—ராவ்சாகிப் M. சேஷாசலம் அய்யர்.
சேலம்:—சேலம் சுதேசி எம்போரியம் (போலீஸ் ஸ்டேஷன் எதிரில்.)
மதுரை:—மதுரை கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ், நாய்க்கர் புதுவீதி.
திருநெல்வேலி டவுன்:—P. K. சாமி & கோ, தெற்கு ரதவீதி.
தூத்துக்குடி:—V. S. S. காளியப்ப நாடார், கிரேட் காட்டன் ரோடு.
கோயமுத்தூர்:—பெனாரிஸ் சில்க் எம்போரியம் 115, ராஜவீதி.
கரூர்:—S. K. ராஜகோபால் செட்டியார் திண்டுக்கல் ரோடு.
நாகைப்பட்டினம்—நாகை நாஷனல் எம்போரியம் லிமிட்டெட்.
திருச்சினாப்பள்ளி:—S. முத்துக்குமாரசாமிப் பிள்ளை ஜெனரல் மோட்டார் ஸ்டோர்ஸ்.

வைத்திய ரத்னம்
பண்டித **எம். துரைஸ்வாமி ஐயங்கார்**
ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்ய அவர்களால்
ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவை.

இரண்டு பிரபல வைத்திய நூல்கள்.

1. சார்ங்கதர ஸம்ஹிதை

வைத்தியர்களுக்கும், எல்லாக் குடும்பங்களுக்கும் வெகுஉபயோகமானது. வைத்திய பரிபாஷைகள், எல்லா ரோகங்களுடையவும் விவரணம், சூர்ண - கஷாய- லேஹ்ய- தைல-கிருத -லேபந- பஸ்ம-ஸிந்தூராதி ஸகல முக்கியமான ஔஷத முறைகள், எல்லா வியாதிகளுக்கும் லவித சிகித்ஸா முறைகள் ஆக எல்லாம் ஒழுங்காக விவரிக்கப்படுகின்றன. முகவுரை, உரை, விஷய அகராதி முதலியவை விஸ்தாரமானவை. 3 கண்டங்களும் 32அத்தியாயங்களும் அடங்கியது. 3-ம் பதிப்பு.

உயர்ந்த பைண்டு விலை ரூ. **5-4-0**
2-ம் தரம் பைண்டு ,, ரூ. **4-4-0**

2. இரஸரத்தின ஸமுச்சயம்

என்னும் சித்த ரஸாயன நூல் கந்தகம், தாளகம், இரஸம், பொன், வெள்ளி, அயம் முதலியவற்றை சுத்தி-பஸ்ம - ஸிந்தூராதிகளாகச்செய்யும் நூற்றுக்கணக்கான சிறந்த முறைகளும், புடபாகாதிகளுக்கான கருவிகளின்விவரணங்களும் அடங்கியது. முகவுரை, உரை, விஷயஅகராதி முதலியவை விஸ்தாரமானவை.

உயர்நத பைண்டு விலை ரூ. **4-8-0**
2-ம் தரம் பைண்டு ,, ரூ. **3-8-0**

இரண்டு பிரபல காவ்ய நூல்கள்.

1. காதம்பரி

1300-வருடங்களுக்கு முன் பட்டபாண மஹா கவி ஸம்ஸ்க்ருதத்தில் இயற்றிய அத்புத வசன காவ்யத்தின மொழி பெயர்ப்பு. கதையின் வரலாறு ஆச்சர்யகரமானது. இந்தியாவின் பிராசீன நாகரீக மேன்மையை விளக்குவது. இரம்யமான எளிய வசன நடை. மஹா மேதாவிகளும் உவந்திடும் வர்ணனைகள் “காதம்பரியைப் படிக்க முயன்றால் இரவிகருக்கு உணவிலும் மனம் செல்லாது” என்பது வித்வான்களின் பழமொழி. காதம்பரியின் விமர்சமும் பிரயோஜனமும் முகவுரையாய் அமைக்கப்பட்டுள்ளது.

விலை ரூ. **1-8-0.**

2. மேக ஸந்தேசம்

இந்தஅழகிய சிருங்கார காவ்யம் ஸம்ஸ்க்ருதத்தில மிகப் பிரவித்தமானது. காளிதாஸ மஹாகவியினுடையதென்றால் அதைப்பற்றி வேறு விவரணம் தேவையில்லை. ஒரு யக்ஷன் குபேர சாபத்தினால் தன் மனைவியை விட்டுப் பிரிந்து, பின்னா அவன் அவளுக்குத்தூது செலனும் விஷயம் வெகு அழகானது. வர்ணனைகளும் வசன நடையும் இனியவை. விஸ்தாரமான முகவுரை. விலை அணா 14.

ஒரே தடவையில் எந்த இரண்டு புஸ்தகங்கள் வாங்கினாலும் ரூபா 1-க்கு 2-அணா வீதம் குறைக்கப்படும். தபாற் செலவு முதலியது வேறு.

வைத்திய கலாநிதி ஆபீஸ், வேப்பேரி, மதராஸ்.

நரைமயிரை
அகற்றுங்கள்

உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் **விவலேன் ஹேர் ஆயிலை** உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே **விவலேன்** எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறிய பாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனம்.

சயண்டிபிக் பப்ளிஷிங்கம்பெனி,
(மெடிகல் டிபார்ட்மெண்டு, S. 15)
பவானிப்பூர், — கல்கத்தா.

மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜே. ஹஸாரிமால் & கம்பெனி,
260, சைனாபஜார் ரோட்,
ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.
செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பரேக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜித்

சேலத்தில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட நர்சரி தோட்டம்

3 வருஷத்தில் காய்க்கக்கூடிய ஒட்டுமாஞ்செடிகள், ஒட்டு பழ வர்க்கச்செடிகளும் இனனும் இதர செடிகளும் கிடைக்கும். இங்கிலீஷ் அல்லது நாட்டுக் காய்கறி இங்கிலீஷ் புஷ்ப விதைகள், 20 சாம்பல் பாக்கெட் விலை ரூ. 2-10. சாம்பல் பாக்கெட் விலை ரூ. 1-4 கேட்லாக் இனம்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரி தோட்டம், சேலம்.

சிறுவர் பகுதி

பாட்டியின் அழுகை



எங்கள் ஊரில் சுங்குப் பாட்டியென்று ஒரு கிழவி இருந்தாள். அவளுக்கு 'சோமு' என்று ஒரே ஆண் பிள்ளையுண்டு. அவன்பேரில் பாட்டி அதிக ஆசை வைத்திருந்தாள்; அதனால் அவனைப் பாட்டி 'சோமாசா' வென்றழைப்பாள்.

பாட்டி தன் பிள்ளையுடன் மிகவும் சந்தோஷமாய்க் காலங் கழித்து வந்தாள். அது காலை சோமுவும் கல்வி கேள்விகளில் தேர்ச்சியடைந்து விளங்கினான். தனக்கு இனித் துன்பமில்லை, பிள்ளை மீறிவிட்டான் என்று பாட்டி குதூகலமாயிருந்தாள்.

இப்படியிருக்கையில், ஒரு நாள் சோமுவுக்குச் சுரங்கண்டது. எல்லோரும் இரண்டு மூன்று நாட்களில் சரியாகிவிடுமென்று நினைத்தார்கள். ஆனால் அதற்கு மாறாகச் சுரம் அதிகமாகிக் கொண்டே வந்து, இரண்டு மூன்று நாட்களுக்குள் உச்சத்தை நாடியது. பார்த்தாள் பாட்டி. பிள்ளை படும் பாடு அவளுக்குச் சகிக்க முடியவில்லை. பாட்டி மனமுடைந்து உடலிளைத்தாள். பின்னும் இரு நாட்களில் சோமு உயிர் துறந்தான். பாட்டி மண்ணில் விழுந்தாள்; என்ன செய்வது! சோமாசாவைப் பறிகொடுப்பதினும் பாட்டிக்குக் கொடிய துன்பம் வேறுண்டா?

அன்றையிலிருந்து பாட்டி, "ஏ, நடராஜா, ஒனக்குக் கண்ணில்லையா! என்னை ஏண்டா வைச்சிண்டிருக்கே! என் உசுரையுங் கொண்டு போடா! அப்புடியாவது சோமாசாவைப் பார்க்கரேன்" என்றுமூலையிலுட்கார்ந்து எப்பொழுதும் அழுது கொண்டேயிருப்பாள். எங்கள் வீடு பக்கத்து வீடாதலால், நானும் என் நண்பன் வரதனும் அக்குரலை அடிக்கடிக் கேட்பதுண்டு.

ஒரு நாள் சாயங்காலம் வரதன் என்னைத் தனியே விட்டு எங்கோ போய்விட்டான். இரவு மணி 7-ஆகியும் வரவில்லை. எனக்குத் தனியே இருக்கப் பிடிக்கவில்லை. அப்பொழுதும் பாட்டி தன்பாராயணத்தை விட்டாளில்லை. "என்னை ஏன் வெச்சிண்டிருக்கே;



கொண்டுண்டு போயேண்டா!" என்று வருந்திக் கொண்டேயிருந்தாள். நான் மெதுவாக அவன் வீட்டுத் திண்ணையில் போய் நின்று, ஜன்னலின் வழியே பாட்டியைப்பார்த்துப் பரிதாபப் பட்டுக் கொண்டிருந்தான்.

அப்பொழுது திடுக்கிடக்கூடிய சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அதைப் பார்த்ததுதான தாமதம்; என் கண் புருவமெல்லாம் மேலே ஓடிப் போயிற்று. என் தலை மயிருக்கு இழுப்பு வந்துவிட்டது. ஒரு வெட்டு வெட்டி இழுத்தது. பின்பு அப்படியே முறைத்துப் போய் நின்றுவிட்டது. இந்த நிலைமையில் ஓடிவிடலாமென்று நினைத்தேன். என் கால்கள் என் ஏவலை மறுத்தன. அதனால் அங்கு பின்னும் நிற்கும் படியாயிற்று.

இச்சம்பவம் என்னவென்று இப்பொழுது நீங்கள் விழிக்கிறீர்கள், அல்லவா? அது தான் பாட்டி முன் எமராஜனின் தோற்றம்! மின்னும்படியான கிரீடத்தைத் தன் விரித்த தலைமயிர் மேற்றுங்கி, சிவந்த கண்கள் ஒளிரப் பாசக் கயிறுடன் சூலமுமேந்திக்

வெண்குஷ்டம், பெரு வியாதி

இம்மருந்தை உபயோகித்தால் இவ்விரு வியாதிகளும் ஒழியும். ஹக்கீம்கள், வைத்தியர்கள், கவிராஜர்களின் வைத்தியத்தில் பலனேற்படாமல் போயிருந்தால்கூட இதை உபயோகியுங்கள். பலனில்லையேல் ரூபா 500 இனும். விலை ரூபா 2.

Vaidyaraj Akhil Kishore Ram,
No, 32/5, P. O. Katrisarai (Gaya)

வெற்றி கிட்டியது

என மிஸ்டர்............22-6-36ல் பம்பாயிலிருந்து எழுதுகிறார்.

"தங்கள் "திபெத் மூலிகை" யால் தான் நான் மெட்ரிக் பரீக்ஷையில் தேறினேன்."

"திபெத் மூலிகை"யால் கீழ்க் கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.

வசீகரன் ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் துன்பமயமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன் ஆச்சரிய சக்தியை விரைவில் அறிவர். விலை ரூபா 3-8-0

2. வியாபாரமும், தொழிலும்:—நிச்சயமான தொழில் அபிவிருத்தியும், இலாபமும்சித்திக்கும். விலைரூ.3-8-0

3. வியாஜ்யங்கள்:—இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0

4. வியாதிகள்:— முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 5. உத்தியோகம்:—வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0 6. பரீக்ஷைகள்:- எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 7. சத்ருக்களை ஜெயித்தல்:—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர். விலை ரூபா 3-8-0 8. கிரஹ தோஷம்:-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0 9. ஆரோக்யமும், செல்வமும்:—எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0

அறிவிப்பு:—இந்து சாஸ்திரங்களில் நம்பிக்கை உள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்டமூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜு வேறு. ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினால் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-6-0.

BIJOYA LODGE, (S.M.W.)
P. O. SALKIA HOWRAH

அமர்ந்திருந்த கோலத்தைக் கண்ட என் வயிறு 'கடபுட' வென்னுமலிருக்குமா? பாட்டிக்கும் நடுக்கம் உண்டாகிவிட்டது.

உடனே எமராஜன், பாட்டியை நோக்கிப் பாசக் கயிற்றை வீசி, "உன் கூக்குரல் கேட்டு உயிர்கொள வந்தோம். இன்றோடு உன் ஆயுள் முடிந்தது" என்றார்.

பாட்டி அதைக் கேட்டு, உளறி அலறிக் கண்களைக் கைகளால் மூடிக் குப்புறப் படுத்துக்கொண்டு, "ஐயோ, இன்னும் கொஞ்ச நாள் இருக்கறேன்! நான் வெரனே இருந்தா பாக்கரவா 'புள்ளெயெக் கொடுத்துட்டுக் கல்லு மாதிரி இருக்கா'ளேன்னு சொல்லுவா. அதுக்காக அப்புடிப் பொலம்பிண்டிருந்தேன். என்னை விட்டுப் போவும்!" என்று உளறிக் கொட்டினாள்.

உடனே எமராஜன் எருமையினின்றும் கீழே குதித்தார். அவர் குதித்த அவசரத்தில் அவர் தலையிலிருந்த கிரீடமும் சொதுக்கென்று, ஏதோ அட்டைப் பெட்டி விழுவது போல் விழுந்தது. வாய் பிளக்க, வயிறு வெடிக்கச் சிரித்துக்கொண்டு வெளியே ஓடிவந்தார். எனக்கு முடி முதல் அடி வரை ஆட்டங் கண்டுவிட்டது. வெளியே வந்ததும் பார்த்தால் பாட்டி முன் தோன்றிய எமராஜன் என் நண்பன் வரதனாக மாறிவிட்டார்.

இதைக் கண்டதும் பயமெல்லாம் என்னை விட்டோடியது. நானும் இதுவரை அடக்கி வைத்திருந்த சிரிப்பை எடுத்துவிட்டுக்கொண்டே ஓடி, அவனுடன் சேர்ந்துகொண்டேன். அன்று முழுவதும், அப்புறம் அந்நினைவு வரும்பொழுதும் நாங்கள் சிரித்த சிரிப்பு குவியல் குவியலாகக் கொட்டிக் கிடக்கின்றன. அவைகளை எங்கு ஏற்றுமதி செய்வதெனப்

தலைவலி, இராத்தூக்கமின்மைக்கு ப்ரிங்கால் உபயோகியுங்கள். ப்ரிங்கால் துல்லிய மணமானது; மயிர் உதிர்தல், பால்ய நரை இவற்றிற்கும் சிறந்தது

BHRINGOL

ப்ரிங்கால் என்பது ஆயுர்வேத முறைப்படியான மகா ப்ரிங்கராஜ தைலம்;
தயாரிப்பவர்கள் :
கல்கத்தா கெமிகல் கம்பெனி,
லிமிடெட்,,
HOI

நரையை ஒழியுங்கள்!

இந்த ஆயிலால் தலைநரை ஒழிந்துவிடும். வேரிலிருந்தே கூந்தல் கருமை பெறும்; 60-வயது வரை அப்படியே இருக்கும். பலனில்லையேல் 2 மடங்கு கிரயம் வாபீஸ். சொற்ப நரைக்கு ரூபா 3-க்கும், கால்பங்கு நரைக்கு ரூபா 5-க்கும் பாதிக்கு மேலோ அல்லது பூராவுமோ விழுந்தால் ரூபா 9-க்கும் ஆயில் வாங்குக

கடிதங்கள் ஆங்கிலத்திலேயே எழுதப்படவேண்டும்

BALA KALA STORES,
P. C. Kansi Simri, (Darbhanga

குழந்தைக்கட்டி எனும் ஈரல் பெருக்கம்.

பாலகர்களுக்கு ஏற்பட்டு வரும் கட்டி, பாற்கட்டி, குழந்தைக் கட்டி எனும் இப்பொல்லா வியாதியை வேருடன் களைய இப்புத்தகம் இன்றியமையாத பொக்கிஷம். இதில் இக்கட்டிகளின் உற்பத்தியும் அதற்குரிய காரணங்களும் தாய்மார்கள் இருக்க வேண்டிய அவசியமான முறைகளையும் பற்றி யாவரும் எளிதில் அறியும் வண்ணம் எழுதப்பட்டிருக்கிறது

விலை ரூ 1—4.

சுதேசமித்திரன் புத்தகசாலை,
சென்னை.

உங்கள் குழந்தைக்கு டோங்கரேயின் பாலாம்ருதமும்

கொடுங்கள்

டோங்கரேயின் பாலாம்ருதம் என்பதென்ன ?

1. டோங்கரேயின் பாலம்ருதம் குழந்தைகளுக்கான ஓர் சிறந்த டானிக்.
2. நீடித்த தொந்தரவான இருமலையும்; சாதாரண ஜுரத்தையும் போக்குகிறது.
3. மெலிந்து கிடக்கும் குழந்தைகளுக்கு வலுவூட்டுகிறது.
4. பல் முளைக்கையில் குழந்தைகளுக்கு உதவி செய்கிறது

மதராஸ் ஏஜண்டுகள் :

ஏ. பி. பரேக், 268, சைனாபஜார் ரோட்.

நமது தொடர் கதை

ஜம்புலிங்கத்தின் திருவிளையாடல்கள்

(ஸ்ரீமான் வ. தே. வரதன் எழுதியது)

முன் கதைச் சுருக்கம்.

தவமணி, சக்ரபாணி முதலியாரின் குமாரன். முதலியார் இறக்குந் தருவாயில் தம் நண்பர் வேலாயுத முதலியாரிடம் தவமணியையும் தமது திரண்ட சொத்துக்களையும் ஒப்புவித்தார். பிற்காலத்தில் வேலாயுத முதலியார் சொத்துக்களை எடுத்துக்கொண்டு தவமணியை வீட்டை விட்டுச் செல்லும்படிச் செய்துவிட்டார். ஒரு கனவான் ஒரு நாள் தவமணியை மிகவும் கஷ்ட நிலைமையில் கண்டு அவனைப் பராமரித்து வருகிறார்.

ஜம்புலிங்கம் என்பவன் பல கொள்ளைகள் நடத்தி வருகிறான். அவனைப் பிடிப்பது சம்பந்தமாகப் போலீஸ் டேபுடி கமிஷனர் கிருஷ்ணஸ்வாமி நாயுடுவும் இன்ஸ்பெக்டர் சொக்கலிங்கம் பிள்ளையும் யோசிக்கின்றனர். ஆனால் தன் விஷயங்களில் பிரவேசிக்கவேண்டாமென்று ஜம்புலிங்கம் ஒரு கடிதம் எழுதுகிறான். வேலாயுத முதலியார் தமக்கு ராவ்பகதூர் பட்டம் கிடைத்ததற்காக ஒரு விருந்து நடத்துகிறார். அதற்கு ஜம்புலிங்கம் ஜாலவித்தை காட்டுபவனாகச் சென்று வேலாயுத முதலியார் மனைவியின் ஏராளமான பெறுமானமுடைய நகைகளைத் துப்பாக்கி முனையில் எடுத்துச் செல்லுகிறான்.

ஜம்புலிங்கத்தைக் கண்டுபிடிக்கும் வேலையில் இறங்கிய இன்ஸ்பெக்டர்கள் கிருஷ்ணசாமி நாயுடுவும் ராம்லிங்கும் அவனிடமே சிக்குகின்றனர். போலீஸ் கமிஷனரின் ஏற்பாட்டின்படி வெளியூரிலிருந்த போலீஸ் அதிகாரியான துரைராஜ் என்பவர் ஜம்புலிங்கத்தைப் பிடிக்க நியமிக்கப்படுகிறார். இவரும் ஜம்புலிங்கத்தினிடம் சிக்கிக்கொள்கிறார். போலீஸ் ஆபீஸிற்கு ஒரு பீரோ வருகிறது. அதில் துரைராஜ் அனுப்பப்படுகிறார்.

ஜெயலக்ஷ்மி உயர் குலத்தில் பிறந்து நடிப்புத் தொழிலில்

மதராஸ் பாங்கியில் வேலாயுத முதலியார் ஒரு ரகஸிய அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அதில் தனமூ பொருள்களைப் பத்திரப்படுத்தி வைக்கிறார். ஆனால் ஜம்புலிங்கம் பாங்கியைக் கொள்ளையடிக்கப் போவதாகப் பஹிரங்கமாக அறிவித்துவிட்டுப் போலீஸாரின் காவலுக்கு மீறி வேலாயுத முதலியாரின் சொத்துக்களைக் கொள்ளையடித்துச் செல்லுகிறான். ஜம்புலிங்கத்தைப் பிடிபபதற்கு உலகநாதம் முயற்சிக்கிறார்.

XIII

கமிஷனரது பங்களாவினின்றும் வெளிப்போந்த உலகநாதம், வண்டியை சவுகார் பேட்டை தங்கசாலை வீதிக்கு ஓட்டும்படிச் சொன்னார். பதினைந்து நிமிடங்களில் வண்டி தங்க சாலை வீதியையடைந்து, ஒரு மாடி வீட்டின் வாயிலில் நின்றது. வண்டிக்குச் சேர வேண்டிய வாடகையைக் கொடுத்தனுப்பிவிட்டு, வீட்டினுள் சென்றார். கீழேயிருந்த வேலைக்காரன், மிகவும் வணக்கமாய் "அம்மா மாடியிலிருக்கிறாங்க" என்று சொன்னதைக் கேட்டு, படிகளின் மீதேறி மாடிக்குச் சென்றான்.

அங்கு, ஹாலில் ஒரு சோபாவில் மிகவும் உல்லாசமாய் சர்வாபரணங்கள் பூண்டு, ஓர் யுவதி அமர்ந்திருந்தாள். அவள் வயதை நோக்க, எவ்விதமான கவலையும் கொள்ள இடமில்லையென்று தோன்றினாலும், அவள் முகம் சற்றே வாட்டமடைந்திருந்ததாகத் தோன்றியது. உலகநாதன் ஹாலுக்குள் இரண்டடிகள் வந்தபின்பே, உள்ளே யாரோ வருகிறார்களென்பதையறிந்தாள். வருவது யார் என்று அறியவேண்டி, திரும்பிப்பார்த்தாள் ஜெயலெக்ஷிமி. வந்தது இன்னாரென்பதையறிந்ததும், அதுகாறும் அவள் முகத்தில் குடிகொண்டிருந்த வாட்டம் பறந்து விட்டது. முகம் சூரியனைக்கண்ட தாமரையென மலர, தன் இருக்கையை விட்டெழுந்தாள்.

உலகநாதன், இதுவரை எத்தனையோ தடவைகளில் தன் காதலியைக்கண்டு, அவளது பேரழகைத் தன்னிரு நேத்திரங்களாலும் அள்ளிப்பருகியிருந்தாலும், அவனது கண்களுக்கு, அதுகாறும் கண்டிறியது. இதுவரையிலில்லாதபடித் தனதாருயிர்க் காதலி, இன்றிவ்வளவு அழகு பொலிந்து விளங்குவதன் காரணம் ஒருக்கால், சூரியவெப்பத்தைத் தாங்கமாட்டாது கருங்கடலினிடம் சென்று, வயிறார நீரையுண்டு, தாகந்தணிந்து ஆகாயத்தில் சஞ்சரிக்கத் தலைப்படும் மேகங்களின் நீலநிறத்தைப் பழிக்கும் இவளது கூந்தலா! அல்லது சகல ஜீவராசிகளையும், பக்ஷபாதமின்றி, காமத்தீயை மூட்டி வருத்தும் மன்மதன் கையிலேந்தியிருக்கும் வில்லின் வடிவத்தைப் பழிக்கும் இவளது புருவங்களா! அல்லது, அமுதத்தினும் வெளுத்து, கொடிய ஆலத்தினுங்கருத்து, மருண்டு பார்க்கும் பார்வையை மானினங்கள் இவரிடம்தான் கற்றுக்கொண்டனவோ என்று சந்தேகிக்கக் காரணமாயிருக்கும் இவளது வேல் விழிகளா! அல்லது, இவளதரங்களாகிய பவளக்கிண்ணத்துள் மிக்க முத்துக்களைப் பதித்தாற்போலிருக்கும் இவளது பல்வரிசைகளா! அல்லது க்ஷீராப்திநாதனின் நாபியிலிருந்துண்டாகிய அழகிய கமலத்தில் வாசஞ்செய்யும் பிரம்ம தேவன் தன் முழுசாமர்த்தியத்தையும் உலகோர்க்குக் காண்பிக்க வெண்ணிப் பதினாறு கலைகளும் நிறைந்துள்ள பூர்ண சந்திரனின் பேரழகை அள்ளிப் படைத்திருக்கும் இவளது முகமா! இவைகளுள் எவற்றால் இன்று என் கண்மணி இவ்வளவு அழகு பொலிந்து விளங்குகிறாள் என்று அறிய ஆற்றலில்லானாய், தான் வந்த வேலையையும் மறந்தவனாய், அவளது ஒவ்வோர் அவயவங்களையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே நின்றான்.

லெக்ஷிமி, அன்னமும் வெட்கிச் செல்லும்படியாய் நடந்து, தனது குயிலினும் இனிய குரலில், "ஏன்!—அங்கேயே நின்றுவிட்டீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே அவனை நெருங்கினாள். உலகநாதன் அவளது பேரழகை யள்ளிப் பருகுவதிலேயே மிக்க ஆர்வமுற்றிருந்தானேயன்றி, அவள் கூறியதைக் கவனிக்கவில்லை.

ஜெயலெக்ஷிமி, மீண்டும் உலகநாதனை நோக்கி, "ஏன் இன்று அப்படிப் பார்த்துக்கொண்டே நிற்கிறீர்கள்?" தன் ஜடையைத் தொட்டுப் பார்த்துக்கொண்டே, 'என் ஜடை சரியாயில்லையா என்ன?" என்று கேட்டாள்.

உலகநாதன் அதையும் கவனித்தானில்லை. .அதன்மேலும் ஜெயலெக்ஷ்மி "போதும் நின்றது. இப்படி வந்து உட்கார்ந்துகொள்ளுங்கள்" என்று அவன் கையைப் பிடித்தாள்.

உலக:— ஜெயா, இன்று நீ எப்படியிருக்கிறாய் தெரியுமா?

ஜெயா:—நான் எப்படியிருந்தாலென்ன? சுமார் ஒன்றரை மணி நேரமாய் வழி பார்த்திருந்தேன். இப்பொழுதான் தங்களுக்கு வர முடிந்தது

[என்று பிணங்கினாள்]

உலக:—ஜெயா! இதற்கெல்லாம் கோபித்துக் கொள்வார்களா? நீ என் கண்ணல்லவா? வண்டி எவ்வளவு வேகமாய்ச் செல்ல முடியுமோ அவ்வளவு வேகமாய்வந்தேன். மெத்தைப் படிகளைக் கூட ஒவ்வொன்றாய் ஏறி வந்தால் நேரமாய் விடப் போகிறதேயென்று இரண்டு மூன்று படிகளாய்த் தாண்டித் தாண்டி ஏறிவந்தேன். தொட்டுப் பார்! இன்னும் என் மார்பு எப்படி அடித்துக் கொள்ளுகிறது!

ஜெய:—[தொட்டுப் பார்த்து] ஐயோ பாபம்! எப்படி அடித்துக் கொள்ளுகிறது! கைக்குத் தெரியாமலே அடித்துக் கொள்ளுகிறதே! அடடா! எவ்வளவு வேகம்! எந்த வண்டியில், இவ்வளவு சீக்கிரம் வந்து சேர்ந்தீர்கள்? ஒற்றைமாட்டு வண்டிதானே? அதுதான் இப்படி மணிக்குக் காத மைல் செல்லும்

என்று புரளி செய்தாள்.

உலக:—உனக்கு எப்பொழுதும் என்னைப் பரிகாசம் செய்வதுதான் வேலை, நான் சொன்னால் அப்படித்தான் தோன்றும்.

ஜெய:—எப்படியாவது இவ்வளவு சீக்கிரமாவது வந்தீர்களே!

"கண்ணம்மா! கண்ணம்மா" என்று கூப்பிட ஓர் வேலைக்காரி வந்தாள். ஜெயலக்ஷிமி அவளை "என்னசெய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டுக்கொண்டே ஜாடையாய் உலகநாதத்தைப்பார்த்தாள். அவள் ...கொண்டவளாய்

என்று கூறிவிட்டுச் சென்றாள்.

உலக:—ஜெயா! என்ன கொண்டுவரச் சொன்னாய்? நான் சற்று முன் தானே....

ஜெய:—என்ன! இங்குவரப் போகிறீர்கள் என்று தெரிந்திருந்துமா?

உலக:—இல்லை! ஒரு ஜோலியாய்.

ஜெய:—ஜோலிதானே? இருக்கும்! இருக்கும்! யாரோடு? என்னிடம் சொல்லக்கூடியதா? அல்லது—

உலக:—பார்த்தாயா! மறுபடியும் குறும்புத்தனத்திற்கு ஆரம்பித்துவிட்டாயே, சரி! நீ சொன்னபடியே செய்கிறேன். உனக்கு ஏன் வீணாய்...

என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே, வேலைக்காரி ஒரு தட்டில் கொஞ்சம் பலகாரமும், இரண்டு டம்ளரில் 'டீ' யும் கொண்டுவந்து வைத்துச் சென்றாள்.

ஜெய:—உம், எழுந்திருங்கள் என்று அவன் கையைப் பிடித்திழுத்துக்கொண்டு போய், பலகாரங்கள் வைத்திருந்த மேஜையண்டை உட்காரவைத்துத் தானும் உட்கார்ந்துகொண்டாள். உலகநாதன் கொஞ்சங் கொஞ்சமாய் எடுத்துண்ணவாரம்பித்தான்.

ஜெய:—அத்—உம்—இன்று எங்கு சென்றிருந்தீர்கள்?

உலக:—'அத்' என்ற அரைகுறைச் சொல்லைப் பூர்த்தி செய்யலாகாதா? உன் பவள வாயால் அத்தான் என்றுதான் அழையேன். எப்படியும் இன்னுங் கொஞ்ச நாட்களில்—

ஜெய:—எங்கு சென்றிருந்தீர்களென்றால் அதற்குப் பதிலைக் காணோமே?

உலக:—நான் சொன்னதைச் செய்யக் காணோமே'

ஜெய:—நான் முதலில் கேட்டேன்.

உலக:—முதலிலோ இரண்டாவதோ, அதெல்லாம் முடியாது 'அத்' என்ற பதத்தைப் பூர்த்தி செய்தால்தான்.

ஜெய:—[சற்று தாழ்ந்த குரலில்] அத்தான்—எங்கு போயிருந்தீர்கள்?

உலக:—அப்படி அவசரமாகக் கூப்பிட்டால் பதில் சொல்வேனா? மற்ற வார்த்தைகளைப் போல நிதானமாயும் அழுத்தமாயும் சொல்ல வேண்டாமா?

ஜெய:—என்ன ஜோபாங்கள் உம்—அத்தான்—இப்பொழுது சரிதானா?

உலக:—உம், இதுதான் சரி. இப்பொழுது சொல்லுகிறேன். ஒரு சிநேகிதரைக் காணச் சென்றிருந்தேன்.

ஜெய:—அதற்குமேல் அவர் யார்? என்ன என்பதைப்பற்றிக் கேட்கக்கூடாதுபோலிருக்கிறது.

உலக:—ஆம். கோபித்துக் கொண்டுவிடாதே. இது பரம ரகஸியம். உனக்குச் சொல்லாமலிருப்பேனா? பிறகு சொல்லு

என்று சொல்லிக்கொண்டே தன் கைகளைத் துடைத்துக் கொள்ள, தன் சட்டைப் பையினின்றும் கைக்குட்டையை எடுத்தான் அப்பொழுது ஒரு கடிதம் பையினின்றும் வெளி



"அவர்கள் இருவரும் சாராயக் கடைக்குள் நுழைந்துவிட்டார்கள். உலகநாதனும்......வந்தது வரட்டுமென்று" நுழைந்தான்.

யே விழுந்தது! கீழே விழுந்த கடிதத்தைக் கண்டதும், உலகநாதனின் முகம் சடக்கென்று மாறியதைக்கண்ட ஜெயலக்ஷிமியின் மனதில் ஒரு சந்தேகம் ஜனித்தது உலகநாதன் வெகு அவசரமாய் அக்கடிதத்தை எடுக்கக் குனிந்தான். இதைக் கண்டதும அவள் கொண்ட சந்தேகம் பின்னும் பலப்பட்டுவிட்டது ஆகையால், சடக்கென்று குனிந்து, உலகநாதனுக்கு முன்னம், தான் கையில் எடுத்துக் கொண்டாள். உலகநாதன் கடிதத்திற்காகத் தன் கையை நீட்டினான்

ஜெய:—[கடிதத்தைக் கையில் வைத்துக்கொண்டே] இது என்ன கடிதம்?

உலக.—அது ஒரு முக்கியமான—

ஜெய:—ஆம், ஆகையினால் தான் கேட்கிறேன். நான் பார்க்கலாமா?

உலக:—அது ஒரு ரகஸியமான கடிதம். தயவு செய்து இப்படிக் கொடு.

ஜெய:—நான் பார்க்கக் கூடாத ரகஸியமோ?

உலக:—விபரீத அர்த்தங் கொள்ளாதே, நீ நினைக்கிற மாதிரி அல்ல. அது—

ஜெய:—அப்படியானால் நான் பார்த்தால் என்ன? உங்கள் ரகஸியம் என்னுடையதல்லவா?

உலக—அதில் தடை என்ன? என் வாயாற் சொல்லவேண்டுமா? ஆனால் இதைமட்டும் நீ

ஜெய:—'தானாகக் கனியாத பழம், தடிகொண்டு அடித்தால் கனியுமா!' இந்தாருங்கள் உங்கள் கடிதம்!

என்று கோபமாய், கடிதத்தை மேஜைமீது வைத்துவிட்டு சடக்கென்று எழுந்து நடந்தாள். இதைக் கண்ட உலகநாதன்,

"அடடா! இதென்ன தர்மசங்கடமாயிருக்கிறதே! நான் ஒன்றை நினைத்துச்சொன்னால், இவள் விபரீதமாகவல்லவோ எண்ணிக் கோபித்துக் கொள்கிறாள்!'

என்று அவள் பின்சென்று, அவளைப் பிடித்துக்கொண்டு, "ஜெயா! கோபித்துக் கொள்ளாதே! இங்கு வா என்று சமாதானம் செய்து மறுபடியும் சோபாவிற்கு அழைத்துப் போய் அமர்த்தினான்.

"ஜெயா! ஏது இன்று இத்தனை வருத்தம் வந்துவிட்டது! உன்னையன்றி வேறு ஸ்திரீயை நான் கனவிலேனும் கருதுவேனென்று எண்ணுகிறாயா? இவ்வளவுதானா என்னை நீயறிந்துகொண்டது?"

(38-ம் பக்கம் பார்க்க)

மனோரஞ்சனி

இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. இராஜலக்ஷ்மி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவந்துகொண்டிருக்கிறது. இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனாம்!

எம். எஸ். ராமுலு கம்பெனி, 286, எஸ்பிளனேட், மதராஸ்.

கூஷ்மாண்ட தர்மம்

(9-ம் பக்கம் தொடர்ச்சி)

பக்கிரி மண் வெட்டியைக் கீழே வைத்து விட்டு "என்ன, தலே போகிற சமாச்சாரம்?" என்று எரிந்து விழுந்தான்.

"அண்ணே! உனக்கும் எனக்கும் என்னதான் மனஸ்தாபமிருக்கட்டும். மூணும்மனுசன் உன்னைப்பத்தி ஒண்ணு சொன்னல் என்னல் கேட்டுக்கொண்டிருக்க முடியவில்லை"

"எவன் என்ன சொன்னன்?" என்று கேட்டான் பக்கிரி. அப்பொழுது அவனுக்குச் சடையன்மீதிருந்த கோபம் சிறிது குறைந்தது.

"நல்ல மனுசன்தான். இருந்தாலும் உன்னைப்பத்தி அப்படிச் சொல்லலாமா? நீ பெரிய முரடனும். எதுக்கெடுத்தாலும் சண்டை போடுவாயாம். மகா கோபக்காரனும்."

இதைக் கேட்டுப் பக்கிரி துடிதுடித்தான். "எனக்கா கோபம் வருமென்று சொன்னன். அவன் பேரைச் சொல்லு. அவனை வெட்டி மடை வாயிலே வச்சிட்டு மறு காரியம் பார்க்கிறேன்" என்று மண் வெட்டியை எடுக்கப் போனன்.

"பக்கிரியண்ணே! இதுக்குத்தான் நான் பேரைச் சொல்லவில்லே. என்னமோ அவர் சொல்லிப்பிட்டாரு. அதுக்காகக் கோவிச்சுக்கலாமா! நீ பேசாதிருக்கேனு சொன்னத்தான் பேரைச் சொல்வேன்"

"சரி! நான் பேசாதிருக்கிறேன்! என்று பக்கிரி பல்லைக் கடித்துக்கொண்டு சொன்னன்.

"அருணசலவாத்தியாரு" என்றன் சடையன்.

"அந்த அய்யரை இருக்கட்டும்! இருக்கட்டும்" என்று பக்கிரி கருவினன்.

III

பிறகு இருவரும் பேசிக்கொண்டே வீடு திரும்பினர்.

தன் வயலில் பாய்ந்து பயிரைக் கெடுக்கவந்த வெள்ளத்தை வேறு வயலில் பாயச்சித் தன் பயிரைக் காப்பாற்றியது போல, தன்மீது பாய்ந்த பக்கிரியின் கோப வெள்ளத்தைச் சடையன் சாமர்த்தியமாக அருணசலத்தின்மீது பாயும்படிச் செய்துவிட்டான். மடை வெட்டி ஜலம் பாய்ச்சிய பிறகு அவன் மனதில் தோன்றியது இந்த யோசனைதான். வீடு திரும்பிடபோது அருணசலத்துக்கும் பக்கிரிக்கும் மனஸ்தாபமுண்டாக்கிவிட்டது கொஞ்சம் அவன் மனசாக்ஷியைத் துன்புறுத்தியது. உடனே பக்கிரி வாங்க மறுத்த அந்தப் பூஷணிக்காயை எடுகதுக்கொண்டு அருணசலத்தின் வீட்டை யடைந்தான்.

"என்ன, காரியம் ஜயமாயிற்ரு! நான் சொல்லியபடி செய்திருந்தால் கட்டாயம் பக்கிரி வழிக்கு வந்திருப்பானே?" என்ருர் அருணசலம்.

"ஆமாங்க! நீங்க சொன்னது சரியாய்ப் போச்சுங்க. பூசணிக்காயைக் கண்டதும் ஆசாமி கோபமெல்லாம் பறந்ததுங்க. நீங்க அந்த யுக்தி சொன்னீங்களே அதுக்கு நான் என்ன செய்யப்போறேன்? காசு பணம் என்னிடம் கிடையாது. இந்தப் பூசணிக் காயை யாவது வச்சிக்கிங்க" என்று சொன்னன். அப்பொழுது உள்ளே யிருந்துவந்த அருணசலத்தின் சம்சாரம் "சடையா, அதை உள்ளே கூடத்திலே கொண்டுவந்து வைத்துவிடு" என்ருள்.

சடையன் பூஷணிக்காய் கொடுத்ததுடன் மனதிலிருந்த பாரம் நீங்கி வீடு திரும்பினன். அப்படிப்பட்ட முரடனை பக்கிரியையும் சரிப்படுத்துவதில் தமக்கிருந்த சாமர்த்தியத்தைத் தாமே வியந்து கொண்டார் அருணசலம்.

உயர்ந்த
வைரங்கள்
T. R.
ஜோஷி & சன்ஸ்,
Diamond Merchants
38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்
பி. டி. மதராஸ்.

அதி அற்புத அழகு
சுகாதாரம் மிகுந்த
டில்பஹார் ஸோப்பு
(ரிஜிஸ்டர்ட்)
மூன்று கட்டிகளின் விலை
ஒரு ரூபாய் தான்
(தபால் செலவு தனி)
டில்பஹார் ஸோப்பு சிறந்தசுத்தி கரிப்பைத் தரும் கிருமி நாசினி.
சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும் அழகை விருத்திசெய்யும்.

உங்கள் சருமத்தைப்
பாதுகாருங்கள்!
ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும் காமினியா ஸ்னோ வின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிருர்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 10 அணு. தபால் செலவு தனி. தபால் செலவுக்காக 1 அணு ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பிள் இலவசம்.
சோல் ஏஜண்ட் :—
The Anglo Indian Drug & Chemical Co
285, Jumma Musjid, BOMBAY 2.
ஸ்டாக்கிஸ்டுகள் : ஜே. எஸ். சேட் & கம்பெனி,
68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி.

குழந்தைகளின் வயிற்று
ஜுரக் கட்டிகளை
சந்தேகமின்றி சமனப்படுத்துவது
பால சஞ்சீவினி
இதுவேதான்
உண்மையான அசல் விஜயநகரம்
மருந்து
விஜயநகர சமஸ்தான வைத்திய பாம்பரை பிள்ளா குடும்பத்தாரால் தயார் செய்யப்பட்டது.
Dr. பிள்ளா பாபய்யா பாத்ருடு பிரதர், விஜயநகரம்.
மதராஸ் பிராஞ்சு: 98-99, பிராடீஸ் ரோட், மைலாப்பூர்.
(ராமகிருஷ்ண மடம் எதிர்.)

ஏமாருதீர்கள்!
எங்கள் வைத்தியசாலையின் மருந்துகள் மிகவும் சிலாக்கியமானது எனப்பலராலும் புகழப்பட்டு வருதல் கண்டு, சிலர் வேறு மருந்துகளை எங்கள் மருந்துகள் அதாவது சி. எம். சாமி மருந்துகள் என்று சொல்லி ஏமாற்றி விற்பனை செய்து வருகிறதாகத் தெரிகிறது. எங்கள் வைத்தியசாலையிலிருந்து வெளி இடங்களுக்கு நாங்கள் யாரையும் அனுப்பவில்லை. எங்கள் ஏஜண்டு என்றும், எங்கள் மருந்துகள் என்று யாராவது விற்பனை செய்தால் அதைப் பொதுமக்கள் வாங்கி மோசம் போகாமல் இருக்கும்படி எச்சரிக்கிருேம்.
மருந்து வேண்டியவர்கள் நேரே எமக்கு எழுதிப் பெறலாகச் சொல்லுங்கள்.
மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி, S. I.

BLACKLOCK & MACARTHUR LTD., GLASGOW

வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளை தான உயர்ந்தது. வெண்மை மாருது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டுவரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்கவேண்டிய அவசியமுமிராது. 541 கெக்கின்பேரில் மான்மார்க்கும் இரண்டு ஈய லீல்களும் இருக்கிற கெக்காகப் பார்த்து வாங்குங்கள். போலிகளை வாங்கி ஏமாருதீர்கள். செந்தூரத்தில் "மான்மார்க்" செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.
Sole Agents:- M. R. V. AIYER & Co., 49, பந்தர் தெரு, மதராஸ்.

அதிசயம் ஆனால் உண்மை

நவ நாகரீகம்

நிரைமணி

(காசினி எழுதியது.)

*** 'நான் கோவிலுக்குப் போகப் போகிறேன்; நீங்கள் யாராவது வருகிறீர்களா?'

சென்ற வாரம் இங்கிலாந்து சென்றிருந்த இந்திய கிரிக்கெட் கோஷ்டி அங்கத்தினர்கள் பம்பாய் வந்து சேர்ந்தபோது வரவேற்கப்பட்ட காட்சி.

என்று போன வாரம் ஒரு நாள் சாயங்காலம் என்னுடைய அத்தை கேட்டாள்.

'என்ன விசேஷம்?' என்று ஆனரபிள் சிவனுடைய மகள் கேட்டாள்.

'புரட்டாசி பௌர்ணமி இல்லையா? நிரைமணி!' என்றாள் என்னுடைய அத்தை.

'நிரைமணியா? அது என்ன? கெண்டாமணி என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறேன்' என்றாள் ஆனரபிள் சிவன் மகள். எனக்கும் நிரைமணி என்னவென்று புரியவில்லை. அறியாத்தனத்தை வெளியில் விட்டுக் கொள்ளுவானேன் என்று சும்மாயிருந்தேன். ஆனரபிள் சிவன் மகளும், மருமகளும் தாங்கள் வாங்கின சில வெள்ளி சாமான்களைக் காட்டுவதற்காக எங்கள் ஆத்துக்கு வந்திருந்தார்கள்.

'உங்களுக்கு என் தெரியப் போகிறது? ஏதாவது இரண்டாவது நூற்றாண்டில், ரோமாபுரியில் என்னநடந்தது என்று கேட்டால் பதில் சொல்லுவீர்கள். இப்படித் தலையை வாரிக் கொள்ள வேண்டும்! அப்படி உடுத்திக்கொள்ள வேண்டும் என்பதெல்லாம் நன்றாகத் தெரியும். நம்ம பழைய பழக்க வழக்கங்கள் ஏதாவது கேட்கப் போனால் ஒன்றும் தெரியாது! கலியுகமே!' என்றாள் அத்தை.

'என்னமோ அத்தை, இப்படி வளர்ந்து விட்டோம்! கடைசிவரையில் நிரைமணி என்றால் என்னது என்று நீங்கள் சொல்லவில்லையே!' என்றாள் ஆனரபிள் சிவனுடைய மருமகள்.

'புதிய நாகரீக மடைந்தவர்கள் கோவிலுக்குக் குளத்துக்குப் போகமாட்டார்கள்! பீச்சுக்கு ஷோக்காக உடுத்திக் கொண்டு போனால்தான் நாகுக்கு! ஜென்ம சாபல்லியம் அப்பொழுதுதானே ஏற்படும்! உன் தங்கைதானே ஒரு நாள் சிவன் கோவிலுக்கு நான் அழைத்துக்கொண்டு போன போது, 'தலையிலே ஒரு மகுடம் வைப்பார்களே, அதை யேன் இங்கு வைக்கவில்லை!' என்று கேட்டாள்? நாலு பேருக்கு நடுவிலே எனக்கு அவமானம் பிடுங்கித்து என்ன செய்யலாம்?. காலத்தின் கோலம்!' என்றாள் அத்தை.

'நாழியாகிறதே? கோவிலுக்குப் போகிறதாக இருந்தால் புறப்படலாமே? எல்லாரும் போகலாமா? நீங்களும் வருகிறீர்களா?' என்று நான் கேட்டேன். எனக்கு எங்கே அத்தை, நிரைமணி என்னஎன்றால் நீ சொல்லு!' என்று கேட்டு விடப் போகிறாளே என்று உள்ளூர யோசனையாக இருந்தது.

'அம்மாவிடம் சொல்லிக் கொண்டு வரவில்லையே?' என்றாள் ஆனரபிள் சிவன் மருமகள்.

'பரவாயில்லை; நாம் பீச்சுக்குப் போய்விட்டு நாழிகழித்து வருவதாகத் தானே சொன்னோம். போகலாம்' என்றாள் ஆனரபிள் சிவன் மகள்.

எல்லோருமாகக் காரில்புறப்பட்டோம். போகும் வழியில் 'அங்கு வந்து ஏதாவது கேள்வி கேட்காதேயுங்கள். கோவில், உள்பிராகாரம், பிராகாரம் எங்கும், எல்லாக்காயும், கறியும் தொங்கவிட்டிருக்கும்' என்றாள் அத்தை. கோயிலில் நாங்

என்ஜினியரது நன்மொழி.

டி. கே. ஐயாசாமி, என்ஜினியர். ஸ்ரீ வைகுண்டம், 9-3-35.

என் கிருஹத்தில் கேசவர்த்தினியை வருஷத்துக்கு மேலாக விடாமல் உபயோகித்து வருகிறோம். தயாரிப்பவர்கள் அதற்கு என்னென்ன குணாதிசயங்கள் உண்டென்று பிரசுரப்படுத்தியுள்ளார்களோ, அவையெல்லாம் அதற்கு உண்டு என்பது எமது அனுபவம். அதன் உபயோகத்தால் மயிர் உதிர்வது நிற்பதுடன், வழுக்கை இளநரைகளும் தீர்ந்து, கூந்தலும் அதிசீக்கிரத்தில் கருகரு என்று வளர்கிறது. கேசத்துக்கு இதைவிடச் சிறந்தது ஒன்றில்லை என்பதைப் பிரகடனப் படுத்துவதில் எனக்குப் பரம ஸந்தோஷம்.

(கையொப்பம்) டி. கே. ஐயாசாமி.

கேசவர்த்தினி விலை அணா 12; ஷாம்பு விலை அணா 12.
மேற்செலவு வேறு.

தென் இந்திய ரஸாயன சாலை,
லஸ்ரோடு, மயிலாப்பூர், சென்னை.

யாரே அழகுக்கு அழகு செய்வார் எனினும், அழகுக்கு அழகு செய்வதும் அவசியமே. அழகு செய்வது, ஆடையும் ஆபரணமுமே ஆனாலும், ஆடையே அழகை இரட்டிக்கிறது. அத்தகைய மேம்பாடுடைய ஆடை, அதன் நூல், சாயம், நெசவு முதலியவை

தங்கள் வரவை அன்புடன் எதிர்பார்க்கும்
சிவராம் அண்டு கம்பெனி,
28, கிழக்கு மாடவீதி, மைலாப்பூர்

திருப்திகரமாக இருத்தல் வேண்டும். விலையும் சாசமாக இருத்தல் வேண்டும். இவ்வளவு குணாதிசயங்கள் பொருந்திய சேலைகளை நாங்கள் எங்கள் சொந்த தறியில் தயாரித்து சேகரித்து வைத்திருக்கிறோம்.

கள் சென்று பார்த்தபொழுது காய்தினுசுகள், பழதினுசுகள், தானிய தினுசுகள், எல்லாம் கட்டித் தொங்கவிட்டு, அலங்காரம் செய்திருந்தது. கோசு, பட்டாணி, உருளைக்கிழங்கு, காரட்டுக் கிழங்கு, முதலிய மேல்நாட்டுக் காய் கிழங்கு வகைகளும், கத்திரி, வெண்டை, பாங்கி, பூசணி, புடல், பாகல், மிளகாய், சேப்பங்கிழங்கு, சேனை, வள்ளி முதலியசுதேசத்துக்காய் கிழங்கு வகைகளும் அலங்காரமாகத் தொங்கவிட்டிருந்தன. வெங்காயம், உள்ளிப்பூண்டு இவைகளும் இருந்தன. சோளம் கம்பு முதலிய தானியக் கதிர்களும் இருந்தன. கொத்துடன் மாங்காய், குலையுடன் தேங்காய் இவைகளும் இருந்தன. பழதினுசுகளும் ஏராளமாக இருந்தன. தவிர, ஜிலேபி, மைசூர்ப்பாகு போன்ற பக்ஷண வகையராக்களும் தொங்கவிடப்பட்டிருந்தன.

"வருஷா வருஷம் இப்படிச் செய்வார்களா?" என்று ஆனரபிள் சிவன் மகள் கேட்டாள்.

"ஆமாம்; நீங்கள் அந்தக் காக்ஷி. இந்தக் காக்ஷி என்றெல்லாம் போய்ப்பார்க்கவில்லையா? அதுபோல் இதுவும் ஒரு காக்ஷி என்று வைத்துக்கொள்ளேன். இதைப் பார்ப்பதனால், எத்தனை தினுசு விளைபொருள் சாதாரணமாக இருக்குமென்பது தெரிகிறதில்லையா? அறிவுக்கு அறிவும் ஆச்சு, புண்ணியத்துக்குப் புண்ணியமும் ஆச்சு. நமம பெரியவாள் எல்லாம் ஆழ்ந்த யோசனையுடன்தான் ஏற்பாடுகள் செய்தார்கள். நீங்கள் இப்பொழுது எதையும் கூலங்குஷமாக விசாரிக்காமல், பழைய வழக்கங்கள் அநாகரீகம், கர்னாடகம் என்று பழித்துத் தள்ளிவிடுகிறீர்கள். எதையும் பர்சோதித்துப் பார்த்தால்தானே உள் தத்துவம் விளங்கும்?' என்றாள் அத்தை. சுவாமி தரிசனம் செயதுகொண்டு வீடு வந்து சேர்ந்தோம். இந்த வழக்கம் உங்கள் ஊரிலும் உண்டா? நீ பார்த்திருக்கிறாயா? ஆனரபிள் சிவன் மகள் சொன்ன மாதிரியில் பார்க்க வேண்டிய காக்ஷிதான்.

துப்பா தோசை

நேற்று மத்தியானம் நான் லேடி சின்னையா வீட்டிற்குப் போயிருந்தேன். ஏதோ எங்கள் கிளப் விஷயமாகப் பேச்சு வரவே, வெகு நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டேன். நான் வீட்டிற்குப் புறப்படும்பொழுது, 'நாழி ஆனது ஆச்சுது, டிபன் சாப்பிட்டுவிட்டுப் போங்கோளேன்' என்று லேடி சின்னையா சொன்னாள்.

'என்ன டிபனோ?' என்று கேட்டுக்கொண்டே அவளுடைய மகன் உள்ளே வந்தான்.

'துப்பா தோசை!'

'அது என்ன தோசை? எதுவாக இருந்தாலும், எனக்கு இருக்கும் பசியில் துப்பும் உத்தேசம் இல்லை; தின்றே விடுவேன்!' என்றான்.

இதற்குள் தட்டுகளில் டிபனை எடுத்துக்கொண்டு வந்து, வேலையாள் மேஜைமேல் வைத்தாள். தோசை நடுவில் உப்பி, சோமாசி மாதிரியில் இரண்டாக மடிக்கப்பட்டிருந்தது. ருசியாக இருந்தது.

'சாதாரணமாகத் தோசைக்கு நனைப்பதுபோல், அரிசி, உளுந்து நனைத்து, முதல் நாள், அரைத்துக் கரைத்து வைக்க வேண்டுமாம். மறுநாள், தேங்காய், பச்சைமிளகாய், பச்சைக் கொத்தமல்லி, வேண்டிய அளவு உப்பு வைத்து, சட்டிணி அரைத்துக் கொள்ள வேண்டுமாம். உருளைக் கிழங்கை வெந்து, உரித்து காரப்பொடி போட்டோ, அல்லது பச்சை மிளகாய் அரிந்து போட்டோ, வேண்டிய அளவு காரம் சேர்த்துத் தாளித்து நெய்விட்டுப் பக்குவமாக வதக்கி எடுத்துக்கொள்ள வேண்டுமாம். இஷ்டமானால், இதில் வெங்காயத்தைஅரிந்து, வதக்கிச் சேர்த்துக் கொள்ளலாம். பிறகு, தோசைக் கல்லில் கொஞ்சம் நெய் தடவி, சாதாரணமாக தோசை வார்ப்பது போல் வார்த்து, அது நன்றாக சிவந்ததும், திருப்பிப்போட்டு நெய் விட்டு, கொஞ்சம் சட்டிணியை எங்கும் படும்படித் தடவி, உருளைக் கிழங்குக் கறியில் கொஞ்சம் எடுதது நடுவில் நீளவாட்டமாக வைத்து, தோசையை இரண்டாக மடித்துக் கரண்டியினால் ஓரங்கள் பொருந்தும்படி நன்றாக அழுத்திவிட வேண்டுமாம். பிறகு, தோசை இருபுறமும் சிவநது வேகும்படி நெய்விட்டுப் புரட்டிக் கொடுக்கவேண்டும். நெய்விட்டு வார்ப்பதினால் இதற்கு இந்தப் பெயர் வந்தது என்று எண்ணுகிறேன். தோசை புதிய தினுசாகவும், வாய்க்கு ருசியாகவும் இருப்பதுடன், பண்ணுவதும், அவ்வளவு சிரமமில்லை என்று எண்ணுகிறேன்.'

ஐரோப்பிய மஹா யுத்தம்.

"ஐரோப்பிய யுத்த சரித்திரத்தை" படிக்க வேண்டியதவசியம். அநேக ஆப்டோன் படங்களுடன் கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. 2, 4 பாகங்கள் அகப்படாது. 1, 3, 5, பாகங்களுக்குச் சேர்த்து ஆர்டர் செய்யவேண்டும். பாகம் ஒன்றுக்கு விலை அணா 6. தபாற் செலவு வேறு.

சுதேசமித்திரன் புத்தகசாலை,

சென்னை,



இரத்தத்தில் விஷம்
சரும வியாதி
இவற்றைப் போக்குக.

ஜாம்-பெக் சிறந்த குணமூட்டும் கிருமி நாசினி.

'வெறும் காயம் தானே' என அலட்சியமாக இருந்தால் அது விஷமாக மாறிவிடலாம். சகிக்க முடியாத வலியும், தொந்தரவும் உண்டாகலாம். எனவே, விரைவில் ஜாம்-பெக் தடவி குணப்படுத்துங்கள். கத்தி வெட்டுகள், புண்கள் எதற்கும் உதவும். எரிச்சலை யடக்கி, தழும்பின்றி ரணமாற்றும். ஜாம்-பெக் நமைச்சல, சொறி, சிரங்கு, கத்தி வெட்டு, தீப்புண் முதலியவற்றிற்கும் கூட எல்லா மருந்து வியாபாரிகளிடமும் ரூ. 1 அல்லது ரூ. 2—4-க்குக் கிடைக்கும்.

மிருகக் கொழுப்பற்றது.

ஜாம்பெக்
Zam-Buk

குமார சஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
நிகாற்ற குணமுடையது
வைத்தியர். அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை

ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்

கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்

நகை வியாபாரிகள்

175, சைனாபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.

"ஜனா க்ரீம்"

அற்புதமான சாஸ்திரீகசரக்கு; அநாவசியமாகக் கருதப்படும் ரோமங்களை நீக்க உயர்குடும்பங்களில் கனவான்களாலும், சீமாட்டிகளாலும், சினிமா நடிகைகளாலும் உபயோகிக்கப்படுவது. பரீட்சித்துப் பாருங்கள்.



கிடைக்குமிடம்:—
SHIVLAL & CO.,
Princess Street, Bombay 2.

தென்னிந்தியப் பிரமுகர்கள்

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

முன்பும் வர, மிஸ்டர் நார்ட்டன் பிராது தரப்பிற்காகவும், ஸர் டேஜ் பஹதூர் ஸாப்ரூ குற்றவாளிக்காகவும் ஆஜராயினர்; இவ்வழக்கு 15 தினங்கள் நடந்தன. முடிவில் இவரும் மற்றுமொருவரும் அந்த தேஷ்முக் குற்றவாளியல்லவென்ற முடிவுக்கு வந்தனர். கடைசியில் நிஜாம் இவர்களது முடிவையே ஆதரித்தார்.

சுமார் 1918-ல் நிஜாம், பிரதம மந்திரி ஸ்தானத்திற்குப் பதிலாக, நிர்வாக சபை ஒன்றை ஸ்தாபிக்கக் கருதியபோது, அதற்குச் சரியாக ஒரு அரசியல் திட்டத்தைத் தயார் செய்யுமாறு உத்திரவிட்டார். இவர் அவ்வாறு செய்து, பின்பு ஸர் ஆலி இமாமுடன் அந்த அரசியல் திட்டம் தற்போது வேலை செய்யும் விதத்தில் அதை நடத்திவைத்தார். அந்தச் சமயத்தில இவர் நிஜாம் மன்னர் தமது பிரஜைகளுக்குச் சுதந்திரம் அளிப்பதைப் பெரிதும் போற்றுவதாகவும் தெரிவித்தார். இது சிலரால் கண்டிக்கப்பட்டபோதிலும், நிஜாம் மன்னர் இதைப் பாராட்டினர்.

ஸர் ஆலி இமாம் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டவுடன் அவர் சட்டசபை சீர்திருத்தத்தைப் பற்றி நிஜாம் மன்னரின் அனுமதியைப் பெற்றுக்கொண்டார். உடனே இதற்கு ஏற்ற திட்டத்தைத் தயார் செய்வதற்கு இவர் நியமிக்கப்பட்டார். இவர் தாம் எழுதிய குறிப்பில் ஹைதராபாததின அரசியல் சரித்திரத்தை விஸ்தரித்து எழுதினர். வெவ்வேறு தொகுதிகள், அங்கத்தினர்களின உரிமைகள் ஆகியவற்றைத் தீர்மானிக்க ஒரு பிரத்தியேக உத்யோகஸ்தர் நியமிக்கப்பட்டார் வேறு இதர முக்கிய சமாசாரங்கள் நடுவே வந்துவிட்டபடியால், இந்தத் திட்டம் அமுலுக்கு இன்னும் வரவில்லை.

"ராஜாபஹதூர்" பட்டம்

நிஜாம் மன்னர் இவரிடம் விசுவாசம் கொண்டிருக்கிறார். இவருக்கு முழு பென்ஷனையும் கொடுக்க அவர் ஏற்பாடுகள் செய்தார். இவரது உத்தியோக காலத்தையும் அவர் பிரார் பிரச்னை முடிவாகும் வரையில் நீடித்து வைத்தார். ஆனால், இவர் 1924-ம் வருஷம் ஏப்ரல் மாத முதல் தேதியன்று தமது பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டார். ஒரு வருஷத்திற்குப் பின்பு இவர் ஹைதராபாத்திற்குத் தமது தொழிலை நடத்தச் சென்றபோது, நிஜாம் மன்னர் தமது ஸ்வாபாவிக உதார குணத்துடன் இவரை உத்யோகத்தில் மீண்டும் அமர்த்திக்கொள்வதாகச் சொன்னர். இவர் தமது தேக அசௌக்யம் பற்றி இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அப்போது அவர் இவருக்கு மிக உயர்ந்த "ராஜாபஹதூர்" பட்டத்தைக் கொடுத்துக் கௌரவித்தார். இதற்கு முன்பு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் 1911-ல் "ராவ்பஹதூர்" பட்டமும், 1918-ல் "திவான் பஹதூர்" பட்டமும் கொடுத்துக் கௌரவித்தனர். ஆனல் நிஜாம் அளித்த பட்டம்தான் இவரது பெயருடன் பிரபலமாக விளங்குகின்றது இவருக்கு முன்பு அப்பட்டத்தை நிஜாம் வேறு ஒருவருக்கும் கொடுத்தது கிடையாது.

ஒரு சமயம் இவரிடம் பெரிதும் மதிப்புகொண்ட ஸர் மைகேல் ஓட்வியர், இவர் ஹைதராபாத் சமஸ்தானத்திற்குப் போனது தவறு என்றும். பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்திருந்தால், இவர் தொழிலின் உச்சஸ்தானத்தை எட்டிய பின்பு இன்னும் பெரிய பதவிகளுக்கெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது நிச்சயம் என்றும் சொன்னர்.

இதன் பின்பு இவர் பிரிட்டிஷ் இந்தியாவின் பொதுவாழ்வில் பெரிதும் கலந்துகொண்டார். 1926-ல் தஞ்சை ஜில்லாப் பிரமுகர்களான ராவ்பஹதூர் என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் முதலியோர் இந்திய சட்டசபைக்கு (அஸெம்பிளி) அபேக்ஷகராக நிற்கும்படிக் கேட்டுக்கொள்ள, இவர் தேக அசௌகர்யம்பற்றி ஒப்பவில்லை. ஆனல், பின்பு நம் சநாதன தர்மத்திற்குச் சில விரோதிகள் தீவிரமாகக் கிளம்பியபோது இவர் வெளியே வந்துவிட்டார். சட்டசபை ஆலோசனையில் சாரதா சட்டம் (பால்ய விவாகத் தடைச் சட்டம்) இருந்துவந்தபோது, இவர் ராஜப்பிரதிநிதியிடம் அதற்கு எதிராக விண்ணப்பம் செய்ய ஒரு தூதுக் கோஷ்டியை அழைத்துச்சென்றார். பின்பு சிலர் வேண்டுகோளுக்கிணங்கி சட்டசபை தேர்தலுக்கு நிற்க இவர் சம்மதித்தார். முதலில் தோல்வியுற்றபோதிலும், இரண்டாவது தடவை நடைபெற்ற பெரிய தேர்தலில் இவர் வெற்றிபெற்றார்.

இந்தியா சட்டசபையில் ஸ்தானம்

சுமார் 4 வருஷகாலம் இவர் அஸெம்பிளி மெம்பராகவிருந்தார். அவர் ஒரு மத்யக்கக்ஷியை அங்கு நிறுவி, அதன் தலைவராக விருந்துவந்தார். இவர் எல்லோருடனும் அந்நியோந்யமாகப் பழகினர். தாழ்த்தப்பட்ட வகுப்பார் பிரதிநிதியான ராவ்பஹதூர் எம். ஸி. ராஜா இவரது கக்ஷியின் காரியதரிசியாகவிருந்தார். சநாதனிகள் தலைவராகவும் இவர் அங்கு இருந்துவந்தார். ஆலயப் பிரவேச மசோதாவை இவர் பெரிதும் எதிர்த்தார்; இறுதியில் இம்மசோதா சட்டமாகவில்லை. இது தவிர சாரதா சட்டத்தை அமுலிலிருந்து எடுத்துவிடவும் இவர் சிரமப்பட்டு வந்தார். நமது ஆசாரங்களைப்பற்றி இல்லாத இதர சந்தர்ப்பங்களில், இவர் "மதராஸ் மெயில்' நிருபர் எழுதிய படிச் சதா விவசாயிகளுக்காக முறையிட்டு வந்தார். இவர் இவ்விஷயமாக அதிகாரிகளின் நடத்தையைக் கண்டித்து வந்தபோதிலும், அவர்கள் இவரது வார்த்தைகளை மதிப்புடன் நோக்கிவந்தனர். இறுதியில் அஸெம்பிளி மெம்பர்களில் சிலர் ஒரு கிராம்யக் கோஷ்டியை நிறுவியபோது இவர் அதன் தலைவரானர். கடந்த தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் நின்றபோது இவர் தோல்வியுற்றார் எனினும், அது இவரது பெருமைக்குப் பங்கமாகாது.

ஹைதராபாத்தில் இவர் செய்துள்ள சேவை எக்காலமும் நிலைத்திருக்க வல்லது; இவரது பெருமைக்கு அது போதுமானது. தவிர சநாதனிகளுக்காக இவர் முன்வந்தது இன்னும் அதிகச் சிறப்பை இவருக்கு அளிப்பதாகின்றது. இப்பெரியார் இன்னும் பல்லாண்டுகள் நம் தேசத்தின் புராதன மஹிமையை சரியாக உணர்த்துவதற்காகவும், நம் பெருமைக்காகவும், பூரண சுகத்துடனும், வாழ்ந்து வருமாறு சர்வேசுவரனைப் பிரார்த்திப்போமாக!

அசல் புளூ ஜாகர்

வைரங்கள்

இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட (CULTURE) நல்முத்துக்கள்

கிடைக்குமிடம்:

சிமன்லால் பிரதாப் சந்த்

175, சைனுபஜார், மதராஸ்.

ரூ. 100 இனம்

(மாந்திரீக மோதிரம்)

காதல் விஷயங்களில் வெற்றியைத் தரும். பரீக்ஷையில் தேர்ச்சி உண்டாகும், உத்தியோகம், புத்திர பாக்கியம், செல்வம் முதலியவைகளைத் தரும். வியாஜ்ஜியங்களில் வெற்றி, வியாதிகள் நீங்கும். அதிர்ஷ்டம் உண்டாகும். இதை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். விலை ரூ. 2.

BENGAL MESMERISM HOUSE,
(S M.) Panchpota, BENGAL.

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசுபெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

மகரத்வஜம்

ஆரோக்ய சஞ்சீவி

(ஒவ்வொரு கிராமத்திலும் ஸ்டாக்கிஸ்டு தேவை)

அநேகமாக

ஜலதோஷங்கள்

மூக்கிலும், தொண்டையிலுமே ஆரம்பிக்கின்றன.

Mistol

முளையிலேயே கிள்ளிவிடுகிறது.

சாமியின் சாமர்த்தியம்

—:[o]:—

"நியாயவாதி"

அன்று போலீசைச் சேர்ந்த ஒருவர் என்னுடன் தனது இலாகாவில் நடைபெறும் ஊழல்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அவர் முடித்ததும் அருகேயிருந்த தம்பியண்ணு வழக்கப்போல் தன் கதையை ஆரம்பித்தார்.

"காலம் வரவரக் கெட்டுப் போய்விட்டது. இப்பொழுது நடைபெறும் உத்தியோக வேட்டையில் வேலைக்குத் தகுதியானவர்கள் லபிப்பதில்லை. அதிர்ஷ்டமுள்ளவனுக்கே உத்தியோகம்கிடைக்கிறது அவன் அதை வகிக்க யோக்கியதையுள்ளவனு என்பதை நிர்ணயிக்க மேல் அதிகாரிகள் தகுந்த முறைகளைக் கையாளுவதில்லை. எனக்குத் தெரிந்த ஒருவர் போலீஸ் இன்ஸ்பெக்டராக வெகுகாலமாய் இருந்து வருகிறார். சந்தையில் அவருக்குக் காய் சறிகள் பொறுக்கி வாங்கத் தெரியாது. பாவம்! குற்றமற்ற அவருக்கு என்ன வல்லமை இருக்கும்? எனினும் அவரைத் திறமை வாய்ந்த உத்தியோகஸ்தர் என்று அவரது மேலதிகாரிகள் மெச்சுகின்றனர். இதற்குக் காரணம் என்ன தெரியமா? தனது மேல் உத்தியோகஸ்தர்களுக்குக் குல்லாய் போடும் வித்தையில் அவர் வல்லவர். அன்றேல் அவரால் ஒரு க்ஷணமேனும் தனது பதவியைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது.

பழைய நாட்களிலோ அப்படியில்லை. கெட்டிக்காரனது 'குட்டு' எட்டு நாட்களில் வெளிப்பட்டுவிடும் திறமை வாய்ந்த ஒருவன் தனது உத்தியோகத்தில் எவ்வளவு கீழ்க்கடையான ஸ்தானத்தில் உள்ளபோதிலும் அதி சீக்கிரமாய் முன்னுக்கு வர அனுகூலமான சாதனங்கள் இருந்தன. ஒருவனது 'பிரமோஷ'னுக்கு வேண்டிய அம்சங்கள் திறமையும் சுறுசுறுப்புமே. இவையில்லாத மனிதன் அக்காலத்தில் திண்டாட வேண்டியது தான்.

உதவி போலீஸ் சூபரிண்டெண்டு சாமி இறந்து முப்பது வருடங்களாகின்றன. என்றாலும் அவரது சாமர்த்தியத்தைப்பற்றி இன்னும் பல அதிசயக் கதைகள் வழங்கிவருகின்றன. ஆரம்பத்தில் அவர் ஒரு சேவகனுய் போலீஸ் இலாகாவில் புகுந்தார். எனினும் அவர் வெகு விரைவில் 'பிரமோஷன்' பெற்று அரசாங்கத்தாரது அபிமானத்துக்குப் பாத்திரமானார்.

சிறுவயது முதல் நான் சாமியுடன் பழகியிருக்கிறேன். அவரது குணதிசயங்களைப் பற்றியும் உத்தியோகத் திறமையையும் பற்றிப்பேச ஆரம்பித்தால், நாட்கள் கணக்கில் சொல்லிக்கொண்டிருக்கலாம். அவரது ஜீவகதை ஒரு கற்பனைக் கதையைத் தோற்கடிக்கும்படியான அதிசயமுள்ளது. அவரது வாழ்க்கையின் சம்பவங்களை வைத்துக்கொண்டு ஒரு அற்புதமான நாவலைத் தொகுத்துவிடலாம்.

தோற்றத்தில் அவர் ஆஜானுபாஹு. தேகக்கட்டும்வலிமை



மகாத்மா பிறந்த தினக் கொண்டாட்டத்தையொட்டிக் கும்பகோணத்தில் பல எளியவர்களுக்கு அன்னமிடப்பட்டது.

யும் பெற்றவர். எந்த முண்டனும் அவர்முன் நிற்க முடியாது. குஸ்தி போடுவதில் சமர்த்தர், எவ்வளவோகொள்ளைக்காரர்களை அவர் தன் கையால் பிடித்து விலங்கிட்டு ஜயிலில் அடைத்திருக்கிறார்.

பேச்சிலோ அவர் மகா சமர்த்தர். யாரையும் ஒரு நொடியில் வசீகரிக்கும் முகப்பொலிவைக் கொண்டவர். மிகுந்த விவேகமுள்ளவர். மனிதர்களது தாரதம்மியங்களை வெகு நுட்பமாய் கிரகிக்கும் சக்தியையுடையவர்.

உத்தியோகத்தில் அவர் மிகுந்த திறமை வாய்ந்தவர். யாரும் தன்னைக் குறைகூறாதபடி அவ்வளவு சாமர்த்தியமாய் தான் கைக்கொண்ட காரியத்தைப் பூர்த்தி செய்யும் ஆற்றலுள்ளவர். இல்லாவிடில் ஒரு எளிய சேவகனுய் உத்தியோகத்தில் புகுந்த அவருக்கு உதவி சூபரின்டெண்டெண்ட் பதவி எப்படிக் கிடைத்திருக்கக்கூடும்?

எவ்வளவு ஆபத்தான இடுக்கண்களிலிருந்தும் தப்பித்துக் கொள்ளும் திறமை அவருக்கு இருந்தது. அவரது ஆயுள் பூராவிலும் விஜயலக்ஷ்மி அவரது பங்கில் இருந்து அவருக்கு வெற்றியைக் கொடுத்தாள் என்பதில் சந்தேகமேயில்லை.

போலீஸ் சேவகனுய் அமர்ந்த மூன்று வருடங்களுக்குள் அவருக்கு சென்னையில் "உதவி சார்ஜண்ட்" பதவி கிடைத்தது மௌண்ட்ரோட்டிலுள்ள கவர்னர் பங்களாவில் காவல் புரிவதே அவரது முக்கிய கடமை. அவர் வேலை பார்க்க வந்த சில தினங்களுக்குள் கவர்னர் துரை முதல் பட்லர் வரையிலுள்ள எல்லாரும் அவர்மீது அன்புகொண்டனர். அவர்களுள் கவர்னர் துரையின் அந்தரங்கக் காரியதரிசியின் அபிமானம் அவருக்குப் பரிபூரணமாய் வாய்த்துவிட்டது.

கோடை காலம் கவர்னரும் அவரது குடும்பத்தாரும் பரிவாரமும் உதகமண்டலத்தில் இருந்தனர். சென்னை, கவர்ன்மெண்ட் ஹவுஸ் காலியாக இருந்தது. எனினும் சாமி அங்கே காவல் செய்துகொண்டு இருந்தார்.

அவருக்குச் சமீபத்தில் துப்பாக்கியைக் கையாள 'லைசென்ஸ்' கிடைத்தது. ஆனால் சிக்கிரத்தில் இது அவரை ஒரு விபரீதமான ஆபத்துக்குள்ளாக்கியது.

கவர்னர் பங்களாவுக்கு எதிரில் ஒரு வர்த்தகசாலை இருந்தது. அதன் அதிகாரி ஒரு வெள்ளைக்காரர். அவர் சீமையிலிருந்து ஒரு உயர்ந்த ஜாதி நாயைக் கொண்டுவந்து வளர்த்து வந்தார். மனைவி மக்களற்ற அவர், அந்த நாயைத் தனது உயிரினும் சிறந்ததாக மதித்து சீராட்டிப் போஷித்துவந்தார். அதன்மீது ஒரு துரும்பு விழுந்தாலும் காணச் சகியார். அவ்வளவு அன்பு அவருக்கு அந்த அருமை நாயிடம்!

அஸ்தமன ஸமயம் துரையின் நாய் பொழுது போக்காய் எங்கேயோ திரிந்துவிட்டுக் கவர்னர் பங்களாவிலுள்ள தோட்டத்தின் வழியே ஓடி வந்தது. அதைப்பார்த்து விட்டார் சாமி. அவர் கையில் அந்தச் சமயம் துப்பாக்கி இருந்தது. கத்தி பிடித்தவன் கையும் துப்பாக்கி பிடித்தவன் கையும் சும்மாய் இருக்குமா? குறிவைப்பதில் தனது திறமையைப் பரீக்ஷிக்கவேண்டி அவர் அந்த நாயை நோக்கிச் சுட்டார்.

அந்தோ பரிதாபம்! குண்டு நாயின் வயிற்றில் ஊடுருவியது. ரத்தப் பிரவாகத்துடனும் மரணவேதனையுடனும் ஓடிய அது பங்களாவை விட்டு வெளியே சென்று தனது யஜமானரையடைந்து அவரது பாதங்களில் விழுந்தது. அவ்வளவு தான். அதற்குப் பிராணன் போய்விட்டது.

தனது அன்பையே கொள்ளை கொண்ட நாயின் அநியாயமான மரணத்தைக் கண்ணுற்ற துரையின் மனநிலையை வர்ணிப்பது அஸாத்தியமான காரியம். சோகக்கடலில் அவர் ஆழ்ந்து தத்தளித்தார். தனது கண்மணியைச் சுட்டுக்கொன்ற பாதகனைச் சும்மா விடக்கூடாது என்று அவர் துடிதுடித்தார்.

கவர்னர் பங்களாவில் பாராக் கொடுக்கும் உதவி சார்ஜண்டு தனது நாயைச் சுட்டவன் என்பதை உணர்ந்தும் அவர், தனது ஆத்திரத்தையும் கோபத்தையும் மெய்ப்பிக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார். மாஜிஸ்டிரேட் கோர்ட்டிலிருந்து சாமிக்கு ஒரு "ஸம்மன" வந்தது. யாதொரு முகாந்திரமுமின்றி ஒரு பெரிய துரையின் நாயைச் சுட்டுக் கொன்றதற்காகப் போலீஸ் கமிஷனர் துரை சாமியை வேலையிலிருந்து "சஸ்பெண்ட்" செய்தார். (போலீஸ் கமிஷனர் துரை நாயை இழந்த துரையின் நண்பர் என்பதை இங்கு சொல்லவேண்டியது அவசிய

'கப்பா தோசை!'

ரூ. 500 இனும்!
திமிர் குஷ்டமும்,
வெண்குஷ்டமும்.

உலகக் கியாதி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பற்பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹக்கீம்களும் கைவிட்டதானுல்கூட பரவாயில்லை. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள். பலனில்லை என நிரூபிப்பவருக்கு ரூ. 500 இனும் 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ. 4. தபால் செலவு தனி.

SRI SWAMI & Co,
(34) Panchpota, Bengal.

மாயிருக்கிறது. "மாஜிஸ்டிரேட் அவனைத் தண்டிக்கட்டும். உடனே அவனுக்குச் சீட்டுக் கொடுத்து அவனை வீட்டுக்கு அனுப்புகிறேன்" என்று கமிஷனர் நாயின் சொந்தக்காரருக்கு உறுதிமொழி கூறியுள்ளார்).

"ஐயோ பாவம்! சாமியின் கதி அதோகதிதான் என்று அவாது உற்றுரும் உறவினரும் வருந்தினர். தினம் அவரைத் துக்கம் விசாரிக்க அவரது நண்பர்கள் அவரிடம் வந்தனர். ஆனால் சாமியின் முகத்தில் எள்ளளவாவது கவலையோ விசாரமோ இல்லை. இது விஷயமாய் தன்னை வினவுபவரிடம் அவர், "ஆம்! ஸம்மன் வந்திருக்கிறது. அடுத்தவாரம் விசாரணை; பயம் இல்லை; நான் விடுதலையடைந்து விடுவேன்" என்றும் "கமிஷனர் என்னை சஸ்பெண்ட் செய்திருக்கிறார். ஆனால் என்ன? விசாரணை முடிந்தபின் நான் மீண்டும் வேலை பார்ப்பது நிச்சயம்" என்று புன்னகையுடன் மறுமொழிகள் கூறுவார். ஆனால் அவர் எப்படித் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வார் என்பதும் அவர் மீண்டும் வேலை பார்க்க எப்படி ஸாத்தியமாகும் என்பதும் ஒருவருக்கும் விளங்கவில்லை. விளையாட்டுத்தனமாய் அவர் சுட்ட குண்டு அவாது உத்தியோகத்தையும் மானத்தையும் கெடுத்துவிட்டது என்பது பொதுவான அபிப்பிராயம்.

விசாரணைத் தேதிக்கு நான்கு நாட்களுக்கு முன் அவர் எங்கேயோ வெளியூருக்குச் சென்று திரும்பினர். அவர் எங்கே சென்றார் என்பதும் என்ன காரியமாய்ச் சென்றார் என்பதும் ஒருவருக்கும் தெரியாது.

விசாரணை தினம் வந்தது. மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஒரே கூட்டம். நானும் சாமியின் நண்பர்கள் பலரும் கவலையுடன் நியாயஸ்தலத்தில் இருந்தோம். நீதிபதியின் அருகேயுள்ள ஆஸனங்களில் நாயின் சொந்தக்காரரான வாதியும் கமிஷனர் துரையும் வீற்றிருந்தனர்.

நீதிபதி தனது ஸ்தானத்தில் உட்கார்ந்ததும் நாய் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கூண்டில் நின்ற சாமி நீதிபதியின் கேள்விக்கு 'நான் குற்றவாளியல்ல' என்று பயமற்ற குரலில் கூறினர்.

பின்னர் வாதிக்காக ஆஜரான பாரிஸ்டர் துரை நடந்த சம்பவங்களை விளக்கிக் கூறினர். சாக்ஷியமும் கூறப்பட்டது.

சாமிக்காக யாரும் ஆஜராகவில்லை. தானே தனது கக்ஷியைக் கூறச் சித்தமாயிருந்தார்.

மாஜிஸ்டிரேட் சாமியை நோக்கி, "உமது மீது சாட்டப்பட்ட குற்றத்துக்கு என்ன சமாதானம் கூறுகிறீர்? உமக்கு சாக்ஷிகள் உண்டா?" என்று வினவினர்.

சாமி "நான்குற்றவாளியல்லவென்பதை நிரூபிக்க ஒரே ஒரு தஸ்தாவேஜை தாக்கல் செய்கிறேன்" என்று தன் சட்டைப் பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து அதை நீதிபதியிடம் கொடுத்தார்.

அந்தக் காகிதத்தைக் கண்ணுற்ற நீதிபதியின் முகம் மாறியது. கைதிக் கூண்டில் நின்ற சாமியை அதுவரையில் கடுகடு வென்று நோக்கிய அவர் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. வாதியையும் அவாது நியாயவாதியையும் தன்னருகே யழைத்தார். "இதைப் படியுங்கள். எதிரி தன் கடமையைச் செய்தாரேயன்றி வேறில்லை" என்றார்.

அவர் நீட்டிய காகிதத்தை ஆவலுடன் வாதிபும் அவருக்காக வாதித்த பாரிஸ்டரும் படித்தனர். அவர்கள் முகங்களில் அசடு வழிந்தது.

"ஏன்! வழக்கைமேல்நடத்த வேண்டுமா?" என்று மாஜிஸ்டிரேட் பாரிஸ்டரை வினவினர்.

"என்னால் சொல்ல வேண்டியது இனி ஒன்றும் இல்லை" என்று முடித்தார் பிரமை பிடித்தவர்போல் தோன்றிய பாரிஸ்டர்.

சாமியை நோக்கிய நீதிபதி, 'நீர் குற்றவாளியல்ல. உம்மை விடுதலை செய்திருக்கிறோம்" என்றார்.

வெற்றி ஜ்வலிக்கும் முகத்துடன் சாமி கைதிக்கூண்டை விட்டு இறங்கினர்.

சற்று நேரத்துக்குப் பின் தனது வீட்டையடைந்த சாமி அவரை ஆவலுடன் தொடர்ந்து சென்ற என்னிடமும் மற்றவர்களிடமும் தனது ஜயத்தின் மர்மத்தை விளக்கிப் பின்வருமாறு கூறினர்:—

"நான் முன் யோசனையின்றி நாயைச் சுட்டதற்கு என்னையே கடிந்து கொண்டேன். மாஜிஸ்டிரேட் சம்மனும் கமிஷனரது 'பென்ஷன்' உத்தரவும் எனது நடத்தையின் காரணமான விளைவுகள். இவற்றினின்று எப்படி மானமாய் தப்பித்துக்கொள்ளுவது என்பது எனக்குத் தெரியவில்லை. பின்னர் எனக்கு ஒரு யோசனை தோன்றியது. உடனே நான் உதகமண்டலத்துக்குப் பிரயாணமானேன்.

மறுநாள் நான் கவர்னர் துரையின் காரியதரிசியின் முன்பு வணக்கமாய் நின்றேன். அவர் என்னைச் சந்தோஷத்துடன் வரவேற்றார். "ஏது சாமி, இவ்வளவுதூரம்" என்றார். நான் கொண்டுபோன பழங்களையும் பக்ஷணங்களையும் அவர் புசித்துக்கொண்டிருக்கையில் நான் மெதுவாய் "என் கடமையைச் செலுத்தினதினல் எனக்கு ஒரு பெரிய ஆபத்து நேரிட்டிருக்கிறது" என்றேன். நான் சமர்ப்பித்த தின்பண்டங்களின் சுவையில் ஈடுபட்ட அவர், "அதுஎன்ன அப்பா?" என்று வினவினர்.

சிறந்த கூந்தல் ஆகாரம்

உடலுக்கு எப்படி நல்ல உணவு அவசியமோ அதே மாதிரி கூந்தலுக்கும் சிறந்த ஆகாரம் அவசியமானது.

எனவே உலகப்புகழ்பெற்ற **காமினியா ஆயில்** (ரிஜிஸ்டர்ட்) உபயோகியுங்கள். கூந்தலின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அத்யாவசியமான சத்துக்கள் பல சேர்ந்தது. மூளைக்குக் குளிர்ச்சி; துல்லிய மணம் நிறைந்தது.

விலை புட்டி 1-க்கு ரூ. 1.
,, 3 புட்டிகள் ரூ. 2-10.

வி. பி. சார்ஜ் தனி.

தபால் செலவுக்காக அரையணு ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு சாம்பிள் இலவசம்.

ப்ராசீன மலர்களின் சுவாசனையும், புத்தப் புதிய இனிமையும் வாழ்விற்கு மகிழ்ச்சியூட்டுபவை; இவ்வளவையும் கீழ்க்கண்டதன் வாசனையில் நன்கு அனுபவிக்கலாம்.

ஆட்டோ டில்பஹார்

(ரிஜிஸ்டர்ட்)

ஒரு சில துளிகள் பல நாட்களுக்கு அழியாத வாசனையூட்டும்; ஏனெனில் ஆட்டோ டில்பஹாரில் விரைவில் ஆவியாக மாறிவிடும் ஆல்கஹால் கிடையாது.

விலை $\frac{1}{4}$ அவுன்ஸ் ரூ. 1-4. 1 டிராம் 12 அணு.

தபால் செலவு தனி.

சோல் ஏஜெண்டுகள்:—

The Anglo Indian Drug & Chemical Co
BOMBAY 2.

BOERICKE & TAFEL'S

அசல் ஹோமியோபதிக் டைல்யூஷன் மருந்துகள் (உபயோகமற்றவையைக் கொண்டு தயாரிக்கப்பட்டவையல்ல) டிஷ்யூ நிவாரணிகளும்-$\frac{1}{2}$ அவுன்ஸ் முதல் 4 அவுன்ஸ் வரையில் டிரைசுரேஷன்ஸ் & மாத்திரைகள்; அசல் சீல் வைத்த புட்டிகளில் கிடைக்கும். கேட்லாக் இனம்.

GUERNSEY'S OBSTETRICS AND DISEASES OF WOMEN AND YOUNG CHILDREN Rs. 13/-

SETT DEY & CO.,
40-A, Strand Road, Calcutta



ஜகத்ரக்ஷக ஸ்ரீ ஷண்முக யந்திரம் 125,6600. ஜனங்கள் போற்றுவது பரீஷை வெற்றி, ஜீவன விருத்தி, சொற்பன மிரட்சி, சத்துரு அடக்கம், வழக்கு ஜெயம், புத்திரவிருத்தி, குடும்ப ஒற்றுமை, நோய்பேய் ஒழிதல், யந்திரம் 1க்கு ரூ 2. மாந்திரீக மருத்துவ ஆபீஸ், வாலாஜாபாத், P.O. S.I.R. சென்னை.

அப்புறம் கேட்கவேண்டுமா? "நான் பங்களாவைக் காவல் காத்துக்கொண்டிருக்கையில் ஒரு நாய் வெறி பிடித்தது போல் தோட்டத்தில் ஓடிற்று. அதை நான் துப்பாக்கியால் சுட்டுவிட்டேன். அது எதிரேயுள்ள கம்பெனி துரையின் அருமை நாயாம். "துரை" என் மீது குற்றவழக்கைத் தொடர்ந்திருக்கிறார். கமிஷனர் துரை அவாது நண்பர். என்னை வேலையிலிருந்து 'சஸ்பெண்ட்' செய்திருக்கிறார்" என்றேன்.

காரியதரிசி துரை சிரித்தார். "இதுதானு பிரமாதம்? இதற்கா பயப்படுகிறாய்? அடே முட்டாள்" என்று சொல்லிவிட்டு ஒரு காகிதத்தை எடுத்தார். அதில் கவர்னர் பங்களாவில் உத்தரவன்றிப் பிரவேசிக்கும் கால்நடைகளையும் நாய், பன்றி முதலிய பிராணிகளையும் சுட்டுவிட எனக்கு அதிகாரம் கொடுத்ததுடன் அந்த உத்தரவைச் சுமார் இரண்டு மாதத்துக்கு முன் பிறப்பித்ததாகத் தேதி போட்டு முத்திரை வைத்துக்கொடுத்தார். அந்தக் காகிதத்தை ஓசைப்படாமல் வாங்கிக்கொண்டு ஊருக்குத் திரும்பினேன். அதைத்தான் நான் நீதிபதிமுன் தாக்கல் செய்து விடுதலை பெற்றேன்"

என்று முடித்தார்.

சமயோசித புத்தி நட்பமும் ஆபத்திலும் கலங்காத திடச்சித்தமும் இல்லாவிடில் சாமி தனக்கு நேரிட்ட இடையூறிலிருந்து எப்படித் தப்பித்திருக்கமுடியும்?

"நல்லது, நேரமாகிறது. இன்னொரு தடவை நான் சாமியின் உத்தியோகத் திறமையை விளக்க வேறு ஒரு சம்பவத்தைச் சொல்லுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே வெளியே போக எழுந்தார் தம்பியண்ணு

ஜம்புலிங்கத்தின்

திருவிளையாடல்கள்

(30-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயலெக்ஷிமி உலகநாதனை எதிட்டுப் பார்க்கவுமில்லை. வாயைத்திறந்து பேசவுமில்லை.

உலக:—நீ உன் கண்களால் அந்த லெட்டரைப் பார்த்தாலொழிய நம்பமாட்டாய் போலிருக்கிறது. சரி! இந்தா பார்.

என்று மேஜையின் மேலிருந்த அக்கடிதத்தை எடுத்து அவளிடம் நீட்டினன். அதையும் அவள் சட்டை செய்யவில்லை. கடைசியாகக் கடிதத்தைப்பிரித்து, அவளது கண்களுக்கெதிராகப்படிக்கும் தூரத்தில், பிடித்துக்கொண்டான். ஜெயலெக்ஷிமி ஜாடையாய் கடிதத்தைப்படித்துக் கொண்டாள். பிறகு நிதானமாய் அவனைப்பார்த்து, "இந்தக் கடிதமோ?" என்றுகொஞ்சினுள்.

உலக:-ஆம்! இதேதான்! உனக்கு இன்னமும் நம்பிக்கையில்லையானல் என்னைச் சோதித்துப்பார்த்துக் கொள்

என்று தன் கைகளைத் தலைக்குமேல் உயர்த்திக் கொண்டு, அவன் தன்னைச் சோதித்துப் பார்ப்பதற்குத் தான் தயாராய் இருப்பதாகக் காண்பித்துக் கொண்டான். அவள் அதற்கு இசைந்து சட்டையின் பைகளை ஒவ்வொன்ருய் ஆராய்ந்து பார்த்தாள். ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியாய் உள் சட்டைப்பையில் கையை விட்டுப் பார்த்தாள். அதில், ஜாக்கிரதையாய் மடிக்கப்பட்ட கடிதம் ஒன்றிருந்தது "இதோ அகப்பட்டுக்கொண்டீர்கள்!" என்று ஆரவாரித்துக் கொண்டே கடிதத்தை எடுத்துப் பிரித்துப்பார்த்தாள். ஒருபுறம் ஏமாற்றமும், மற்ருெருபுறம் குதூகலமும் அடைந்தாள். உடனே தலையையிறங்க விட்டு உலகநாதனின் மார்பின் மேற் சாய்ந்துகொண்டு,

"நான் பெண்புத்தியால்—உங்களை—" என்று மீதியையும் சொல்லி முடிக்குமுன், அவள் சொல்லப் போவதின்னதென்பதை யறிந்துகொண்டு,

"ஓ! அதெல்லாம் பாதகமில்லை. நீ சந்தேகப்பட்டது அந்த சந்தர்ப்பத்தில் சகஜந்தான்"

என்று மிக்க ஆசையோடு அவளை ஒரு கையினல் சேர்த்தணைத்துக்கொண்டான். ஜெயலெக்ஷிமி ஜம்புலிங்கத்தின் கடிதத்தைக் காண்பித்து,

"இது உண்மையில் அவனிடமிருந்தா வந்திருக்கிறது?" என்று கேட்டாள். உலகநாதன் "ஆம்" என்று தலையையசைத்தான்.

ஜெய:—அவன் என்ன அவ்வளவு கொடியவனு! உங்களைக்கூட இப்படி—

உலக:—அந்த அயோக்கியனைப்பற்றி இப்பொழுதென்ன? —அதிருக்கட்டும்—நீ—

ஜெய:—உங்களுக்கென்ன ஆண்பிள்ளை இங்கேயேயிருக்கப் போவதாய்ச் சொன்னீர்கள். இப்பொழுது ஊருக்குப் போகும்படியாய் வந்துவிட்டதே! நான் என்னென்னவோ எண்ணிக்கொண்டிருந்தேன்! இந்தக் கம்பெனி

நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி!!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759: : எழும்பூர், மதராஸ்.

ஜலதோஷம்

இதனின்றும்

விடுபடுங்கள்.



ஜலதோஷம்! அப்பப்பா! மகா தொந்தரவு! வெறுமனே தும்மலும, இருமலும் வரும். கண்ணிலிருந்து ஜலம் பெருகும். தலை பளுவாகயிருக்கும்; ஒன்றும் செய்யத் தோன்ருது. "சளி பிடித்தால் சனி பிடித்த மாதிரி" என்று சொல்வதுண்டு 'பெப்ஸ்' மாத்திரைகளைச் சப்பி மேற்படி சங்கடங்களை ஒழியுங்கள்.

பெப்ஸின் கிருமி நாச ஆவி சுவாசாசயத்தினுள் சென்றுகிருமிகளை யழிக்கிறது. தொண்டைக்கும் சமன மேற்படும் பெப்ஸ் டட்டி ஒன்று வாங்கி, இருமல் தொண்டைப்புண், மார்பு வலி முதலியவற்றிற்கு உபயோகியுங்கள். கைக் கடக்கமான புட்டிகளில் ரூ. 1 வீதம் கிடைக்கும்.

ஏஜெண்டுகள்:

மேஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, மதராஸ்.

பெப்ஸ் கிருமி நாச சுவாச நிவாரண மாத்திரை உட்கொள்க

பெப்ச் PEPS

ஜகப்பிரசித்தி பெற்ற

ஆர். மூகம் அண்டு கம்பெனியாரின்

நெ. 1. மணிமார்க் பட்டணம்

மூக்குத்தூளை

உபயோகியுங்கள்.

1 நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2 நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8

ஏஜண்டுகள் தேவை:—

விலாசம்: ஆர் மூகம் அண்டு கம்பெனி, நெ. 5, ஓலடு ஜெயில் தெருவு, மதராஸ்

Tele:—"SIMILICURE" Box 643 CAL

வெளிவந்து விட்டன!

ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை

தத்துவம்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co.,
Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.

"உங்கள்

வருங்கால

அதிர்ஷ்டப்"

பண்டிட் M R K மூர்த்தி, ஜோதிஷ கலா வல்லபர்

பண்டிட் E. S. K. சுவாமி, ஜோதிஷ தத்வ ஞ்யானீ

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1, ஜாதகத்தின் பேரில் கேள்வி 1-க்கு ரூ. 1, ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ. 2, நேரில் ஜாதகம் பார்க்க ரூ. 5, ஆயுள் வரை பொதுப் பலன் எழுத ரூ. 10.

''ஜோதிட கழகம்' 14', பிராட்வே, மதராஸ்.

யாருடன் என்னுடைய ஒப்பந்தம் முடிய இன்னும் ஒருமாதமிருக்கிறதே! இல்லாவிடில், அவர்களையும் கூட்டிக்கொண்டு இப்படியே கிளம்பிவிடுவேனே! ஒப்பந்தமிருந்தாலென்ன? நஷ்டத்தை வேண்டுமானாலும்—"

உலக:—எல்லாவற்றையும் நீயே பேசி விடுகிறாயே! நான் சொல்லப்போவதைக் கொஞ்சம் கேட்க வேண்டாமா? நான் இந்த ஊரை விட்டு ஒரு அடி கூட எடுத்து வைக்கப் போவதில்லை. நீ உன் கவலையை விடு.

ஜெய:—அப்படியானால் — அவன்?

உலக:—அவன் கிடக்கிறான்! அயோக்கியப்பயல்! அவனுடைய மிரட்டலுக்கெல்லாம் நானா மிரள்கிறவன்? அந்த மற்றொரு கடிதத்தைக் கவனித்தாயல்லவா?

ஜெய:—போலீஸ் கமிஷ—

என்று சொல்லுமுன் உலகநாதன் அவளது வாயைப் பொத்திக்கொண்டே,

"பெயரைக் குறிக்காதே. விஷயம் வெகு ரகஸியமாயிருக்கவேண்டும்"

என்று சொல்லித் தன் கையை எடுத்தான்.

ஜெய:—இங்கு நாம் தானேயிருக்கிறோம்!

உலக:-பகலில் பக்கம்பார்த்துப் பேசு. இரவில் அதுகூடப் பேசாதே! என்று சொல்வதில்லையா? இங்குகூடத் தான் பேசக்கூடாது. இந்தச் சுவருக்குக்கூட காதிருக்கும்

ஜெய:-என்னவோ! பிரமாத ரகஸியம்! ஒரோர் சமயம் எனக்கு எப்படி வருகிறது தெரியுமா?

உலக:—இப்பொழுது வர வேண்டாம். மேளம் "டமடம" வென்று அடிக்கும்பொழுது உன் கழுத்தில் முடியைப் போடுவேனே! அப்பொழுது வரட்டும்.

ஜெய:—எப்படியோ கோபமெல்லாம் பறந்துபோய் விடுகிறதே!

உலக:—போகட்டும், நல்லதாயிற்று. உம் — ஜெயா. நீ வேஷம் போட்டுக்கொள்ளும் பௌடர் பெட்டி எங்கே?

ஜெய:—மறுபடியும் ஊர்சுற்றப் புறப்பட்டு விட்டீர்களா? இப்பொழுது எதற்கு அது?

உலக:- அவசரப்படுகிறாயே. சொல்லமாட்டேனா?

ஜெய:—நீங்கள்சொன்னாலும் சரி, சொல்லாவிட்டாலும் சரி, நானும் கூட வருவேன்

என்று சொல்லிக்கொண்டே அடுத்த அறைக்குள் சென்று வேஷம் போட்டுக்கொள்வதற்கு வேண்டிய சாமான்கள் அடங்கிய பெட்டியை எடுத்துக்கொண்டுவந்து வைத்தாள்.

ஜெய:—என்ன, என்னையும் கூட அழைத்துக்கொண்டு போகிறீர்களல்லவா?

உலக: [பெருமூச்செறிந்துகொண்டே] நாமிருவரும் சேர்ந்து செல்லக் கூடிய காரியமாயிருந்தால், எனக் கெவ்வளவு ஆனந்தத்தைக் கொடுக்கும் தெரியுமா?

ஜெய:—அதெல்லாம் முடியாது. நான் கட்டாயம் கூட வருவேன்.

உலக:—போகுமிடத்தில் ஏதாவது அசந்தர்ப்பம்.

ஜெய:—அதனால் உங்களுக்கு மட்டும் பாதகமில்லையோ?

உலக:—நான்தானா நீ?

ஜெய:—கம்பெனியில் நான் செய்துகொண்டிருக்கும் ஒப்பந்தத்திற்காகச் சொல்லுகிறீர்களா? அதை எப்பொழுது ஒழித்துவிட்டு, உங்களோடு இணை பிரியாமலிருப்போம் என்று தோன்றுகிறது. நீங்கள் ஒரோர் சமயம் ஊரைச் சுற்றிவிட்டு வந்து, அங்கு நடந்ததையெல்லாம் சொல்லக் கேட்கும்பொழுது, நானும் உங்களுடன்கூட அங்கிருந்தேனில்லையே என்று தோன்றுகிறது.

உலக:—இன்று அப்படிப் பட்ட சங்கதி ஒன்றுமேயில்லையே! அந்தப்பயல்—

ஜெய:—ஐயோ! ஜம்புலிங்கத்தைத் தேடிக்கொண்டா போகிறீர்கள்? நான் தடை செய்யவில்லை. தயவு செய்து ஜாக்கிரதையாய்ச் சென்று வாருங்கள். என்னை அம்பலத்தில் விட்டுவிடாதீர்கள்.

உலக:—அதெல்லாம் உஷாராய்த்தானிருப்பேன். உன்னைக் கண்ட பிறகுதான், என் உயிர் எனக்குச் சர்க்கரையாய்ப் போய்விட்டதே!

ஜெய:—எப்பொழுதும் உங்களுக்குக் கேலிதான். சரி, வேடம் மாற்றுங்கள். இன்றைக்கு என்ன வேஷமோ!

சுமார் பதினைந்து நிமிஷங்கள் கழிந்திருக்கும்; ஜெயலெக்ஷிமியும் தன்னால் ஆனதைச் செய்துகொண்டிருந்தாள்.

ஜெய:—ராஜா மாதிரியாகயிருப்பதைவிட்டு, இதென்ன வேண்டியிருக்கிறது! யாருக்கு வந்த விருந்தோ என்றிருக்காமல் இதையெல்லாம் வீணாய் இழுத்துப் போட்டுக்கொள்கிறீர்களே!

உலக:—அந்தப்பயல் என்னை எப்படி எளனஞ் செய்திருக்கிறான், தெரியுமா? அது தெரிந்தால், நீயே என்னை—

ஜெய:—அதைத் தான் சொன்னீர்களே. சரி, எப்படியாவது ஜாக்கிரதையாய் வந்து சேருங்கள். உங்களுக்கு ரோஷம் அதிகம். ஹை! விட்டேனா பார்' என்று தலைகால் தெரியாமல் பாய்ந்துவிடப் போகிறீர்கள். நான் ஒருத்தி இருக்கிறேன். ஜாக்கிரதை திரும்ப நோய் வந்து விடுகிறீர்களா?

உலக:—அதைமட்டும் என்னால் உறுதி சொல்லமுடியாது. கூடியமட்டில், இங்கேயே வரப்பார்க்கிறேன். இல்லாவிட்டால், காலையில் கட்டாயம் வருகிறேன். நான் போய் வரட்டுமா?

என்று கைகளைப்பற்றிக் குலுக்கிவிட்டு, மாடியைவிட்டுக்கீழே யிறங்கினான். கீழே



நீங்கள் நீராடும் அறைகளுக்கு

பளபளப்பான வெண்மை ஸானிடெரி அமைப்புக் கருவிகள்.

பர்ன்ஸ் பளபளப்பான வெண்மைக் கருவிகளில் சதுரக்கல்கள், வாஷ் பேஸின்கள், டப்ளியு-ஸி-போன்றவைகள் எல்லா பிரதான ஸானிடெரி என்ஜினீயர்களிடமும் கிடைக்கும். இவையெல்லாம் இந்தியாவில் செய்யப்படுவதுடன், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கருவிகளைவிட மலிவானவை.

படங்களுடன் கூடிய பிரசாரங்கள் வேண்டுவோருக்கு அனுப்பப்படும்.



தி பாட்ரீஸ், ராணிகஞ்சு

M/A. பர்ன் & கம்பெனி லிமிடெட், 12, மிஷின் ரோ. கல்கத்தா.

தென்னிந்தியாவிற்கு ஏஜண்டுகள் :

பம்பாய் கம்பெனி லிமிடெட், தபாற் பெட்டி 109, மதராஸ்.

B.N.K. 06

கெற்ப சஞ்சீவி எண்ணை.

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திரக்ஷி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்புவலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிர் பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒருசெம்பு ஜலங்கூட தூக்கமுடியாத பலஹீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கெற்பப்பை சுத்திகரிக்கப்பட்டு, கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். 6-வித மலடு தீரும். கெற்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளைக் கூட்டுடன் வெளியிலகற்றிவிடும். திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

1 நபருக்கு 3 புட்டி வேண்டும்.

1 புட்டி ரூ. 2. 3-புட்டி ரூ. 5. செலவு வேறு

குணம் இல்லாவிடில் ரூபா 5 வாபீஸ்

பழனி வைத்திய ஆசிரியர்

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

சித்த வைத்திய சாலை,

146, புரசவாக்கம் ஹைரோட், சென்னை.

தலைமை ஆபீஸ், பழனி

நஞ்சன்கூடு பல்பொடி

(டப்பி) I.D.L №61. மெடிகேடட் (அணா 4

ஜீர்சிப் — ஜீர்ணம் உற்சாகம் — அஜீர்ண பித்த சமனி

லவடன்ஸால் — வீர்யவிருத்திக்கும் சுகநித்திரைக்கும்

நின்றிருந்த வேலைக்காரன் உலகநாதனைக் கண்டதும் திகைத்துவிட்டான். தான் அங்கேயேயிருக்க, எப்படித் தன்னையறியாமல் இம்முரட்டு மனிதன் மாடிக்குச் சென்றான் என்ற ஆச்சரியமும் மாடியில் இருந்த ஜெயலக்ஷ்மிக்கு என்ன ஆபத்தை உண்டாக்கிவிட்டிருப்பானோவென்ற பயமும் அடைந்தவனாய், 'டேய்! நில்லு அப்படியே. யார்றா நீ? உன்னை யார் மேலே உட்டது? என்னா எத்திக்கினு போறே?'' என்று வழியை மறித்துக்கொண்டு அதட்டினான்.

இதைக் கண்ட உலகநாதன், தன்னுடைய வேஷம் நன்றாய்ப் பலித்திருக்கின்றதென்று கண்டுகொண்டு, வேலைக்காரனை நோக்கிக் கலகலவென்று நகைத்தான். இதையெல்லாம் மாடியிலிருந்து கேட்டுக்கொண்டே யிறங்கி வந்துகொண்டிருந்த ஜெயலக்ஷ்மி "நம்ப ஐயாடா! உனக்குத் தெரியவில்லையா?'' என்று தானும் நகைத்தாள். அவள் சொன்ன பிறகுதான் அவனுக்கு ஒருவாறு அடையாளந் தெரிந்தது.

"நம்ப ஐயாவுங்களா! அடடே! நல்லாப் பொருந்தியிருக்குதே வேசம்!'' என்று சொல்லிக் கொண்டே வாயிற்கதவை நன்றாய்த் திறந்துவிட்டு, ஆச்சரியத்துடன், உலகநாதன் வெளியேபோமளவும் அவனையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, கதவைச் சாத்திக்கொண்டு தன் வேலையைக் கவனிக்கச் சென்றான்.

XVI

ஜெயலக்ஷ்மியின் வீட்டை விட்டுச் சென்ற உலகநாதன், தங்கசாலைத் தெருவின் வழியாகவே நேராய்ச் சென்று ஆதியப்ப நாயக்கன் வீதியில் திரும்பினான். அங்கிருந்த ஓர் கள்ளுக்கடையின் எதிரில் போய் நின்று சுமார் கால் மணி நேரம் வரையில் வேவு பார்த்துக் கொண்டிருந்தான். அங்கு இவன் சந்தேகிக்கக் கூடியதாய் ஒன்றையுங் காணவில்லை. நேராக அதை விட்டு, யானைகௌனித் தெருவிலிருந்த சாராயக் கடையண்டை சென்றான். அங்கும் சுமார் அரை மணி நேரம் நின்றுகொண்டிருந்திருப்பான். அதற்குமேல் அங்கு நின்றுகொண்டிருப்பது வீண் என்ற முடிவிற்கு வந்தவனாய், வேறு எங்கு செல்லலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும் சமயம் இவன் பக்கமாக இரண்டு நபர்கள் சென்றார்கள். அவர்களில் ஒருவன், மற்றொருவனை, கள்ளுக்கடையை நோக்கி 'வா அண்ணே, ஐயே, வாயின்னா'' என்றிழுத்தான்.

மற்றவன்:—அடே, வாணாம் வாப்பா. அங்கே போய் பாத்துக்கலாம். இங்கேயே நேரமாய் பூட்டா, அப்பாலே டயத்துக்குப் போக முடியாதே. டயத்துக்குப் போவாகாட்டி—

முதல் மனி:—நீ என்னா அண்ணே நீ! அப்படி டயப்புடரயே. இந்தாளெப்பாத்தா நாம்ப கண் முளிச்சோம்?

மற்றவன்:—அதெல்லாம் என்னாத்துக்கப்பா, பெரிய பேச்சு! நீ அறியாதவன். அதான் அப்படிப் பேசறே. நீ எல்லாம் எம்மாத்தம்? ஒன்னொன போலீஸ்காரன்களையே தடாக்கா காண்பிக்க சொல்ல... நீ ஒணும்னா போ. நாவல்லே

என்று கையை மெதுவாகத் திமிறிக் கொண்டு, இரண்டடி நடந்தான்.

முதல் மனி:—எனக்கு மாத்தம் என்னா அண்ணே. எதோ வந்தா, தமாஷாப் போலாம்னு சொன்னேன்

என்று அவனைப் பின்பற்றிச் சென்றான்.

இவைகளை யெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த உலகநாதன் மனது 'பட பட' வென்று அடித்துக்கொண்டது. அவர்களில், ஒருவன், 'ஒன்னுன் போலீஸைப் ஒரு தடாக்கா காண்பிக்கச் சொல்'என்று சொன்னதைக் கேட்க, இவர்களைப் பின்பற்றிச் சென்றால், கட்டாயம் எதாவது உளவு அக்ப்படும் என்று உறுதி செய்துகொண்டான். உடனே அவர்கள் அறிந்துகொள்ளாதபடி அவர்களைப் பின்தொடர்ந்து சென்றான்.

அவர்கள் இருவரும் பாலத்தைக் கடந்து, பீபில்ஸ் பார்க்கிற்குள் நுழைந்து, தெற்கு நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார்கள். உலகநாதனும் அவர்களைத் தன் பார்வையினின்றும் மறையவிடாமல், பின்தொடர்ந்து சென்று நேராகச் சிந்தாதிரிப்பேட்டையையடைந்து கூவம் ஆற்றோரமாகப் போய்க்கொண்டிருக்கிறான். முன்சென்ற இருவர்களும், எழும்பூர், ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்லும் பாலத்தைத்தாண்டி ஆற்றோரமாகவே போய் அங்கிருந்த ஓர் சாராயக்கடைக்குள் நுழைந்துவிட்டார்கள். உலகநாதனுக்கு, தானும் உள்ளே நுழைவதா, வேண்டாமா என்ற சந்தேகம் தோன்றியது. உள்ளே சென்றால் நல்ல உளவுகள் எதாவது கிடைத்தாலும் கிடைக்கும். ஒருக்கால் பெரிய ஆபத்தில் சிக்கிக் கொண்டாலும் சிக்கிக் கொள்ளக்கூடும் தான் தலையிட்டுக் கொண்ட ஆசாமி சாமானியப் பேர்வழியல்ல. அவனுடைய கைவரிசையை முன்பே கண்டிருக்கிறான். அப்பொழுது அவனிடம் அடைந்த அவமானத்தை எவ்விதத்திலும் போக்கடித்துக்கொள்ள வேண்டும் என்ற ஆத்திரத்தினால் இதில் தலையிட்டுக் கொண்டானே யொழிய வேறல்ல; இப்பொழுதும் அதே எண்ணம் அவனைத் தூண்டியதாகையால், வந்தது வரட்டும் என்று உறுதி செய்துகொண்டு, அவர்கள் சென்ற கடைக்குள் இவனும் நுழைந்தான்.

(தொடரும்.)

HAVE A SOUND SLEEP



By using our Indian-made Mosquito curtains, highly approved by persons of every rank for their strong netting, durability and beautiful finishing.

PRICES.

		Ordi-nary.	Supe-rior.	Best	
6' x 3½' x 3½'	Re.	1- 0	1- 4	1- 8	each
6' x 4' x 4'	„	1- 4	1- 8	1-12	„
6½' x 4½' x 4½'	„	1- 8	1-12	2- 0	„
7' x 5' x 5'	„	1-12	2- 0	2- 4	„
7½' x 6' x 6'	„	2- 0	2- 4	2- 8	„

Purchaser of three will get one curtain 6' x 4' x 4' free. Packing Free.
POSTAGE EXTRA.

PRABHAT TRADING CO.,
12, Sikderpara Lane, Barabazaar,
CALCUTTA.

டாக்டர் ஜம்மி வெங்கடரமணய்யாவின்

லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு நிகரற்றது என்று டாக்டர்களாலும், பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது
ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மசி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்.

செவிடு

"டெப்கில்லர்'' செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாக விருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நிரந்தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறார். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக் கோளாறு, மூக்குக் கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடிதலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ. 5; தபால் செலவு 7-அணா
சென்னையில் எல்லா பிரபல மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும். அல்லது,

MAHAMBS TRADING COMPANY OF ASIA, Indian Depot, P. O. Box 2186 Bombay.

ஆயுள் விருத்தியைக் கொடுப்பது

இந்திய தேத்தண்ணீர்



நீண்ட ஆயுளைப் பெறச் சுகாதாரமும் நற்பழக்கங்களும் எவ்வளவு முக்கியமாமோ அவ்வளவு ஆகாராதிகளும் முக்கியமாகும். அதி உஷ்ணப் பிரதேசமான இந்தியாவில் நீண்ட ஆயுளைக் கொடுக்கக் கூடிய பழக்கத்தை மேற்கொள்ளவேண்டும். ஆயுசு விருத்திக்கு இந்திய தேயிலை பானம் மிகவும் சிறந்ததென்று தேயிலை உபயோகிக்கும் தேசங்களிலுள்ள எல்லா அனுபவஸ்தர்களும் கண்டிருக்கிறார்களென்றால் நாமும் ஏன் இந்நற்பழக்கத்தை மேற்கொள்ளக் கூடாது.

தேத்தண்ணீர் செய்யும் முறை

சுத்தமான ஜலத்தைக் கொதிக்க வை. ஈரமில்லாத பாத்திரமொன்றையெடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும் அதிகமாக ஒருஸ்பூன் நல்ல இந்திய தேயிலையைப் போட்டுக் கொதிக்கும் ஜலத்தை விடு. ஐந்து நிமிஷம் கழித்து வடிக் கட்டி பாலும் சர்க்கரையும் சேர்த்துக்கொள்ளவும்.

ஆரோக்கியமானது -

இந்திய தேயிலை பானம்

IK. 14N.

Regd. No. 2514.

கீர்த்திபெற்ற தீர்க்க தரிசிகளின்

சரித்திரக்கொத்து.

சென்னை ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்யாயராயிருந்த கீர்த்தனுசார்ய

ஸி. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், பி. ஏ., எழுதியது

கீழ்க்கண்ட ஏழு மத ஸ்தாபகர்களின் திவ்ய சரித்திரங்கள் வெளியாயிருக்கின்றன. சிறுவர் சிறுமியர் முதல் எல்லோரும் படித்துணருமாறு எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்கள்.

1. ஸ்ரீ சங்கரர்
2. ஸ்ரீ ராமாநுஜர்
3. ஸ்ரீ மத்வர்
4. ஸ்ரீ குருநானக்
5. ஸ்ரீ மகாவீரர்
6. ஸ்ரீ கௌதமபுத்தர்
7. மகமத் நபி

ஒவ்வொரு புத்தகத்தின் விலை அணு 5

7 புத்தகங்களும் ஒரே புத்தகமாக காலிகோ கிலிட் பைண்டுள்ளது. விலை ரூபா 2-8.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை,

சென்னை

Printed and Published by T. S. Visvanatha Iyer B. A. at the Swadesamitran, Power Press, Mount Road, Madras—*Editor* C. R. Srinivasan B. A.